# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

## முன்னுரை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகளை எழுதும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை தேர்வாணையம் அவ்வப்போது வெளியிட்டு வருகிறது.

விண்ணப்பதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள், விதிகள், அரசாணைகள், தேர்வாணைய நடைமுறை விதிகள் போன்றவற்றை உள்ளடக்கி விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் வெளியிடப்படுகின்றன.

தேர்வாணையத்தின், விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் தற்போது 22.03.2022 அன்று முதல் திருத்தியமைக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

## Introduction

From time to time the Tamil Nadu Public Service Commission issues instructions to applicants appearing for the various competitive examinations conducted by the Commission.

Keeping in mind the welfare of the applicants, the Commission's instructions to applicants are issued incorporating the latest Acts, Rules, Government Orders, Commission's Rules of Procedure, etc.

The Commission's Instructions to Applicants have now been revised and re-issued with effect from 22.03.2022.

**செயலாளர்** Secretary

# விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்

**( 22.03.2022 முதல் திருத்தியமைக்கப்பட்டது)**

# Instructions to Applicants

**(Revised with effect from 22.03.2022)**

(Updated upto 03.06.2023)

Please refer the page No. 204 to see the details of amendments

## பொருளடக்கம்/Contents


| வ. எண் Sl. No. | பொருள் Subject | | பக்கஎண் Page No. |
|---|---|---|---|
| 1. | காலிப் பணியிடங்கள்அறிவிப்பு<br>Notification of Vacancies | ..... | 6 |
| 2. | இணைய வழியில் விண்ணப்பிக்கும் முறை<br>How to Apply Online | ..... | 6-30 |
| 3. | பொதுத் தகுதிக்கான நிபந்தனைகள்<br>General Eligibility Conditions | ..... | 30-34 |
| 4. | சிறப்புப் பிரிவுகள்<br>Special Categories | ..... | 34-43 |
| 5. | வயது வரம்புச் சலுகைகள்<br>Age Concession | ..... | 43-50 |
| 6. | தேர்வுக் கட்டணச் சலுகை<br>Fee Concession | ..... | 50-53 |
| 7. | நியமன ஒதுக்கீடு<br>Reservation of Appointments | ..... | 53-60 |
| 8. | குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதி<br>Minimum General Educational Qualification | ..... | 60-61 |
| 9. | கல்வி / தொழில் நுட்பக் கல்வித் தகுதி<br>Educational/Technical Qualification | ..... | 62-64 |
| 10. | தமிழ் மொழியில் தகுதி<br>Qualification in Tamil | ..... | 65-66 |
| 11. | பிற நிபந்தனைகள்<br>Other Conditions | ..... | 66-71 |
| 12. | தகுதி நீக்கம், முதலியன<br>Debarment, etc. | ..... | 72-79 |
| 13. | சான்றிதழ் சரிபார்ப்பு<br>Certificate Verification | ..... | 79-82 |

| | | | |
|---|---|---|---|
| 14. | இணையவழி விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட தகவல்களை சரிபார்த்தல்<br>Verification of Claims made in the Online Application | ..... | 83-127 |
| 15. | எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டம்<br>Syllabi for Written Examination | ..... | 127 |
| 16. | **நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு அறிவுரைகள், பதிலி எழுத்தரைப் பயன்படுத்துதல் முதலியன**<br>Special Instructions for Persons with Benchmark Disabilities, Usage of Scribes, etc. | ..... | 128-131 |
| 17. | தேர்வாணையம் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகள் (கொள்குறி வகைத் தேர்வுகள் மற்றும் விரிந்துரைக்கும் வகைத் தேர்வுகள்) எழுதும் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்<br>Instructions to candidates to be followed while appearing for written examinations (objective type and descriptive type) conducted by the Commission | ..... | 132-168 |
| 18. | **தெரிவுமுறை**<br>Selection Procedure | ..... | 169-177 |
| 19. | கலந்தாய்வு<br>Counselling | ..... | 177-179 |
| 20. | தொடக்க ஊதியம்<br>Initial Pay | ..... | 179 |
| 21. | தகுதிகாண் பருவம் மற்றும் பயிற்சி<br>Probation and Training | ..... | 179-180 |
| 22. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடனான தகவல் தொடர்புமுறை<br>Communication with the Tamil Nadu Public Service Commission | ..... | 180-182 |
| 23. | இணைப்பு<br>Annexure | ...... | 183-204 |
| 24. | Details of Amendments<br>திருத்தங்கள் குறித்த குறிப்புகள் | ...... | 205 |

# எச்சரிக்கை/ Warning

(1) **தேர்வாணையத்தின் தெரிவுகள் அனைத்தும் விண்ணப்பதாரரின் தர வரிசைப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.**

All recruitments by the Tamil Nadu Public Service Commission are purely merit based.

(2) **பொய்யான வாக்குறுதிகளைச் சொல்லி, தவறான வழியில் வேலை வாங்கித் தருவதாகக் கூறும் இடைத்தரகர்களிடம் விண்ணப்பதாரர் மிகவும் கவனமாக இருக்குமாறு எச்சரிக்கப்படுகிறார்.**

The Tamil Nadu Public Service Commission hereby cautions the applicants against touts and agents who may cheat, by making false promises of securing jobs through unfair means.

(3) **இது போன்ற தவறான மற்றும் நேர்மையற்றவர்களால் விண்ணப்பதாரருக்கு ஏற்படும் எவ்வித இழப்புக்கும் தேர்வாணையம் எந்த விதத்திலும் பொறுப்பாகாது.**

The Tamil Nadu Public Service Commission shall not be responsible or liable for any loss that may be caused to any applicant on account of indulging in any sort of dealings with such unscrupulous elements.

(4) **இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் அனைத்துத் தகவல்களுக்கும் விண்ணப்பதாரரே முழுப் பொறுப்பாவார். விண்ணப்பதாரர், தேர்விற்கு இணையவழியில் விண்ணப்பிக்கும்பொழுது, ஏதேனும் தவறு ஏற்படின், தாங்கள் விண்ணப்பித்த இணையச்சேவை மையங்களையோ / பொதுச் சேவை மையங்களையோ குற்றம் சாட்டக்கூடாது. விண்ணப்பதாரர் பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிக்கும் முன்னர், நன்கு சரிபார்த்தப் பின்னரே சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.**

Applicants are solely responsible for their claims in the online application. They cannot blame service providers like Internet Cafes / Browsing Centres / Common Service Centres for the mistakes made while applying online for recruitment. Applicants are advised to check the filled-in online application before finally submitting the same.

**1. காலிப்பணியிடங்கள் அறிவிப்பு**
**NOTIFICATION OF VACANCIES**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தேர்வாணைய உள்ளீட்டெல்லைக்குட்பட்டப் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை, நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கான அறிவிக்கைகளை தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடுகிறது. இத்தேர்வு அறிவிக்கை குறித்து ஒரு தமிழ் மற்றும் ஒரு ஆங்கில செய்தித்தாளில் அறிவிப்பு வெளியிடப்படும்.**

The Tamil Nadu Public Service Commission notifies vacancies for selection for appointment by direct recruitment to posts within the Commission's purview in the Commission's website. A short notice regarding such notification is also published in one Tamil and one English newspaper.

**2.** [6] [**இணையவழியில் விண்ணப்பிக்கும் முறை**

**HOW TO APPLY ONLINE**][6]

**2-A. விண்ணப்பதாரர் www.tnpscexams.in / www.tnpsc.gov.in ஆகிய தேர்வாணையத்தின் இணையதளங்கள் மூலம் இணைய** வழியில் **மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.**

Applicants should apply only through online mode in the Commission's websites viz., **www.tnpscexams.in** / **www.tnpsc.gov.in**

**2-B.** விண்ணப்பதாரர் தங்களுடைய ஒருமுறைப் பதிவுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும். பயோமெட்ரிக் உள்ளிட்ட ஆதார் எண்ணுடன் தொடர்புடைய தகவல்கள், விண்ணப்பதாரரை அடையாளம் காணும் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படும். தேர்வாணையம் அத்தகவல்களை சேமிக்கவோ, யாருடனும் பகிரவோ செய்யாது. விண்ணப்பதாரர் ஒருமுறைப் பதிவில் தங்களது ஆதார் எண்ணினை இணைப்பதற்கான ஒப்புதலை அளிக்குமாறு **கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விண்ணப்பதாரரின் உண்மைத் தன்மையினை** உறுதி செய்வதற்காக மட்டும் **Central Identities Data Repository-**க்கு ஆதார் தொடர்புடைய விவரங்களை தேர்வாணையம்

---

6. Amended vide Commission's orders dated 17.11.2022.

**பகிர்ந்துக் கொள்ளும். வருங்காலத்தில் விண்ணப்பிக்க இருக்கும் விண்ணப்பதாரர் அனைவரும் புதிதாக ஒருமுறைப் பதிவு எண்ணை உருவாக்குவதற்கும் / புதுப்பிப்பதற்கும் / ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள ஒருமுறைப் பதிவில் உள்நுழைவதற்கும், எந்த ஒரு தேர்வு அறிவிக்கைக்காக விண்ணப்பிப்பதற்கும் ஆதார் எண்ணினை இணைப்பது கட்டாயமானதாகும்.**

Linking Aadhaar number with One Time Registration (OTR) is mandatory for applicants. The information associated with the Aadhaar number including biometrics will be used only for identification purposes and will not be stored or shared. Applicants are requested to give their consent in their respective OTR. The Aadhaar details will be submitted to the Central Identities Data Repository (CIDR) only for the purpose of authentication. Linking of Aadhaar number is mandatory for all prospective candidates in order to create new OTR / renew / access the existing OTR and apply for any recruitment to be notified henceforth.

**2-C.** **ஒரு முறைப்பதிவு என்பது பதிவு செய்த நாள் முதல் ஐந்து ஆண்டுகள் வரை செல்லுபடியாகும். ஐந்து ஆண்டுகள் முடிந்த பின்னர், விண்ணப்பதாரர், ஒருமுறைப் பதிவினை** (One Time Registration), **அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தினைச் செலுத்தி கட்டாயம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஒருமுறைப் பதிவு என்பது தேர்வுக்கான விண்ணப்பத்திலிருந்து மாறுபட்டதாகும். விண்ணப்பதாரர் தேர்வு எழுத விரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும், தனித்தனியே இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.**

One Time Registration is valid for five years from the date of registration. After completion of five years, the applicant must renew the One Time Registration by paying the fee prescribed.
The One Time Registration is different from the application for the examination. An applicant should make an online application separately for each and every examination for which he intends to appear.

**2-D.** ஒருமுறைப்பதிவின்போது, விண்ணப்பதாரர் மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட தங்களது புகைப்படத்தினை ஸ்கேன் செய்து, **20KB - 50KB** அளவில் **'*Photograph.jpg*'** என்றும், கையொப்பத்தினை **10KB - 20KB** அளவில் **'*Signature.jpg*'** என்றும் **CD / DVD / pen drive** போன்ற ஏதேனும் ஒன்றில் **200 DPI** என்ற அளவில் ஒளிச்செறிவு இருக்குமாறு சேமித்து, பதிவேற்றம் செய்வதற்கு தயாராக வைத்திருக்க வேண்டும்.

During One Time Registration, the applicants should keep ready the scanned image of their photograph, taken within the last 3 months of size 20 KB – 50 KB and saved as '*Photograph.jpg'* and signatureof size 10 KB – 20 KB and saved as '*Signature.jpg*'. Both photograph and signature, of 200 DPI resolution, should be saved in a CD / DVD / pendrive, in order to upload the same.

**2-E. ஒரு முறைப்பதிவு என்பது எந்தவொரு பதவிக்கான விண்ணப்பம் அல்ல. இது விண்ணப்பதாரரின் விவரங்களைப் பெற்று அவர்களுக்கென தனித்தனியே தன்விவரப் பக்கம் ஒன்றினை உருவாக்க மட்டுமே பயன்படும். எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர், தேர்வாணைய இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அப்பதவிக்குரிய அறிவிக்கையில் 'APPLY' என்ற உள்ளீடு வழியே ஒருமுறைப் பதிவுக்குரிய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உள்ளீடு செய்து விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தாங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர் ஏற்கனவே ஏற்படுத்திய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகிய விவரங்களை மறந்துவிட்டால், அவற்றை "FORGOT PASSWORD மற்றும் FORGOT USER ID" ஆகிய விருப்பத் தெரிவுகள் மூலம் மீண்டும் பெறலாம்/ உருவாக்கலாம். விண்ணப்பதாரருக்கு பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகிய விவரங்களை தேர்வாணையம் வழங்காது.**

**One Time Registration is not an application for any post**. It is just a collection of information from the applicants and provides a separate dashboard to each applicant to facilitate maintenance of their own profile. An applicant who wishes to apply for any post shall click **'APPLY'** against the post notified in the Commission's website and use the same User ID and Password given for One Time Registration. User ID and Password are to be created by the applicants themselves. In case the applicant forgets the User ID and Password, he can retrieve or reset them using **"FORGOT PASSWORD AND FORGOT USER ID"** options. The Commission will not furnish User ID and Password details to the applicants.

**2-F.** **ஒரு முறைப்பதிவு** (OTR) **செய்வதற்கு, பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவை கட்டாயமாகும். மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவற்றைத் தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.** தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் தொடர்பான முதனிலை எழுத்துத் தேர்வு முடிவுகள், முதன்மை எழுத்துத் தேர்வு / வாய்மொழித் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் பட்டியல், சான்றிதழ் பதிவேற்றத்திற்கான தேதி மற்றும் நேரம், வாய்மொழித் தேர்வு முதலியன தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்களுக்கு தனிப்பட்ட தகவல்கள் ஏதும் அஞ்சல் வழியே அனுப்பப்பட மாட்டாது. இருப்பினும், மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள், தேதிகள், சான்றிதழ் பதிவேற்றம், சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் வாய்மொழித் தேர்வு முதலியன குறித்த தகவல்களை, விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்டுள்ள அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வாயிலாக தெரிவிப்பது தேர்வாணையத்தினால் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் வசதியாகும். விண்ணப்பதாரர்கள், தேர்வுகள் தொடர்பான அனைத்துத் தகவல்களுக்கும் தேர்வாணையத்தின் இணையதளத்தினைத் தொடர்ந்து கவனிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். **தவறான அல்லது பயன்பாட்டில் இல்*லா*த மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவற்றால், தேர்வு தொடர்பான தகவல்கள் விண்ணப்பதாரருக்கு சென்றடையவில்லையென்றாலோ/தொழில் நுட்பச் சிக்கல்கள் உள்ளிட்ட காரணங்களால் விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி / மின்னஞ்சல் சென்றடைவதில் / பெறுவதில் சிக்கல்/தாமதம் ஏற்பட்டாலோ/சென்றடைய தவறினாலோ தேர்வாணையம் எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது.** இது தொடர்பாக விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

A valid e-mail ID and mobile number is mandatory for One Time Registration. E-mail ID and mobile number are to be kept in “ACTIVE” mode. The Commission shall publish the Preliminary Examination results, list of candidates shortlisted for Main Written Examination / Oral Test, Certificate Upload date and time, Oral Test etc., in the Commisison’s Website. No individual Communication shall be sent to the candidates by Post. However, the Commission provides the additional facility to the candidates by informing the above said dates, events and intimation relating to Certificate upload, Certificate Verification and Oral Test etc., via SMS and e-mail through the registered Mobile Number and email ID. Candidates are directed to watch the Commission’s website periodically for all updates and intimations. The Commission shall not be responsible if the communication does not reach the applicant due to

incorrect / invalid e-mail ID /mobile number and failure / delay in delivery of SMS / email to the candidates due to any reason including technical issues. Any representation from the candidates for non-receipt of SMS or e-mail will receive no attention.

**2-G.** ஒருமுறைப் பதிவின்போது அளிக்கப்பட வேண்டிய தகவல்கள்
Details to be furnished during One Time Registration

(i) **விண்ணப்பதாரர் இணையவழியில் பதிவு செய்யும்பொழுது**, **பத்தாம் வகுப்பு** (SSLC) **பதிவு எண்**, **சான்றிதழ் எண்**, **தேர்ச்சி பெற்ற ஆண்டு**, **மாதம்**, **பயிற்று மொழி மற்றும் சான்றிதழ் வழங்கிய குழுமம் ஆகிய தகவல்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும். மேற்படி விவரங்கள் தவறாக பதிவு செய்திருப்பது கண்டறியப்பட்டால்**, **தேர்வுக்கான இணையவழி விண்ணப்பம் எந்தவொரு நிலையிலும் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்**.

Applicants shall furnish their correct SSLC Register Number and Certificate Number, Month and Year of Passing, Medium of Instruction and Name of the Board which issued the certificate, while registering online. If any detail furnished is found to be wrong, online application will be rejected at any stage after due process.

(ii) **பத்தாம் வகுப்பு** (SSLC) **தேர்ச்சிக்கு**, **ஒன்றுக்கு மேற்பட்ட மதிப்பெண் சான்றிதழ்கள் வைத்திருக்கும் விண்ணப்பதாரர்**, **தாங்கள் இறுதியாக தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற சான்றிதழில் உள்ள விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும்**.

Applicants who have more than one SSLC mark sheet, should enter the details available in the mark sheet issued on the final attempt in which he had passed the SSLC examination.

(iii) விண்ணப்பதாரர் பத்தாம் வகுப்பு **(SSLC)** தொடர்பான விவரங்கள் மட்டுமின்றி ஒருமுறை பதிவுக்குத் தேவையான மற்ற அனைத்து விவரங்களையும் எத்தகைய தவறுமின்றி கவனமுடன் அளிக்க வேண்டும். இவ்விவரங்கள், ஒவ்வொரு தேர்வுக்கும் இணையவழியில் விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரரால் அவ்வப்பொழுது அளிக்கப்படும் மற்ற அனைத்து விவரங்களுக்கும் அடிப்படையாக இருக்கும்.

Besides details related to SSLC, all other details required in the One Time Registration, shall be furnished without any mistake, as these details shall form the basis of all other details given subsequently by the applicant while filling the online application for each recruitment.

**2-H.** <u>ஒருமுறைப் பதிவில் திருத்தம்</u>
<u>One Time Registration (OTR) Edit:</u>

விண்ணப்பதாரர், ஒருமுறைப் பதிவில் அளித்துள்ள விவரங்களை, ஆதாரச் சான்றுகளை பதிவேற்றம் செய்து தேவைப்படும் பொழுது திருத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

The candidates shall be permitted to edit the details in the OTR whenever required by uploading the supporting documents.

**2-I.** ***ஒருமுறைப் பதிவில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின், அதனை விண்ணப்பதாரர், இணையவழியில் விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னதாகவே சரி செய்து விட வேண்டும். விண்ணப்பதாரருடைய ஒருமுறைப் பதிவில் உள்ள விவரங்கள் தானாகவே போட்டித்தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களில் நிரப்பப்படும் என்பதால், ஒருமுறைப் பதிவில் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறாக இருப்பின், அதன் விளைவாக அவர்களது இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படலாம். எனவே, விண்ணப்பதாரர் தங்களது ஒருமுறைப் பதிவில் உள்ள விவரங்களை கவனமுடனும், சரியாகவும் நிரப்புமாறு அறிவுறுத்தப்படுகின்றார்.***

Any changes in the One Time Registration must be made before the submission of online application, since the details furnished in the One Time Registration will be filled-in automatically in the online application. Hence, incorrect particulars furnished in the One Time Registration may result in rejection of online application after due process. Applicants are therefore advised to fill in the One Time Registration particulars carefully and correctly.

**2-J.** ஒருமுறைப்பதிவு அல்லது இணைய வழி விண்ணப்பங்களை நிரப்புவது குறித்த அறிவுரைகளை விண்ணப்பதாரர் பின்பற்றாததால் வரும் எந்த விளைவுகளுக்கும் தேர்வாணையம் பொறுப்பாகாது.

The Commission will not be responsible for any consequences arising out of failure on the part of the applicants to adhere to the instructions issued regarding One Time Registration or filling up of online application.

**2-K.** **ஒரு முறைப்பதிவு குறித்த அறிவுரைகள் மற்றும் விளக்கங்கள் www.tnpscexams.in / www.tnpsc.gov.in ஆகிய இணைய தளங்களில் கொடுக்கப்பட்டுள்ளன**.


The instructions and illustration regarding One time Registration are available in the website viz., **www.tnpscexams.in/ www.tnpsc.gov.in**

**2-L.** **ஏற்கனவே பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் பெற்றிருக்கும் விண்ணப்பதாரர் அதனைப் பயன்படுத்தி உள்நுழையலாம்**. **ஒருமுறைப்பதிவில் ஏற்கனவே பதிவு செய்துள்ள புகைப்படம் உள்ளிட்ட விவரங்களுடன்**, **முந்தைய இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றப்பட்ட புகைப்படங்களும் திரையில் தெரியவரும்**. **விண்ணப்பதாரர் மேலும் தொடரும் முன்**, **ஒருமுறைப் பதிவில் தங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்களை சரிபார்த்து மீண்டும் உறுதி செய்து கொள்ள வேண்டும்**. **தேர்வாணையத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஒவ்வொரு தேர்வுக்கும் விண்ணப்பிக்கும்போது**, **அதற்குரிய கூடுதலாக தேவைப்படும் விவரங்களையும் பதிய வேண்டும்**. **விண்ணப்பதாரர் ஒருமுறைப்பதிவில் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்கள் ஏதேனும் தவறாக இருப்பின்**, OTR Edit **என்ற விருப்பத் தெரிவின் மூலம்**, **திருத்தங்கள் மேற்கொள்ளலாம்**. **ஒருமுறைப் பதிவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அதன்பின்னர் சமர்ப்பிக்கப்படும் இணையவழி விண்ணப்பங்களில் மட்டுமே தோன்றும்**.

An applicant already having user ID and password, has to login. The available One Time Registration particulars will be displayed on the screen, including the photograph furnished at the time of One Time Registration, as well as the photographs uploaded with previous online applications. Applicants shall check and confirm the One Time Registration details before proceeding further.

Thereafter, the applicants shall fill up additional details required in the specific recruitment application. If any of the One Time Registration details are found to be incorrect, the same should be corrected by clicking on OTR Edit. Changes made in the One Time Registration will be reflected only in online applications to be submitted subsequently.

**2-M.** தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்ட அன்றோ, அதற்கு பிறகோ எடுக்கப்பட்ட புகைப்படத்தை இணையவழியில் ஒவ்வொருமுறை விண்ணப்பிக்கும்போதும் விண்ணப்பதாரர் பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பதாரர் தங்களது விண்ணப்பத்தில் கடவுச்சீட்டுக்குரிய அளவிலான (உயரம் **4.5**செ.மீ. [170 pixels] மற்றும் அகலம் **3.5**செ.மீ. [130 pixels]) வெள்ளைப் பின்னணியில், முகம் மற்றும் இரண்டு காதுகளும், கழுத்துப்பகுதியும் தெளிவாகத் தெரியுமாறு சரியான அளவு **(Correct Size)** மற்றும் சரியான வடிவத்திலான **(Correct Format)**, புகைப்பட ஸ்டூடியோவில் **(Photo Studio)** எடுக்கப்பட்ட வண்ணப் புகைப்படத்தினை மட்டுமே பதிவேற்றம் செய்ய வேண்டும். புகைப்படத்தின் கீழே விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி தெரியுமாறு அச்சிடப்பட்டிருக்க வேண்டும். புகைப்படத்தின் **4.5** செ.மீ. (170 pixels) மொத்த உயரத்தில், விண்ணப்பதாரரின் படம் **3.0** செ.மீ. (115 pixels) ஆகவும், விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி ஆகிய தகவல் **1.5**செ.மீ. (55 pixels) ஆகவும் இருக்க வேண்டும். புகைப்படத்தைப் பதிவேற்றம் செய்வதற்கு டிஜிட்டல் வடிவில் **CD / DVD / pendrive/hard drive** போன்ற ஏதேனும் ஒன்றில் சேமித்து வைத்திருக்க வேண்டும்.



Applicants shall upload their photograph taken on or after the date of notification at the time of submission of each and every online application.The photograph should be in colour, of passport size, against a white background and taken in a photo studio. The applicant should be photographed in frontal view showing both ears and part of the neck.The applicant should ensure that the name of the applicant and the date of photography (i.e., on or after the date of notification) are printed at the bottom of the photograph. The face of the applicant as well as hisname and date of photography should be clearly visible in the photograph of height 4.5 cm (170 pixels) and width 3.5 cm (130 pixels). Of the total height of the photograph, the image of the applicant shall be 3.0 cm (115 pixels). and the applicant's name and date of photography shall be 1.5 cm (55 pixels),as illustrated above. The photograph should be saved in a digital format (in CD / DVD / pendrive/ hard drive), ready for uploading.They should also upload the digital copy of their signature.

**2-N.** டிஜிட்டல் வடிவிலான புகைப்படம் இல்லையெனில், புகைப்படத்தின் கீழே விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி அச்சிடப்பட்ட கடவுச்சீட்டுக்குரிய **(Passport Size)** அகலம் **3.5** செ.மீ. (130 pixels) மற்றும் உயரம் **4.5** செ.மீ. (170 pixels) அளவிலான புகைப்படத்தினை ஒரு வெள்ளைத்தாளில் ஒட்டி, அத்தாளினை **200 DPI** ஒளிச்செறிவு என்ற அளவில் ஸ்கேன் செய்து புகைப்படத்தை மட்டும் **CROP** செய்து **20 KB – 50 KB** என்ற அளவில்**"Photograph.jpg"** என சேமித்து, அதனைப் பதிவேற்றம் செய்ய வேண்டும். **புகைப்படம் ஒட்டப்பட்ட முழுத்தாளினையும் ஸ்கேன் / பதிவேற்றம் செய்யக்கூடாது.**

சுயமாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள்**(Selfie)**, கைப்பேசியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், நகலெடுக்கப்பட்ட**(Xerox)** புகைப்படங்கள், குடும்ப விழாக்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், மரம், செடி, கொடி, கட்டடங்கள் போன்ற பின்னணியைக் கொண்டு எடுக்கப்பட்ட புகைப்படங்கள்எவற்றையும் பதிவேற்றம் செய்யக்கூடாது. விண்ணப்பதாரரின் புகைப்படமின்றி வேறு இயற்கைக்காட்சிகள், விலங்குகள், கட்டடங்கள் போன்ற புகைப்படத்தினை பதிவேற்றம் செய்யக்கூடாது. இவ்வறிவுரைகளை மீறி, பொருத்தமற்ற புகைப்படங்களை பதிவேற்றம் செய்யும் விண்ணப்பதாரரின் இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

If the photograph is not available in a digital format, a passport-size photograph showing the image of the applicant along with the name of the applicant and the date of photography printedat the bottom, in the same dimensions as specified above, may be pasted on a plain white paper and scanned to obtain a resolution of 200 DPI. The image should then be cropped to show only the photograph of size 20 KB–50KB and saved as '*Photograph.jpg'* and uploaded. **The entire sheet of white paper on which the photograph is pasted should not be scanned / uploaded**. Photographs taken using cellular phones, selfies, photocopies (Xerox) of photographs, photographs taken during family functions, at tourist places or against a backdrop of plants or buildings should not be uploaded. Photographs of nature, wildlife, buildings, etc. shall not be uploaded. In case of uploading an inappropriate photograph, in violation of the aforementioned instruction, the application is liable to be rejected after due process.

**2-O.** கையொப்பத்தினை பதிவேற்றம் செய்வதற்கு முன்பு, விண்ணப்பதாரர் ஒரு வெள்ளைத்தாளில் அகலம் **6** செ.மீ. (230 pixels) உயரம் **2** செ.மீ. (75 pixels) கொண்ட கட்டம் வரைந்து, அதில் நீலம் அல்லது கருப்பு நிற மை பேனாவைப் பயன்படுத்தி கையொப்பமிட வேண்டும். கையொப்பமிட்ட வெள்ளைத் தாளினை **200 DPI** என்ற ஒளிச்செறிவில் ஸ்கேன் செய்து **10KB – 20KB** என்ற அளவில் **"Signature.jpg"** என சேமித்து அதனைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

Prior to uploading of signature, the applicant shall draw a box of dimension 6.0 x 2.0 cm (230 pixels x 75 pixels) on a white paper and sign within the box, using blue or black ink pen. The paper should then be scanned to obtain a resolution of 200 DPI. The image should then be cropped to show only the box with the signature, of size 10 KB –20KB and saved as '*Signature.jpg*' and uploaded.

**2-P.** விண்ணப்பதாரரின் தெளிவான புகைப்படம் மற்றும் கையொப்பம் உரிய அளவு மற்றும் வடிவத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். புகைப்படம் மற்றும் கையொப்பம் பதிவேற்றம் செய்யப்படாமலோ / பதிவேற்றம் செய்யப்படும் புகைப்படம் மற்றும் கையொப்பம் தெளிவாக

**இல்லாமலோ இருப்பின், இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Clear images of the photograph and the signature should be uploaded in the correct dimensions, size and format. Failure to upload / upload clear images of the photograph and signature will result in rejection of online application after due process.

**2-Q.** **விண்ணப்பதாரர் இணைய வழியில் விண்ணப்பிக்கும் போது, இரண்டு மாவட்டங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார். தேர்ந்தெடுத்த இரு மாவட்டங்களுள் ஏதேனும் ஒன்றில் உள்ள பல தேர்வு மையங்களுள் ஒன்றில் அவர் தேர்வெழுத அனுமதிக்கப்படுவார். மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரரைப் பொறுத்த வரையில், ஒரு மாவட்டத்தை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார். தேர்ந்தெடுக்கப்பட்ட அதே மாவட்டத்தில் உள்ள பல தேர்வு மையங்களுள் ஒரு தேர்வு மையத்தில் அவர் தேர்வெழுத அனுமதிக்கப்படுவார்.**

While applying online, applicants shall be permitted to choose **two** district centres as their preference for the examination. Applicants shall be allotted a venue in one of these two district centres. However, applicants with benchmark disability (differently-abled applicants), shall be permitted to choose only **one** district centre and shall be allotted a venue in that district centre.

**2-R.** **விண்ணப்பதாரர் ஒருமுறைப் பதிவில் தமது விவரங்களைப் பதிவு செய்திருந்த போதிலும், அவர் குறிப்பிட்ட தேர்விற்கு விண்ணப்பிக்கும் பொழுது அந்தத் தேர்வுக்கான இணையவழி விண்ணப்பத்தில் பதிவு செய்த விவரங்கள் மட்டுமே அவர் தரும் இறுதி விவரங்களாக எடுத்துக் கொள்ளப்படும்.**

Though the applicants furnish details / information in the One Time Registration, the details in the online application for the recruitment concerned alone will be taken into consideration for that recruitment.

**2-S.** <u>**விண்ணப்பத்தை சரிபார்க்க வாய்ப்பு**</u>

<u>Application Preview</u>

(i) **விண்ணப்பதாரர் இணையவழி விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விவரங்களை அதற்குரிய இடங்களில் கவனமுடன் பூர்த்தி செய்தபின், விண்ணப்பத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் "SAVE AND PROCEED" என்ற பொத்தானை அழுத்த வேண்டும். விண்ணப்பதாரர் "SAVE AND PROCEED" பொத்தானை அழுத்துவதற்கு முன், விண்ணப்பத்தின் ஒவ்வொரு குறிப்பிட்ட கலத்தையும் சரிபார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.**

Applicants should carefully fill in the details in the online application at the appropriate places and click on the "**SAVE AND PROCEED**" button at the end of each page of the application. Before pressing the "**SAVE AND PROCEED**" button, applicants are advised to verify each particular field in the application.

(ii) **விண்ணப்பதாரர் தமது இணையவழி விண்ணப்பத்தினை நிரப்பும்பொழுது விண்ணப்பத்தினை திருத்தவோ / தகவல்களை சேர்க்கவோ / நீக்கவோ முடியும். விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிப்பதற்கு முன்பு, விண்ணப்பத்தினை சரிபார்க்க வாய்ப்பு வழங்கப்படும். இதன்படி "PREVIEW" பொத்தானை அழுத்துகின்றபோது விண்ணப்பதாரரின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலுக்கு விண்ணப்பத்தின் PREVIEW அனுப்பப்படும். இத்தகவல் விண்ணப்பதாரரின் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்குக் குறுஞ்செய்தியாகவும் அனுப்பப்படும்.**

Applicants can edit / add / delete any information while filling the online application. Before finally submitting the application, candidates will be given an option of seeing a preview of their application. As soon as an applicant clicks the button meant for preview, a sms will be sent to the registered mobile number, informing the availability of such a preview in the registered email id provided by the candidate.

(iii) **இணைய வழி விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரர் மேற்குறிப்பிடப்பட்ட வரைவு விண்ணப்பத்தில் (preview) உள்ள விவரங்களை கவனமாக சரிபார்த்து ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், அவற்றை சரிசெய்து கொள்ள வேண்டும். இப்பணியினை விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதிநாள் மற்றும் நேரம் வரை மேற்கொள்ளலாம். விண்ணப்பம் இறுதியாக சமர்ப்பிக்கப்படாமலோ அல்லது ஏதேனும் விவரங்கள் விடுபட்டிருந்தாலோ அதற்கு விண்ணப்பதாரர் மட்டுமே முழுபொறுப்பாவார்.**

Once the applicant desires to make modifications based on the preview arrangement as indicated in the paragraph above, he may re-open the application and make necessary modifications using the Edit option and make the final submission of the corrected document, before the last date prescribed for submission of online application. It is the responsibility of the applicant to carefully check the details available in the preview and make suitable corrections, if any, in the application / OTR before final submission. The applicant will be solely responsible for any non-rectification or non-submission of application.

(iv) **விண்ணப்பதாரர் இறுதியாக சமர்ப்பி (submit) என்ற பொத்தானை அழுத்துவதன் வாயிலாகவே அவர் ஒரு பதவிக்கு இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்துள்ளார் என கருதப்படும். விண்ணப்பதாரரின் மின்னஞ்சலில் கிடைக்கப் பெற்ற preview-ஐ மட்டும் கொண்டு எவ்வகையிலும் அவர் ஒரு குறிப்பிட்ட தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளார் எனக் கருத இயலாது.**

An individual is considered to have applied for a recruitment, if and only if, he finally submits the application, by clicking the 'SUBMIT' button. **Mere availability of preview shall not be tantamount to 'having applied' for a particular recruitment.**

**2-T.** **இணையவழி விண்ணப்பத்தில் உரிய விவரங்களைப் பதிவு செய்த பின்னர் விண்ணப்பதாரர் அவர்தம் தேர்வுக்கட்டணத்தை செலுத்த கீழ்க்காணும் ஏதேனும் ஒரு வழிமுறையினைத் தேர்வு செய்யலாம்.**

(i) **இணையவழி செலுத்தும் முறை**
(ii) **பற்று அட்டை / கடன்அட்டை முறை**

After submitting the details in the online application, applicants can choose any one of the following modes for making payment of examination fee.

(i) Net Banking
(ii) Debit Card/ Credit Card

**2-U.** <u>இணையவழியில் கட்டணம் செலுத்தும் முறை</u>

<u>Online Fee Payment Mode</u>

(i) **விண்ணப்பதாரர் இணையவழிக்கட்டணம் செலுத்தும் முறையை தெரிவு செய்தபின், விண்ணப்பத்தில் அதற்குரிய கூடுதல் பக்கம் திரையில் தெரியவரும். அந்த இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை கவனமாகப் பின்பற்றி, தேவையான விவரங்களைப் பதிவு செய்து கட்டணம் செலுத்த வேண்டும். இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையில் பணப் பரிமாற்றம் தோல்வியடையும் சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையில் தோல்வி ஏற்படும் நிலையில், விண்ணப்பதாரர் ஏற்கனவே செய்த பணப் பரிமாற்ற நிலவரத்தினை சரிபார்க்க முடியும். ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பணப் பரிமாற்றம் தோல்வியடைந்திருப்பின், விண்ணப்பதாரர் மீண்டும் இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையினைத் தேர்ந்தெடுத்து பணம் செலுத்த வேண்டும். இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையில் தோல்வி ஏற்பட்டால் விண்ணப்பதாரர் கணக்கில் பிடித்தம் செய்யப்படும் தொகை விண்ணப்பதாரர் கணக்கிலேயே திருப்பி சேர்க்கப்படும். அனைத்து விவரங்களையும் சரிபார்த்த பின்னர், விண்ணப்பதாரர் மேற்கொண்ட பணப்பரிமாற்ற நிலவரத்தை அறிந்து கொள்ளவழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்ட அனைத்துப் பணப் பரிமாற்றங்களிலும் தோல்வி ஏற்படும் நிலையில், விண்ணப்பதாரர் மீண்டும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையில் ஏற்படும் தடைகளுக்கு தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது. எனவே, கட்டணம் வெற்றிகரமாக செலுத்தப்பட்டதை உறுதி செய்து கொள்வது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.**

To facilitate payment of fees through the online mode, an additional page of the application format will be displayed wherein applicants may follow the instructions and fill in the requisite details to make payment. There is a possibility of online payment failure. Hence, if the online payment fails, applicants can check the status of the earlier transaction. If the earlier transactions have failed, the applicant shall re-try paying the fee again by online mode. In case of online payment failure, the amount debited from the applicant's account will be reverted to his account. After due verification and reconciliation, applicants have been given a provision to check the status of the transaction made. If all the attempts / transactions have failed, applicants have to make the payment again. The Commission is not responsible for online payment failure. It is the responsibility of the applicants to ensure that the transaction made by them is successful.

(ii) **இணையவழி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும்போது கட்டண விவரங்களைப் பதிவு செய்தபின்னர், அதற்கான தகவல் திரையில் வரும்வரை காத்திருக்கவும். இதற்கிடையில் "Back" அல்லது "Refresh" பொத்தான்களை அழுத்தாமல் காத்திருக்க வேண்டும். இல்லையெனில் பணப்பரிமாற்றம் தடைபடும் அல்லது இரண்டாம் முறையாகப் பணம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும்.**

After submitting the payment information in the online application format, wait for the intimation from the server. Meanwhile, DO NOT press 'Back' or 'Refresh' button to avoid payment failure or double payment.

(iii) **இணையவழி பணப்பரிமாற்றம் வெற்றிகரமாக நிறைவுற்றவுடன், ஒரு விண்ணப்ப எண் / விண்ணப்பதாரருக்கானஅடையாளக் குறியீடு திரையில் தோன்றும். விண்ணப்பதாரர் அந்த விண்ணப்ப எண் / விண்ணப்பதாரருக்கான அடையாளக் குறியீடு ஆகியவற்றை அந்தத் தேர்வின் எதிர்காலத் தேவைக்காக குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.**

If the online transaction has been successfully completed, an Application Number / Applicant ID will be generated. Applicants should note the Application Number / ID for future reference in respect of the recruitment applied for.

(iv) **கட்டணம் செலுத்தும் முறையினை எந்நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு உண்டு**.

Tamil Nadu Public Service Commission reserves the right to change the mode of payment at any time.

(v) தேர்வாணையம் குறிப்பிட்டுக் கேட்டாலன்றி, **விண்ணப்பதாரர் இணையவழி விண்ணப்பத்தின் நகலினையோ அல்லது தொடர்புடைய ஆதாரச் சான்றிதழ்களையோ தேர்வாணையத்திற்கு அஞ்சல் வழியாக அனுப்பத் தேவையில்லை.**

Applicants need not send the printout of the online application or any other supporting documents to the Commission by post, unless asked for specifically.

**2-V.** <u>இணையவழி விண்ணப்பத்தில் திருத்தம்</u>
<u>Online Application Edit</u>

(i) இணையவழி விண்ணப்பத்தில் அளித்துள்ள அனைத்து விவரங்களையும், விண்ணப்பதாரர் அவ்விணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கடைசி தேதி வரை திருத்தம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

The candidates shall be permitted to edit all the details in the online application till the last date stipulated for submission of online application.

(ii) இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதிக்குப் பின்னர், அந்தந்த பதவிகளுக்கான அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, <u>விண்ணப்பத் திருத்தச் சாளரம்</u> (Application Correction Window) மூன்று நாள்களுக்கு செயல்படுத்தப்படும். அக்காலத்தின்போதும் விண்ணப்பதாரர்கள் தங்களது இணையவழி விண்ணப்பங்களில் உள்ள விவரங்களை திருத்தம் செய்து கொள்ள இயலும்.

After the last date for submission of online applications, Application Correction Window shall open for three days as stipulated in the Commission's Notification for the prescribed posts. During that period, Candidates will also be able to edit the details in their online application.

(iii) விண்ணப்பதாரர் தமது இணைய வழி விண்ணப்பத்தில் உள்ள புகைப்படம் மற்றும் / அல்லது கையொப்பத்தினை மாற்றம் செய்ய விரும்பினால், இணைய வழி விண்ணப்பத்தில் உள்ள EDIT ல் சென்று அவற்றை மறு- பதிவேற்றம் செய்து இறுதியாக சேமித்தபின் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க (SUBMIT) வேண்டும்.

If the applicant desires to change their photograph and / or signature in their online application, the candidate shall select the edit option in the online application to re-upload them which must be saved finally before submitting the online application.

(iv) இணையவழி விண்ணப்பத்தில் உள்ள தகவல்களில், சில தகவல்கள் தேர்வரின் ஒருமுறை நிரந்தரப் பதிவில் இருந்து முன் கொணரப்பட்டவை. எனவே, அத்தகவல்களைத் திருத்தம் செய்வதற்கு விண்ணப்பதாரர், முதலில் தனது ஒருமுறை நிரந்தரப் பதிவில் (OTR) ல் உள்ள Edit profile -ல் சென்று உரிய திருத்தங்களை செய்து, அவற்றை சேமிக்க வேண்டும். அதன் பின்னர், இணையவழி விண்ணப்பத்தில் உள்ள EDIT ல் சென்று விண்ணப்பத்தில் திருத்தம் செய்ய விரும்பும் விவரங்களை திருத்தம் செய்து, இறுதியாக சேமித்தபின் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க (SUBMIT) வேண்டும். தேவைப்படின், அதற்குரிய நகலினை அச்சுப்பிரதி (print out) எடுத்துக் கொள்ளலாம்.

Some of the information contained in the online application have been brought forward from the candidates' one-time registration. If such information have to be edited in the online application, the candidate shall select edit profile option in One Time Registration (OTR) and shall make and save necessary corrections. After doing so, the candidate shall select the edit option in the online application and edit

the details as desired. The candidate shall save the changes and submit it finally. The candidate shall take a print out of the same if required.

(v) விண்ணப்பத்தில் திருத்தம் செய்த பிறகு, திருத்தப்பட்ட விவரங்களை இறுதியாக சேமித்து சமர்ப்பிக்கவில்லையென்றால், தேர்வர் இதற்கு முன்பு சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். திருத்தம் செய்யப்பட்ட விவரங்களின் அடிப்படையில், தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால், உரிய தேர்வுக் கட்டணத்தை இணைய வழியாக செலுத்தவேண்டும். உரியத் தேர்வுக் கட்டணத்தை ஏற்கனவே செலுத்திய தேர்வர்கள் மீண்டும் செலுத்தத் தேவையில்லை.

After editing the online application, if the edited details are not finally saved and submitted by the candidate, the details provided by the candidate in the application submitted prior to editing shall only be considered. If the candidate has to pay fee based on the edited details, the candidate shall pay the prescribed examination fee in online. Candidates who have already paid the examination fee are not required to pay.

(vi) விண்ணப்ப திருத்தச் சாளர காலத்தின் கடைசி தேதிக்குப் பின்னர், விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பங்களில் மாற்றம் செய்ய இயலாது. விண்ணப்பதாரர்களால் இறுதியாக அளிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையிலேயே விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். மேலும், இணைய வழி விண்ணப்பத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களைத் திருத்தம் செய்ததன் விளைவாக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமாயின், அதற்கு விண்ணப்பதாரரே பொறுப்பாவார், தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்காது. இணையவழி விண்ணப்பத்தில் உள்ள உரிமைகோரல்களை மாற்றம் செய்வது குறித்து எந்தவொரு தகவல் தொடர்பு முறையிலும் பெறப்படும் கோரிக்கைகள் / முறையீடுகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

After the last date of Correction Window period, no modification shall be made in the online applications. The applications shall be processed as per the details finally furnished by the candidates. It is the responsibility of the

candidates and the Commission has no liability for subsequent rejection of application consequent to the editing details already submitted in the online application. Request / representation received for modification of claims in the online application, in any mode shall not be entertained.

குறிப்பு / *Note:*

(a) **கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும்போது, இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது தொழில்நுட்பச் சிக்கல்களோ எழவாய்ப்புள்ளது. எனவே, விண்ணப்பதாரர் தேர்வுக்கு விண்ணப்பிக்கக் குறிப்பிட்டுள்ள கடைசிநாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே, போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.**

*Applicants are advised in their own interest to apply online much before the closing date and not to wait till the last date to avoid the possibility of disconnection / inability / failure to log on to the Commission's website on account of heavy load on internet / website.*

(b) **மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது தேர்வாணையத்தின் கட்டுப்பாட்டிற்கு மீறிய வேறு காரணங்களால், விண்ணப்பதாரர் தமது இணையவழி விண்ணப்பத்தினை கடைசிகட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.**

*The Commission does not assume any responsibility for the applicants not being able to submit their online applications within the last date on account of the aforesaid reasons or for any other reason beyond the control of the Commission.*

(c) **ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனக்கான தனி மின்னஞ்சல் முகவரியையும், கடவுச்சொல்லையும் உருவாக்கி வைத்திருக்க வேண்டும். எந்த விண்ணப்பதாரரும் தனது மின்னஞ்சல் முகவரி, கடவுச்சொல் மற்றும் அலைப்பேசிஎண்ணை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடாது. விண்ணப்பதாரர் தமக்கான மின்னஞ்சல் முகவரி ஏதும் வைத்திருக்கவில்லையெனில், அவர்**

**விண்ணப்பிப்பதற்கு முன்னரே, புதிதாக ஒரு மின்னஞ்சல் முகவரியை உருவாக்கி இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், மின்னஞ்சல் முகவரியைத் தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஒருமுறைப்பதிவு அல்லது இணையவழி (online) விண்ணப்பங்கள் சார்ந்த கேள்விகள் / கோரிக்கைகள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி மூலம் பெறப்பட்டால் மட்டுமே பதில் அளிக்கப்படும்.**

*Every applicant should have his own email ID and password. No applicant should share his e-mail ID, password, mobile number with any other person. In case an applicant does not have a valid personal e-mail ID, he should create a new email ID before applying online and must maintain that e-mail account live. Enquiries relating to One Time Registration / online applications will be answered only if the enquiries are received through registered e-mail ID.*

(d) **விண்ணப்பதாரர் ஒரு முறைப் பதிவில் / இணையவழி விண்ணப்பத்தில் தமது பெயர் மற்றும் தங்களது தந்தை அல்லது தாயார் பெயர் ஆகியவற்றை சான்றிதழ்களில் உள்ளபடி மிகச் சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.**

*The name of the applicant or name of his father or mother, should be spelt correctly in the application as it appears in the certificates / mark sheets.*

(e) **இணையவழி விண்ணப்பத்தில்** கொடுக்கப்பட்ட விவரங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் இடையே வேறுபாடிருப்பின், **விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர்** நிராகரிக்கப்படும்.

*Any discrepancy between the details as given in the online application and the documents submitted, shall result in the summary rejection of candidature after due process.*

(f) **விண்ணப்பதாரர் தமது இணையவழி விண்ணப்பத்தில் தரும் தவறான அல்லது முழுமையற்ற விவரங்கள் அல்லது விடுபட்டுப் போன விவரங்களால் ஏற்படும் விளைவுகளுக்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.**

*The Commission will not be responsible for any consequences arising out of furnishing of incorrect and/or incomplete details in the application or omission to provide the required details in the application.*

(g) தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு, தேர்வு எழுதுவதற்கான அனுமதிச்சீட்டு, ***www.tnpscexams.in*** /**www.tnpsc.gov.in** என்ற தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பதாரர் தமது **ஒருமுறைப் பதிவின் வாயிலாக** அவற்றைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அனுமதிச்சீட்டு தனியாக அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் தேர்வின் பொழுது அனுமதிச்சீட்டில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிபந்தனையையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

*The memorandum of admission (hall ticket) for eligible applicants will be made available in the Commission's website* ***www.tnpscexams.in*** /**www.tnpsc.gov.in** *for downloading by applicants* ***through their OTR.*** *The memorandum of admission will* ***not*** *be sent by post. The applicants must comply with each and every instruction given in the memorandum of admission.*

(h) **தெளிவுரை வேண்டுவோர்**, **தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தினை நேரில் அல்லது 1800 419 0958 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் மூலம்**, **அனைத்து வேலை நாட்களிலும் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம்**.

*Applicants requiring clarification, can contact the office of the Tamil Nadu Public Service Commission in person or over the Toll-Free No.1800 419 0958 on all working days between 10.00 am and 5.45 pm.*

(i) **ஒருமுறைப் பதிவு மற்றும் இணையவழி விண்ணப்பம் குறித்த சந்தேகங்களை *helpdesk@tnpscexams.in* என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்**.

*Queries relating to One Time Registration / online application may be sent to* ***helpdesk@tnpscexams.in***

(j) **இதர சந்தேகங்களை grievance.tnpsc@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.**

*Other queries may be sent to grievance.tnpsc@tn.gov.in*

**2-W.** **<u>நேரடி நியமனங்களுக்கான திருத்தப்பட்ட சான்றிதழ் பதிவேற்றம் செய்யும் முறை (தொகுதி I, II மற்றும் IV ல் அடங்கிய பணிகளில் உள்ள பதவிகள் நீங்கலாக)</u>**

**<u>Revised Procedure for uploading of documents for direct recruitments (except for the posts included in Group – I, II and Group IV Services).</u>**

(i) விண்ணப்பதாரர் இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும்பொழுதே, அவர்களால் அளிக்கப்படும் தகவல்கள்/உரிமை கோரல்களுக்கு ஆதாரமான அனைத்து சான்றிதழ்களையும் / ஆவணங்களையும் PDF வடிவத்தில் அதாவது (ஒன்று அல்லது பல பக்கங்கள் கொண்ட) 200 KBக்கு மிகாமல் உள்ள ஒரு PDF ஆவணமாக ஒவ்வொரு உரிமை கோரலுக்கும் ஆதாரமாகக் கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பதாரர் இ-சேவை மையங்கள் உள்ளிட்ட

அனைத்து வழிகளிலும் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்ய அனுமதிக்கப்படுவர். விண்ணப்பதாரர் தேவையான சான்றிதழ்களை / ஆவணங்களைப் பதிவேற்றம் செய்து விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

The candidates shall mandatorily upload the certificates / documents (in support of all the claims made / details furnished in the online application) at the time of submission of online application itself in PDF format i.e. one PDF file of not more than 200KB (with single or multiple pages) in support of each claim. The uploading of documents shall be permitted from all sources including e-seva centres. It shall be ensured by the candidates that the online application is submitted by uploading all the required certificates.

(ii) விண்ணப்பதாரர், எந்தப் பதவிக்கு விண்ணப்பித்தாரோ அந்த அறிவிக்கையின் எண் மற்றும் விண்ணப்ப எண்ணுடன் விண்ணப்பதாரரால் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள், அவ்விண்ணப்பதாரரது ஒருமுறைப் பதிவில் இணைக்கப்படும். எனவே, அவற்றை விண்ணப்பதாரர் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும்.

The uploaded credentials shall be mapped with the One Time Registration of the respective candidate along with the Application number and Notification Number (i.e., with reference to the notification for each post), so that they can be used during future submission of application by the same candidates.

(iii) பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்களை விண்ணப்பதாரர் தங்களது ஒருமுறைப் பதிவின் மூலம் சரிபார்த்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. ஏதேனும் சான்றிதழ்கள் தவறாகப் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தாலோ அல்லது பதிவேற்றம் செய்யப்படாமல் இருந்தாலோ அல்லது பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டி இருந்தாலோ, விண்ணப்பதாரர் விண்ணப்பத்திருந்த பதவிக்கான தேர்வு அனுமதிச் சீட்டினை தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் நாளுக்கு இரண்டு நாள்கள் முன்னர்

வரை (அதாவது தேர்வு நடைபெற உள்ள தேதிக்கு 12 நாள்கள் முன்னர் வரை) சான்றிதழ்களை திருத்தம் / பதிவேற்றம் / மறு பதிவேற்றம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

The candidates shall have the option of verifying the uploaded certificates through their OTR. If any of the credentials have wrongly been uploaded or not uploaded or if any modifications are to be done in the uploading of documents, the candidates shall be permitted to upload / re- upload the documents till two days prior to the date of hosting of hall tickets for that particular post. (i.e. twelve days prior to the date of examination)

(iv) ஆவணங்களைப் பதிவேற்றம் செய்தவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ, தேவையான ஆதார ஆவணங்களைப் (சரியாகவும் / தெளிவாகவும் / படிக்கக்

கூடியதாகவும்) பதிவேற்றம் செய்யாத விண்ணப்பதாரரின் இணையவழி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

The online application of the candidates who have not uploaded the required supporting documents (correctly / clearly / legibly) on or before the stipulated period shall be rejected.

(v) விண்ணப்பதாரரால் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள் அவர்களது ஒருமுறைப்பதிவுடன் இணைக்கப்பட்டு அவ்விவரங்கள் அதிகபட்சமாக இரண்டு வருடங்களுக்கு கணினி சர்வரில் (server) சேமித்து வைக்கப்படும். அதன் பின்னர் விண்ணப்பதாரர் வேறு ஏதேனும் பதவிகளுக்கு (அதாவது அவர்கள் ஆவணங்களைப் பதிவேற்றம் செய்த நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள்) விண்ணப்பிக்கும்பொழுது, அவர்களால் ஏற்கனவே பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள் அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக திரையில் காண்பிக்கப்படும் மற்றும் அவர்கள் மீண்டும் அந்த ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டியதில்லை. விண்ணப்பதாரர் ஆவணங்களைப் பதிவேற்றம் செய்த நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குப் பின்னர், ஏதேனும் பதவிகளுக்கு விண்ணப்பித்தால் அவர்களது அனைத்து ஆவணங்களையும் புதியதாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

The documents uploaded by the candidates shall be linked with OTR and retained in the server for a maximum period of two years. If the candidate applies subsequently for other posts within two years, the documents which were already uploaded shall be displayed to the candidate during the online application process for confirmation and the same need not once again be uploaded by the candidates. If the candidate applies to other posts after the period of retention i.e. two years, the candidate shall be instructed to upload all the documents afresh.

(vi) விண்ணப்பதாரர் இணைய வழியில் விண்ணப்பிக்கும் பொழுது பதிவேற்றம் செய்த ஆவணங்களின் அடிப்படையிலேயே இணைய வழி சான்றிதழ் சரிபார்ப்புப் பணி மேற்கொள்ளப்படும். தனியாக சான்றிதழ் பதிவேற்றம் செய்ய வழி இல்லை.

The Onscreen Certificate Verification (OCV) process shall be done based on the certificates uploaded at the time of application process stage. There shall not be a separate certificate upload window.

## 3. <u>பொதுத் தகுதிக்கான நிபந்தனைகள்</u>

## <u>GENERAL ELIGIBILITY CONDITIONS</u>

**விண்ணப்பதாரர் கீழ்க்காணும் தகுதிகளை, தேர்வாணையம் திருப்திபடும் வகையில் பெற்றிருக்க வேண்டும்.**

An applicant must satisfy the Commission on the following aspects:

### 3-A. <u>விண்ணப்பதாரரின் குடியுரிமை</u>

### <u>Citizenship</u>

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016-ன் பிரிவு 20(7)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, விண்ணப்பதாரர் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.**

That he is eligible as per the provisions of Section 20(7) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.

### 3-B. <u>ஒழுக்கமும், முன்வரலாறும்</u>

### <u>Character and Antecedents</u>

**பணி நியமனம் செய்யப்படுவதற்கு அவருடைய ஒழுக்கமும், முன்வரலாறும் அவரைத் தகுதிப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும்.**

That his character and antecedents are such as to qualify him for the appointment.

### 3-C. <u>இருதார மணம்</u>

### <u>Bigamy</u>

**ஆண் விண்ணப்பதாரர், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் உடையவராக இருத்தல் கூடாது. விண்ணப்பதாரர் பெண்ணாக இருப்பின், ஏற்கனவே மனைவியுடன் வாழும் ஒருவரைத் திருமணம் செய்தவராக இருத்தல் கூடாது.**

That he does not have more than one wife living or if such person is a woman, she is not married to any person who has a wife living.

**3-D.** <u>**வயது வரம்பு**</u>
<u>**Age Limit**</u>

**அந்தந்த பதவிக்கான சிறப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது வரம்பை தேர்வு அறிவிக்கை வெளியிடப்படும் ஆண்டின் ஜுலை முதல்நாள் அன்று பெற்று இருக்க வேண்டும்.**

That he satisfies the age prescribed in the Special Rules on the first July of the year in which the vacancy is notified.

<u>குறிப்பு/ *Note*</u>*:*

*(a)* தேர்வு அறிவிக்கை வெளியிடப்படும் ஆண்டின் **ஜுலை முதல் நாள் அன்று** பதினெட்டு வயது நிறைவு அடையாத எவரும் நேரடி நியமனத்தின் மூலம் மாநிலத்தின் எந்தப்பணிக்கும் நியமனம் செய்ய தகுதியற்றவர்களாவர்.

*No person shall be eligible for appointment to any service by direct recruitment, unless he has completed eighteen years of age on the first July of the year in which the vacancy is notified.*

*(b)* இந்த வயது வரம்பு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம், **2016**ன் பிரிவுகள் **20(8), 61, 63** மற்றும் **64**ல் அனுமதிக்கப்பட்ட வயது வரம்பு சலுகைகளுக்கும் இவ்வறிவுரைகளின் பத்தி **5**-ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கும் உட்பட்டதாகும்.

*The age limit prescribed shall be subject to the age concessions permitted under Sections 20(8), 61, 63 and 64 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 andas stated at paragraph 5 of these Instructions.*

**3-E.** **<u>தகுதி</u>**

**<u>Qualification</u>**

குறிப்பிட்ட பதவிக்கு சிறப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட பணி முன்அனுபவம் உள்ளிட்ட அனைத்துத் தகுதிகளையும், காலிப்பணியிட அறிவிக்கை வெளியிட்ட நாளன்று பெற்றிருக்க வேண்டும்.

That notwithstanding anything contained in the Special Rules, such a person also possesses the qualifications including experience prescribed for a post, on the date of notification of the vacancy:

**எனினும், பட்டப்படிப்புக்கான இறுதியாண்டு தேர்வு எழுதியவர்களும் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு– 1 ( Group - Iபணிகள்) –க்கு விண்ணப்பிக்கும் பொழுது, முதன்மைத் தேர்வுக்கான விண்ணப்பத்துடன் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றதற்கான ஆதாரத்தினை சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு முதனிலைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். அவ்வாறு ஆதாரச்சான்றினை சமர்ப்பிக்கத் தவறினால், அவர்கள் முதன்மைத் தேர்வினை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

Provided that the candidates who have written the final year Degree examination shall be admitted to the preliminary examination for recruitment to the posts included in Combined Civil Services Examination-I (Group I Services), subject to the condition that such candidates shall produce proof of having passed the Degree examination with their application for the main written examination, failing which they will not be admitted to the main written examination.

**3-F.** **<u>இந்திய அரசின் அல்லது மாநில அரசின் / யூனியன் பிரதேசத்தின் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்</u>**

**<u>Applicants in the Service of the Government of India or the Government of a State/ Union Territory</u>**

**நேரடி நியமனம் செய்யப்படுவதற்கு, தேர்வாணையத்தின் விளம்பரம்/ அறிவிக்கை நாளன்று அவர் இந்திய அரசுப் பணியிலோ அல்லது**

**மாநில அரசுப் பணியிலோ/ யூனியன் பிரதேசப் பணியிலோ இருந்திருக்கக் கூடாது.**

That on the date of notification for the purpose of direct recruitment he was not in the service of the Government of India or the Government of a State / Union Territory.

<u>குறிப்பு/ *Note*</u>*:*

**இவ்விதியைப் பொறுத்தமட்டில் கீழ்க்கண்டவர்கள் இந்திய அரசு அல்லது மாநில அரசு / யூனியன் பிரதேசப் பணியில் இருப்பவராகக் கருதப்பட மாட்டார்கள்.**

*For the purpose of this clause, a person shall be deemed to be not in the service of the* Government of India or the Government of a State/ Union Territory*:*

(a) **அவர் இந்திய அரசுப் பணியில் அல்லது மாநில அரசு / யூனியன் பிரதேசப் பணியில் முதலில் சேர்ந்த நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடையாதிருந்தால்.**

*If a period of five years has not elapsed since his first appointment to a service of the* Government of India or the Government of a State/ Union Territory*; or*

(b) **அவர் ஆதிதிராவிட வகுப்பினராகவோ அல்லது ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினராகவோ அல்லது பழங்குடியினராகவோ அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டவகுப்பு / சீர்மரபினராகவோ அல்லது இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவோ அல்லது பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினராகவோ இருந்தால்.**

*If he belongs to the Scheduled Castes or Scheduled Castes (Arunthathiyars) or Scheduled Tribes or Most Backward Classes / Denotified Communitiesor Backward Classes or Backward Classes (Muslim).*

**3-G.** **உடற்தகுதி**
**Physical Fitness**

**விண்ணப்பதாரர் பதவிக்கான உடற்தகுதி தொடர்பாக சிறப்பு விதிகள் / அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட உடற்தகுதிச் சான்றிதழை, பணிநியமன அலுவலர் திருப்தி அடையும் வகையில் சமர்ப்பிக்க வேண்டும்.**

An applicant must satisfy the appointing authority regarding his physical fitness for the post for which production of physical fitness certificate is prescribed in the Special Rules / Notification.

## 4. சிறப்புப் பிரிவுகள்
## SPECIAL CATEGORIES

**4-A.** **முன்னாள் இராணுவத்தினர்**

"**முன்னாள் இராணுவத்தினர்**" **என்பவர்**

(i) **இந்தியப் பாதுகாப்புப் படையில் எந்தவொரு பதவி நிலையிலேனும் (Rank) (களவீரராகவோ அல்லது களவீரரல்லாதவராகவோ) ஏற்புடையவராகக் கொள்ளப்பட்ட பின், தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கும் குறையாமல் பணிபுரிந்து, 01.07.1979 முதல் 30.06.1987 வரையிலான காலத்தில் (இரண்டு நாட்களும் உட்பட) கீழ்க்கண்டவாறு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.**

(a) **சொந்த வேண்டுகோளைத் தவிர்த்து பிற காரணங்களுக்காக, தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது; அல்லது**

(b) **ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் பணிபுரிந்து சொந்த விருப்பத்தில் வெளிவந்தவர்.**

(**அல்லது**)

(ii) **இந்தியப் பாதுகாப்புப் படையில் எந்தவொரு பதவி நிலையிலேனும்(Rank) (களவீரராகவோ அல்லது கள வீரரல்லதவராகவோ) பணிபுரிந்து 01.07.1987 அன்றோ அதற்குப் பிறகோ அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.**

(a) **அவருடைய சொந்த விருப்பத்தில் ஓய்வூதியத்துடன் வெளிவந்தவர்; அல்லது**

(b) **இராணுவப் பணியின் காரணமாகவோ அல்லது அவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைக் காரணங்களினாலோ, மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் வெளியேறி மருத்துவ அல்லது இயலாமை ஓய்வூதியம் பெற்று வெளிவந்தவர்; அல்லது**

(c) **சொந்த விருப்பத்தினாலன்றி, படைக் குறைப்புக் காரணமாக ஓய்வூதியத்துடன் வெளிவந்தவர்; அல்லது**

(d) **குறிப்பிட்ட காலம் பணிபுரிந்து தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லாமலும் சொந்த விருப்பத்தில் வெளிவந்தவராக அல்லாமலும் பணிக்கொடை பெற்று வெளிவந்தவர்.**

(iii) **15.11.1986 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ ஓய்வு பெற்ற பிராந்திய இராணுவப் படையைச் சேர்ந்த பிராந்திய இராணுவப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் (embodied) தொடர்ச்சியான பணிக்காக ஓய்வூதியம் பெற்றவர், படைப்பணியின் காரணமாக ஊனமடைந்தவர், வீரவிருது பெற்றவர்; அல்லது**

(iv) **இராணுவ அஞ்சல் பிரிவினைச் சேர்ந்த பின்வரும் வகையினர் தபால்தந்தித் துறையிலிருந்து இராணுவ அஞ்சல் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மீண்டும் தபால்தந்தித்துறைக்கு திரும்ப அனுப்பப்படாமல், இராணுவ அஞ்சல் பணியிலேயே19.07.1989 அன்றோ அல்லது அதற்குப்பிறகோ ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறுபவர்கள் அல்லது இராணுவப்பணியின் காரணமாகவோ அல்லது அவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைக் காரணங்களினாலோ, மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் வெளியேறி, மருத்துவ அல்லது வேறு பிறஇயலாமை ஓய்வூதியத்துடன்19.07.1989அன்றோ அல்லது அதற்குப் பிறகோ மருத்துவக் காரணங்களினால் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்; அல்லது**

(v) **14.04.1987ஆம் நாளுக்கு முன்னர் ஆறு மாதங்களுக்கு மேலாக இராணுவ அஞ்சல் துறையில் மாற்றுப்பணியில் பணியாற்றியவர்;**

(vii) **மருத்துவக் காரணங்களினால் விடுவிக்கப்பட்டவர் மற்றும் மருத்துவம் / இயலாமை ஓய்வூதியம் பெற்று வெளிவந்தவர்** ;

(vii) **இராணுவ விதி13 (3) III (V)-ன்கீழ் அவரது பணி இனிமேலும் தேவைப்படாத காரணத்தினால் ஜூலைத்திங்கள்1987அன்றோ அல்லது அதற்குப்பிறகு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு ஓய்வூதியம் பெறுபவர்**;

(viii) **அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படக்கூடிய பிற நபர்கள்**.

**4-A.** **<u>Ex-Serviceman</u>**

"Ex-serviceman" means,

(i) any person who had served in any rank (whether as combatant or not) in the Armed Forces of the Union for a continuous period of not less than six months after attestation, if released between 1st July 1979 and 30th June 1987 (both days inclusive):

(a) for reasons other than at his own request or by way of dismissal or discharge on account of misconduct or inefficiency; or

(b) at his own request after serving for a period of not less than five years.

Or

(ii) any person who had served in any rank (whether as combatant or not) in the Armed Forces of the Union, and had retired or had been released on or after 1st July 1987 from such service:

(a) at his own request after earning his pension; or

(b) on medical grounds attributable to military service or circumstances beyond his control and awarded medical or other disability pension; or

(c) otherwise than at his own request after earning his pension, as a result of reduction in establishment; or

(d) after completing specific period of engagement, otherwise than at his own request or by way of dismissal or dischargeon account of misconduct or inefficiency and has been given a gratuity.

(iii) any person of the Territorial Army of the following categories, namely, pension holder for continuous embodied service, person with disability attributable to military service and gallantry award winner retired on or after 15th November 1986; or

(iv) any person of the Army Postal Service, who retired on or after 19thJuly 1989 directly from the said service without reversion to Postal & Telegraph Department with pension or who has been released on or after 19th July 1989 from such service on medical grounds attributable to military service or circumstances beyond his control and awarded medical or other disability pension; or

(v) any person who was on deputation in the Army Postal Service for more than 6 months prior to the 14th day of April 1987;

(vi) any person who was boarded out or released on medical grounds and granted medical or disability pension;

(vii) any person discharged on or after July 1987 under Army Rule 13(3) III (V) for the reason that his service is no longer required and in receipt of pension;

(viii) such other person as may be notified by the Government from time to time.

<u>குறிப்பு–I</u> / *<u>Note-I</u>*

**இராணுவ வீரர்களின் வாரிசுதாரர்கள் முன்னாள் இராணுவத்தினராக கருதப்பட மாட்டார்கள்.**

*Ex-servicemen does not mean the wards / dependants of those mentioned above.*

<u>குறிப்பு-II</u>/ <u>*Note-II*</u>

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 விதி 3 (j) –ன் வரம்புரையின் படி, முன்னாள் இராணுவத்தினர் ஏதேனும் ஒரு பதவிப் பணியில் சேர்ந்து விட்ட பின்னர் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது.**

*As per the proviso to Section 3 (j) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, "In all cases, an ex-serviceman once recruited to a post in any class or service or category, cannot claim the concession of being called an ex-serviceman for his further recruitment".*

<u>குறிப்பு-III</u>/ <u>*Note-III*</u>

**இராணுவ விதி 13 (3)III (V)-ன்கீழ் பணி தேவைப்படாத காரணத்தினால் 1987-ஆம் ஆண்டு ஜுலைத்திங்களுக்கு முன் பணியிலிருந்து விலக்கப்பட்டவர், முன்னாள்படைவீரராகக் கருதப்பட மாட்டார்.**

*A person discharged before July 1987 under Army Rule 13(3)III (V) for the reason that his service is no longer required is not an ex-serviceman.*

<u>குறிப்பு-IV</u>/ <u>*Note-IV*</u>

**விண்ணப்பதாரர் இராணுவம் அல்லது கடற்படை அல்லது விமானப் படையில் இருந்து விடுவிக்கப்பட்டவர் என உரிமை கோரும் பொழுது, கோரிக்கைகளுக்கு ஆதாரமாக, முன்னாள் இராணுவத்தினர் நலவாரியத்தால் இந்த அறிவுரைகளின் பத்தி 14-Oல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி வழங்கப்பட்ட அவரது பணிவிடுவிப்புச்(DischargeCertificate) சான்றிதழின் உறுதியொப்பமிட்ட எடுகுறிப்பினையோ(Bonafide Certificate)அல்லது ஓய்வூதிய கொடுப்பாணையையோ பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும்.**

*An applicant who claims to have been demobilised from the Army or Navy or Air Force needs to upload / produceeither a properly authenticated extract from his Discharge Certificate (viz., a Bonafide Certificate) issued by the Ex-Servicemen's Welfare Board in the format as depicted at paragraph 14-O of these Instructions **OR** the Pension Pay Order.*

<u>குறிப்பு-V</u>/ <u>*Note-V*</u>

**அறிவிக்கை வெளியிட்டு, விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான இறுதி நாளிலிருந்து ஓராண்டுக்குள், முப்படைப் பணியிலிருந்து, விடுவிப்புப் பெறவிருக்கும் இராணுவவீரர்கள் அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருப்பின் அவர்களும் விண்ணப்பிக்கலாம். அவ்வகை விண்ணப்பதாரர், சான்றிதழ் சரிபார்ப்பின்பொழுது இந்த அறிவுரைகளின் பத்தி 14-Oல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் படி ஓர் உறுதிமொழிப் படிவத்தையும் மற்றும் அவர்களது படைப்பிரிவின் தலைவரிடமிருந்து(Commanding Officer)பெறப்பட்ட சான்றிதழையும் பதிவேற்றம்செய்ய / சமர்ப்பிக்க வேண்டும்.**

*Persons serving in the Armed Forces shall be eligible to apply for posts under the Government, if they are due to complete the specified term of their engagement in the Armed Forces, within one year from the last date prescribed by the Commission, for receipt of the online application in respect of a particular recruitment. All such candidates shall upload / produce at the time of certificate verification, an undertaking and a certificate from their Commanding Officer in the format as depicted at paragraph 14-O of these Instructions.*

**4-B.** <u>**நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்**</u>
<u>**Persons with Benchmark Disability**</u>

**நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் என்பவர் குறிப்பிட்ட இயலாமையின் அளவு அளவிடக்கூடிய வகையில் வரையறுக்கப்படாமல் இருந்தால், குறிப்பிட்ட இயலாமையின் அளவு 40% அளவிற்கு குறைவில்லாத மாற்றுத்திறனாளியாகவோ மற்றும் குறிப்பிட்ட இயலாமை அளவிடக்கூடிய வகையில் வரையறுக்கப்பட்டிருந்தால், அவ்வகை இயலாமை கொண்ட மாற்றுத் திறனாளியாகவோ, மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016, பிரிவு 57-ல் உட்பிரிவு(1)ன்படி, (மத்தியச்சட்டம் 49/2016)**

**அரசால் நியமிக்கப்பட்டுள்ள சான்றளிக்கும் அலுவலரால் சான்றளிக்கப்பட்ட நபர்கள்**.

"Person with Benchmark Disability" means a person with not less than forty percent of a specified disability where specified disability has not been defined in measurable terms and includes a person with disability where specified disability has been defined in measurable terms, as certified by the certifying authority designated by the Government under sub-section (1) of section 57 of the Rights of Persons with Disabilities Act, 2016 (Central Act 49 of 2016).

**4-C.** **<u>ஆதரவற்ற விதவை</u>**
**<u>Destitute Widow</u>**

"ஆதரவற்ற விதவை" என்பவர் விதவை ஒருவர் அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.**4,000/-**க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) மிகாமல் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர், உரிய வருவாய் கோட்ட அலுவலர் அல்லது மாவட்ட உதவி ஆட்சியர் அல்லது சார்ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்டப் படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவரால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார். விண்ணப்பதாரர் தேர்வு அறிவிக்கை நாளன்று ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.

"Destitute Widow" means a widow whose total monthly income from all sources shall not be more than Rs.4,000/-(Rupees Four Thousand only), including any family pension or other receipts including income from private practice in the case of professionals. Such applicants should produce a certificate from the Revenue Divisional Officer or the Assistant Collector or the Sub-Collector concerned, in the format prescribed. Destitute Widow shall not include a divorcee or a woman deserted by her husband. The status of an individual as Destitute Widow is with reference to the date of notification.

## 4-D. <u>ஆதிதிராவிட – அருந்ததியர்</u> <u>**Scheduled Caste - Arunthathiyar**</u>

"அருந்ததியர்" என்பது அருந்ததியர், சக்கிலியன், மாதாரி, மாதிகா, பகடை, தோட்டி, ஆதி ஆந்திரா ஆகிய இனத்தைக் குறிக்கும்.

"Arunthathiyar" means the castes: Arunthathiyar, Chakkiliyan, Madari, Madiga, Pagadai, Thoti and Adi Andhra.

## 4-E. <u>தமிழ் வழியில் கல்வி பயின்றோர்</u> <u>**Person Studied in Tamil Medium**</u> **(PSTM)**

தமிழ்வழிக் கல்வி மூலம் படித்த நபர்களுக்கு, மாநிலத்தின் கீழ் உள்ள பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யும் (திருத்த)ச் சட்டம்**2020-**ன் பிரிவு**2 (d)-**ல்சொல்லப்படுவதாவது:

தமிழ் வழியில் படித்த நபர் என்றால், மாநிலத்தில் நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பப்படும் பதவிகளுக்கான சிறப்பு விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில் படித்தவராவார்.

Section 2 (d) of the Tamil Nadu Appointment on Preferential Basis in the Services under the State of Persons Studied in Tamil Medium (Amendment) Act, 2020, states that:

*"Person studied in Tamil medium means a person who has studied through Tamil medium of instruction upto the educational qualification prescribed for direct recruitment in the rules or regulations or orders applicable to any appointment in the services under the State.*

**விளக்கம்**: இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக-

***Explanation:****- For the purpose of this clause,-*

*(i)* பள்ளி இறுதி வகுப்பு **(SSLC)** கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் பள்ளி இறுதி வகுப்பு **(SSLC)** வரை தமிழ் வழியில் படித்திருக்க வேண்டும்.

*in cases where SSLC is prescribed as the educational qualification, one shall have studied upto SSLC through Tamil medium;*

*(ii)* மேல்நிலை வகுப்பு **(HSC)** கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் பள்ளி இறுதி வகுப்பு **(SSLC)** மற்றும் மேல்நிலை வகுப்பு **(HSC)** ஆகியவற்றைத் தமிழ்வழியில் படித்திருக்க வேண்டும்.

*in cases where a Higher Secondary Course is prescribed as the educational qualification, one shall have studied the SSLC and Higher Secondary Course through Tamil medium of instruction;*

*(iii)* பட்டயப்படிப்பு **(Diploma)** கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் பள்ளி இறுதி வகுப்பு **(SSLC)** மற்றும் பட்டயப் படிப்பு **(Diploma)** ஆகியவற்றைத் தமிழ் வழியில் படித்திருக்க வேண்டும். பட்டயப் படிப்பை **(Diploma)** மேல்நிலை வகுப்புக்கு **(HSC)** பிறகு படித்திருப்பின், பள்ளியிறுதி வகுப்பு **(SSLC)**, மேல்நிலை வகுப்பு **(HSC)** மற்றும் பட்டயப் படிப்பு **(Diploma)** ஆகியவற்றைத் தமிழ் வழியில் படித்திருக்க வேண்டும்.

*in cases where a Diploma is prescribed as the educational qualification, one shall have studied the SSLC and the Diploma through Tamil medium of instruction or if the Diploma is obtained after completion of Higher Secondary Course, then one shall have studied SSLC, Higher Secondary Course and the Diploma through Tamil medium of instruction;*

*(iv)* பட்டப்படிப்பு கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் பள்ளி இறுதி வகுப்பு **(SSLC)**, மேல்நிலை வகுப்பு **(HSC)** மற்றும் பட்டப்படிப்பு (**Degree)** ஆகியவற்றை தமிழ்வழியில் படித்திருக்க வேண்டும்.
*in cases where a Degree is prescribed as the educational qualification, one shall have studied the SSLC, Higher Secondary Course and the Degree through Tamil medium of instruction;*

*(v)* முதுநிலை பட்டப்படிப்பு கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் பள்ளி இறுதி வகுப்பு**(SSLC)**, மேல்நிலை வகுப்பு**(HSC)**, பட்டப்படிப்பு (**Degree)** மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு**(PG Degree)** ஆகியவற்றைத் தமிழ் வழியில் படித்திருக்க வேண்டும்.

*in cases where a Post-Graduate Degree is prescribed as the educational qualification, one shall have studied the SSLC, Higher Secondary Course, Degree and the Post-Graduate Degree through Tamil medium of instruction.”*

## 5. <u>வயதுவரம்புச் சலுகைகள்</u> <u>AGE CONCESSION</u>

**5-A. சிறப்பு விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் உச்ச வயது வரம்பு கீழ்க்கண்ட இனங்களுக்குப் பொருந்தாது**

**The maximum age-limit prescribed in the special rules shall not apply to the following cases:**

(i) **ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் அளிக்கப்படும் இளநிலைப் பட்டத்திற்கு (10,+2,+3) குறைவாக இருந்தால், அப்பதவிக்கு ஆதிதிராவிடர் அல்லது ஆதிதிராவிட (அருந்ததியர்) அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டவகுப்பினர் / சீர்மரபினர் அல்லது இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் அல்லது அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவை ஆகியோர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு20(1)ல் குறிப்பிடப்பட்ட குறைந்த அளவு பொதுகல்வித் தகுதிக்கு மேற்பட்ட பொதுக்கல்வித் தகுதி பெற்றிருந்தால், அவருக்கு அப்பதவிக்கான சிறப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயது வரம்பு விதி பொருந்தாது; அல்லது**

To the appointment of a candidate belonging to any of the Scheduled Castes, Scheduled Caste (Arunthathiyars), Scheduled Tribes, Backward Classes (Muslim), Backward Classes, Most Backward Classes and Denotified Communities or Destitute Widows of all castes, to a post included in a service for which the Special Rules prescribe a qualification lower than a degree (10,+2,+3) of any University recognized by the University Grants Commission, if such candidate possesses a general educational qualification which is higher than that referred to in Section 20 (1) of the Tamil Nadu Government Servants (Conditions of Service)

Act, 2016 and he is otherwise qualified for appointment; or

(ii) **ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி இளங்கலைப் பட்டமாக இருந்து, அப்பதவிக்கு, ஆதிதிராவிடர் அல்லது ஆதிதிராவிட (அருந்ததியர்) அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் அல்லது இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினராயிருந்து, அல்லது அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவை ஆகியோர் பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் / கல்வி நிறுவனங்களால் அளிக்கப்படும் இளங்கலைப் பட்டம் (10,+2,+3) பெற்று, அப்பட்டம், நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிக்கு குறைவில்லாமல் இருந்தால் அவருக்கு சிறப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயதுவரம்பு விதி பொருந்தாது.**

To the appointment to a post included in a service of an applicant belonging to any of the Scheduled Castes, Scheduled Caste (Arunthathiyars), Scheduled Tribes, Backward Classes (Muslim), Backward Classes, Most Backward Classes and Denotified Communities or of Destitute Widows of all castes who hold a degree of any University recognized by the University Grants Commission, if the degree (10,+2,+3) he holds is not lower than the degree prescribed in the Special Rules for appointment to such post and if he is otherwise qualified for appointment:

**எனினும், நேரடி நியமனத்திற்கு ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி குறைந்த அளவு பொதுக்கல்வித் தகுதிக்கு மேற்பட்டதாக இல்லாதிருந்தால், ஆதிதிராவிடர் அல்லது ஆதிதிராவிட (அருந்ததியர்) அல்லது பழங்குடியினர் அல்லது அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோர், குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதியைவிட அதிகமாக பொதுக்கல்வித் தகுதி பெற்றிருக்காத நிலையில், அப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயதுவரம்பிலிருந்து ஐந்து ஆண்டுகள் உயர்த்தி அளிக்கப்படும்.**

Provided that, for direct recruitment to a post included in a service for which the minimum qualification required is not higher than the minimum general educational qualification, the age limit prescribed shall be increased by five years in respect of applicants belonging to Scheduled Castes or Scheduled Castes (Arunthathiyars) or Scheduled Tribes or in respect of destitute widows of all castes, who do not possess a general educational qualification, which is higher than the minimum general educational qualification;

**எனினும், நேரடி நியமனத்திற்கு ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி குறைந்த அளவு பொதுக்கல்வித் தகுதிக்கு மேற்பட்டதாக இல்லாதிருந்தால், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் அல்லது இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் ஆகியோர், குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதியை விட அதிகமாக பொதுக்கல்வித்தகுதி பெற்றிருக்காத நிலையில், அப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட உச்சவயது வரம்பிலிருந்து இரண்டு ஆண்டுகள் உயர்த்தி அளிக்கப்படும்.**

Provided further that for direct recruitment to a post included in a service for which the minimum qualification required is not higher than the minimum general educational qualification, the age limit prescribed shall be increased by two years in respect of applicants belonging to Backward Classes (Muslim), Backward Classes, Most Backward Classes and Denotified Communities, who do not possess a general educational qualification, which is higher than the minimum general educational qualification.

**<u>குறிப்பு</u>**/*<u>Note</u>:*

(a) புகுமுக வகுப்புத் தேர்வு **(Pre-University Examination)**அல்லது மேல்நிலைக்கல்வித் தேர்வு அல்லது தமிழ்நாடு அரசின் தொழில்நுட்பக் கழகம்மற்றும் பயிற்சிக்குழுமம் அல்லது தமிழ்நாடு அரசு அல்லது பிறமாநில அரசு அல்லது இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / குழுமத்தால் வழங்கப்பட்ட பட்டயம் பெற்றவர்கள் குறைந்தபட்ச கல்வித் தகுதியைக் காட்டிலும் கூடுதலான கல்வித்தகுதியைப் பெற்றவர்களாகக் கருதப்படுவர்.

*A pass in Pre-University Examination or Higher Secondary Examination or Diploma awarded by the State Board of Technical Education and Training, Tamil Nadu or by any Institution or Board recognized by the Government of Tamil Nadu or any other State Government or the Government of India, shall be deemed to be a qualification higher than the minimum that has been referred to in the instruction above.*

(b) பல்கலைக் கழகத்தில் புகுமுகத் தேர்வில் **(Pre-University Examination)** அல்லது மேல்நிலைப் பள்ளித்தேர்வில் அல்லது பட்டயப்படிப்பில் இரண்டு பகுதிகளில் அல்லது ஒரு பகுதியில் மட்டும் தேறியுள்ள விண்ணப்பதாரர், குறைந்த அளவு பொதுக்கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட கல்வித்தகுதி பெற்றிருப்பதாகக் கருதப்பட மாட்டார்.

*An applicant who has passed only one or two parts of the Pre-University or Higher Secondary Examination or Diploma will not be deemed to possess a qualification higher than the minimum general educational qualification.*

**5-B.** **தேர்வு அறிவிக்கை வெளியிடப்படும் ஆண்டின் ஜுலை முதல் நாளன்று ஆதிதிராவிடர், ஆதி திராவிட - அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் 53 வயதை நிறைவு செய்யாமல் இதர தகுதிகள் அனைத்தும் பெற்றிருப்பின் நியமனத்திற்கு**

**தகுதியானவர்கள். தேர்வு அறிவிக்கை வெளியிடப்படும் ஆண்டின் ஜுலை முதல்நாளன்று 48 வயதை நிறைவு செய்யாத, மேற்குறிப்பிடப்பட்டுள்ள வகுப்புகளை சாராத முன்னாள் இராணுவத்தினர் இதர தகுதிகள் அனைத்தும் பெற்றிருப்பின், நியமனத்திற்கு தகுதியானவர்கள்.**

An ex-serviceman who has not completed 48 years of age, if he does not belong to Scheduled Castes or Scheduled Tribes or Backward Classes (other than Muslim) or Backward Classes (Muslim) or Most Backward Classes or Denotified Communities,

and 53 years, if he belongs to Scheduled Castes or Scheduled Tribes or Backward Classes (other than Muslim) or Backward Classes (Muslim) or Most Backward Classes or Denotified Communities, on the 1st day of July of the year in which the vacancies are notified, but is otherwise qualified, shall be eligible for appointment.

**5-C.** **1963 ஜனவரி முதல்நாள் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் தேசிய மாணவர் படையில் (National Cadet Corps) சார்நிலை அலுவலர், பயிற்றுநர்கள்(Under Officer, Instructors) அல்லது சார்ஜண்ட் மேஜர் பயிற்றுநர்களாக வேலையில் அமர்த்தப்பட்டிருந்த தேசிய மாணவர் படையின் முன்னாள் மாணவர்கள் வயதுத் தகுதியைத் தவிர, நிர்ணயிக்கப்பட்ட பிற தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தால் விண்ணப்பிக்கலாம். அவர் தேசிய மாணவர் படையில் சார்நிலை அலுவலர், பயிற்றுநர்களாக அல்லது சார்ஜண்ட் மேஜர் பயிற்றுநர்களாக எவ்வளவு காலம் பணி புரிந்துள்ளார்களோ அக்கால அளவை அவர்களுடைய வயதிலிருந்து கழித்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். இத்தகைய விண்ணப்பதாரர் மற்றபடி தகுதியுடையவராகக் கருதப்பட்டால் அவருக்கான வயது சம்மந்தப்பட்ட விதி அரசால் தளர்த்தப்படும்.**

Ex-N.C.C. cadets who were employed as Under Officer, Instructors or Sergeant-Major-Instructors in the N.C.C. on whole-time basis on or after 1st January 1963, may also apply, if they possess all the prescribed qualifications except age. They are allowed to deduct from their age, the actual period of service as Under Officers, Instructors or Sergeant-Major-Instructors in the N.C.C. The relevant age rule will be relaxed by theGovernment in their favour if they are otherwise found to be suitable.

**5-D.** **நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் இதர தகுதிகள் அனைத்தும் பெற்றிருப்பின், நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது சலுகை பெறத் தகுதியுடையவராவார்கள். அரசாணை (நிலை) எண்.28, மாற்றுத் திறனாளிகள் (DAP.3.1) நலத் துறை, நாள் 27.07.2018-ன்படி, மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் விதி, 2017-ல் இந்திய அரசு வகுத்துள்ள விதிகளின் படி சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

Persons with benchmark disability will be eligible for age concession up to ten years over and above the age limit

prescribed, provided they are found to be otherwise suitable. Such applicants should produce a certificate as laid down in G.O. (Ms) No. 28, Welfare of Differently-abled Persons (DAP 3.1) Department, dated 27.07.2018 and in accordance with the norms laid down by the Government of India in the Rights of Persons with Disabilities Rules, 2017.

**5-E.** பிணைத்தொழிலாளிகள் - "சி" மற்றும் "டி" பிரிவுகளின் கீழ்வரும் பதவிகளுக்கு (அதாவது பதவியின் சம்பளம், ஊதிய நிலை ரூ.**35900-113500/-**க்கும் குறைவாக கொண்டவை) விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளியாக அல்லது அப்படிப்பட்டவர்களின் புதல்வராக அல்லது திருமணமாகாத புதல்வியராக இருப்பின், தேர்வு அறிவிக்கை வெளியிடப்படும் வருடத்தில் ஜுலை மாதம் முதல் **நாளன்று 40**வயது நிரம்பாதவராக இருக்க வேண்டும். இவர்கள் **1976-**ம் ஆண்டு பிணைத்தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டத்தின் வழிவகைப்படி விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளிகள்என்பதற்கான சான்றிதழைக் கீழ்கண்டப் படிவத்தில் சாதிச்சான்றிதழ் வழங்கக்கூடிய தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து பெற்று அனுப்ப வேண்டும்.

| **சான்றிதழ்** |
|---|
| -------------------- மாவட்டம் -------------------------வட்டம் ---------------------கிராமத்தில் வசித்து வரும் திரு ---------------------------என்பவருடைய மகன் / திருமணமாகாத மகள் திரு/செல்வி ------------------------------------------------- **1976-**ம் ஆண்டு பிணைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்ட வழிவகைப் படி ---------------அன்று விடுவிக்கப்பட்டப் பிணைத் தொழிலாளி / இவருடைய பெற்றோர் விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளி என்று சான்று அளிக்கிறேன். |

Bonded labourers who themselves have been released from Bonded Labour System / sons or unmarried daughters of such released bonded labourers, can apply for posts under Groups C and D (with a pay level below Rs.35900-113500 in the pay matrix). They are eligible to apply if they had not completed 40 years of age on the 1st July of the year in which the vacancies are notified.

Applicants should produce a certificate in the form specified below, from the authority competent to issue community certificate, to

show that they have been released from Bonded Labour under the provisions of the Bonded Labour System (Abolition) Act, 1976.

**CERTIFICATE**

This is to certify that Thiru./Tmt./Selvi. ...............................is the son / unmarried daughter of Thiru. ........................residing at ..............................Village ........................Taluk.................. District has himself / herself / whose parents have been released from Bonded Labour under the provisions of the Bonded Labour System (Abolition) Act, 1976, on..........................

**5-F.** விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலுள்ள தற்காலிகப் பணியாளர்கள் தேர்வு அறிவிக்கை வெளியிடப்படும் ஆண்டில் ஜுலைத் திங்கள் முதல் நாளன்று **40**வயது நிறைவடையாமல் இருந்தால், தேர்வாணையத்தின் அறிவிக்கை நாள் வரையில் பணியாற்றிய பணிக்காலத்தை (தொடர்ச்சியாகவோ அல்லது தொடர்ச்சியின்றியோ) தம்முடைய வயதிலிருந்து கழித்துக் கணக்கிட்டுக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

Discharged and serving temporary Government employees who have not completed 40 years of age on the 1st July of the year in which the vacancies are notified, are allowed to deduct from their age the actual period of service rendered under the Government (whether continuous or non-continuous) up to the date of the Commission’s Notification.

**குறிப்பு**/*Note:*

மாநில அரசில் பணியாற்றி, ஆட்குறைப்பு காரணமாகவோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை நீங்கலாக வேறுயாதொரு காரணத்திற்காகவோ பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மட்டுமே பணிவிடுவிப்பு செய்யப்பட்ட மாநில அரசு அலுவலர்களாகக் கருதப்படுவர்.

*A discharged State Government employee is a person who was in the employment of the State and was discharged because of reduction in establishment or for any other reason but not on a disciplinary proceeding.*

**5-G.** நேரடி நியமனத்திற்கான வயது உச்ச வரம்பு மேலும் இரண்டு ஆண்டுகள் உயர்த்தப்பட்டு, அரசாணை (நிலை) எண். 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள் 13.09.2021 –ல் ஆணையிடப்பட்டுள்ளது.

For direct recruitments, maximum age limit has been increased for two years vide G.O.(Ms.) No. 91, Human Resources Management (S) Department, dated 13.09.2021.

## 6. தேர்வுக் கட்டணச் சலுகை
## FEE CONCESSION

| வகை | சலுகை |
|---|---|
| ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட அருந்ததியர் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| பழங்குடியினர் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் | மூன்றுமுறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் | மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| முன்னாள் இராணுவத்தினர் | இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| ஆதரவற்ற விதவை | கட்டணம் செலுத்தத் தேவையில்லை |

| Category | Concession |
|---|---|
| Scheduled Castes/Scheduled Caste (Arunthathiyars) | Full Exemption |
| Scheduled Tribes | Full Exemption |
| Most Backward Classes / Denotified Communities | Three Free Chances |
| Backward Classes (Other than Muslim) / Backward Classes (Muslim) | Three Free Chances |

| | |
|---|---|
| Ex-Servicemen | Two Free Chances |
| Persons with Benchmark Disability | Full Exemption |
| Destitute Widow | Full Exemption |

குறிப்பு/ *Note:*

*(i)* **முந்தைய விண்ணப்பங்களில் கோரப்பட்ட உரிமைகளின் அடிப்படையில், மொத்த தேர்வுக்கட்டண இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும்.**

*The total number of free chances availed, will be calculated on the basis of claims made in previous applications.*

*(ii)* **விண்ணப்பதாரர் பெறும் இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையானது தெரிவின் எந்நிலையிலும் தேர்வாணையத்தால் சரிபார்க்கப்படும்.**

*The number of free chances availed by the applicant may be verified by the Commission at any stage of the selection process.*

*(iii)* **விண்ணப்பதாரர் தம்முடைய முந்தைய விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்களை மறைத்து விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து கட்டணவிலக்குத் தவறாகக் கோரும்பட்சத்தில், அவருடைய விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படுவதுடன், தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகள் / தெரிவுகளில் கலந்து கொள்வதிலிருந்து ஒருவருட காலத்திற்கு விலக்கி வைக்கப்படுவார்.**

*In case an applicant makes a false claim for exemption from payment of application fee by suppressing information regarding his previous application(s), his candidature shall be rejected after due process and he shall be debarred for a period of one year, from appearing for examinations and selections conducted by the Commission.*

*(iv)* **விண்ணப்பதாரர் தேர்வுக் கட்டண விலக்கு தொடர்பான இலவச சலுகையைப் பெறுவதற்கு “ஆம்” அல்லது “இல்லை” என்ற விருப்பங்களை கவனமாக தேர்வு செய்யுமாறுஅறிவுறுத்தப்படுகிறார். விண்ணப்பம் வெற்றிகரமாக சமர்ப்பிக்கப்பட்டபின்னர், தெரிவு**

**செய்யப்பட்ட விருப்பங்களை மாற்றம் செய்யவோ, திருத்தம் செய்யவோ இயலாது..**

*Applicants are directed to carefully choose the options 'Yes' or 'No' regarding availing the fee concession. The choice made, cannot be modified or edited after successful submission of online application.*

*(v)* **விண்ணப்பதாரர், விண்ணப்பதாரர்களின் தன்விவரப் பக்கத்தின் Application History-ல் தோன்றும் தகவல்களைப் பொருட்படுத்தாமல் தேர்வுக்கட்டணச் சலுகை இதுவரை எத்தனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை தங்களின் சொந்த நலன் கருதி கணக்கிட்டு வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.**

*Applicants are advised in their own interest, to keep an account of the number of times fee concession has been availed, irrespective of the information displayed in the <Application History> of the applicant dashboard.*

*(vi)* **கட்டணச் சலுகை கோரி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பமானது (விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளைப் பொருட்படுத்தாமல்) விண்ணப்பதாரருக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையிலிருந்து ஒரு வாய்ப்பு குறைக்கப்பட்டதாகக் கருதப்படும்.**

*An application (irrespective of the post applied for) claiming fee concession will operate to exclude one chance from the number of free chances allowed.*

*(vii)* **அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச இலவச வாய்ப்புகளை பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர் / தேர்வுக் கட்டணச் சலுகையைப் பெற விரும்பாத விண்ணப்பதாரர் / தேர்வுக்கட்டணச் சலுகைக்கு தகுதியற்ற விண்ணப்பதாரர் தேர்வுக்கட்டணச் சலுகை தொடர்பான கேள்விக்கு எதிரே "இல்லை" என்ற விருப்பத்தினை** தெரிவு செய்ய வேண்டும். **அவ்விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக்கட்டணம் செலுத்தும் முறை மூலம் தேவையான கட்டணத்தினை பின்னர் செலுத்தலாம்.**

*Applicants who have availed the maximum number of free chances permitted / applicants who do not wish to avail of the fee concession / applicants who are not eligible for fee concession, shall choose the option 'No' against the query regarding fee*

*concession. Such applicants shall thereafter pay the requisite fee through the prescribed mode of payment.*

*(viii)* **விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக்கட்டணத்துடன் குறித்த நேரத்திற்குள் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கவில்லையென்றால், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

*Failure to pay the prescribed fee in time, along with the online application, will result in the rejection of application after due process.*

## 7. <u>நியமன ஒதுக்கீடு</u> <u>RESERVATION OF APPOINTMENTS</u>

**7-A.** ஆதிதிராவிடர், ஆதிதிராவிட - அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் ஆகியோர் இடஒதுக்கீடு விதிகளின்படி, தெரிவு செய்யப்படுவர். ஆதிதிராவிடர், ஆதி திராவிட- அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர், பொது முறைகளின் **(General Turn)** மூலம் நிரப்பப்படும் காலிப்பணியிடங் களுக்குத் தகுதியின் அடிப்படையில், தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராவார். அவ்வாறு பொது முறைகள் மூலம் நிரப்பப்படும் காலிப்பணியிடத்திற்கு, தகுதியின் அடிப்படையில், ஆதிதிராவிடர், ஆதி திராவிட- அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால், அவரது வகுப்புக்காக ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட காலிப்பணியிடத்தின் எண்ணிக்கை எந்தவகையிலும் பாதிக்கப்பட மாட்டாது.

Where the rule of reservation of appointments for Scheduled Castes / Scheduled Caste (Arunthathiyars) / Scheduled Tribes / Most Backward Classes /Denotified Communities / Backward Classes (other than Muslim) / Backward Classes (Muslim) is applicable, selection will be made following the rule of reservation. Candidates belonging to the Scheduled Castes, Scheduled Caste (Arunthathiyars), Scheduled Tribes, Most BackwardClasses / Denotified Communities, Backward Classes (other than Muslim)

and the Backward Classes (Muslim) will also be eligible for selection against the vacancies to be filled under General Turn on the basis of merit and where a Scheduled Caste / Scheduled Caste (Arunthathiyars) / Scheduled Tribe, Most Backward Class / Denotified Community or Backward Class (other than Muslim) / Backward Class (Muslim) candidate is selected on the basis of merit against the General Turn, the vacancy reserved for that particular community will not in any way be affected.

**7-B.** மொத்தம் கணக்கிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களில், இடஒதுக்கீடு விதி பொருந்தும் பதவிகளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் 30% பெண் விண்ணப்பதாரர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படுகிறது. இடஒதுக்கீடு விதி பொருந்தும் பதவிகளைப் பொருத்தவரை, ஒவ்வொரு பிரிவு மற்றும் பொதுப்பிரிவில், இடஒதுக்கீட்டின் படி, 30% காலிப்பணியிடங்கள் பெண் விண்ணப்பதாரர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படுகிறது. பெண்கள் / திருநங்கைகள் (பெண்கள்) விண்ணப்பதாரர் மேற்குறிப்பிடப்பட்ட 30% இட ஒதுக்கீட்டில் போட்டியிட தகுதியானவர். மேலும், அவர்கள் மீதமுள்ள 70% காலிப்பணியிடங்களுக்கான இடஒதுக்கீட்டில், ஆண்கள் / திருநங்கைகள் / திருநங்கைகள் (ஆண்கள்) விண்ணப்பதாரருடன் சேர்ந்து போட்டியிடத் தகுதியானவர்கள்.

A minimum of 30% of all vacancies shall be set apart for women candidates, irrespective of the fact of whether the rule of reservation of appointments applies to the posts or not. In respect of the posts to which the rule of reservation of appointments applies, 30% of vacancies shall be set apart for women candidates, following the reservation for each communal category as well as open category. Women / Transgender (women) candidates shall be entitled to compete for the said 30% of vacancies. They shall also be entitled to compete for the remaining 70% of vacancies along with male / Transgender / Transgender (men) candidates.

**7-C.** தகுதியுடைய / பொருத்தமான பெண் / திருநங்கைகள் (பெண்) விண்ணப்பதாரர் இல்லாத இடங்களில், அந்தந்த ஒதுக்கீட்டுப் பிரிவைச் சார்ந்த ஆண்/ திருநங்கைகள் / திருநங்கைகள் (ஆண்) நிரப்பப்படுவார். மேலும், இடஒதுக்கீடு பொருந்தாத பதவிகளைப் பொருத்தவரை, அந்த இடமானது, அடுத்த இடங்களில் உள்ள ஆண்/ திருநங்கைகள் / திருநங்கைகள்(ஆண்) விண்ணப்பதாரருக்கு ஒதுக்கப்படும். எனினும், இவ்விதி பெண்கள் அல்லது ஆண்கள் மட்டுமே பணிபுரிய தகுதியுடைய பதவிகளுக்குப் பொருந்தாது.

If no qualified and suitable women / Transgender (women) candidates are available for selection against such vacancies, those vacancies shall be filled by men / Transgender / Transgender (men) candidates belonging to the respective communal categories. In respect of posts to which the rule of reservation does not apply, the turn so allotted shall go to the next male / Transgender / Transgender (men) candidate. This clause will not apply to the recruitments meant exclusively for men or women.

**7-D.** மாநில அரசின் கீழ் ஊதியநிலை ரூ.**20600-65500/-**க்கு (திருத்தப்பட்ட சம்பளம்) மிகாத பதவிகளுக்கு பெண் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களில், **10%** பணியிடங்கள் அந்தந்த ஒதுக்கீட்டுப் பிரிவைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகளுக்கு வழங்கப்படும். ஆதரவற்ற விதவையில்லாத இடங்களில் அந்தந்த ஒதுக்கீட்டுப் பிரிவைச் சார்ந்த பெண்களுக்கு/ திருநங்கைகளுக்கு (பெண்கள்) (ஆதரவற்ற விதவைகள் தவிர) வழங்கப்படும். தகுதியான / பொருத்தமான ஆதரவற்ற விதவைகள் / பெண்கள் (ஆதரவற்ற விதவைகள் தவிர) விண்ணப்பதாரர் இல்லாத பட்சத்தில், காலிப் பணியிடமானது, அந்தந்த ஒதுக்கீட்டுப் பிரிவைச் சார்ந்த ஆண் / திருநங்கைகள் / திருநங்கைகள் (ஆண்) விண்ணப்பதாரரால் நிரப்பப்படும்.

Out of vacancies reserved for women candidates in direct recruitment, 10% of vacancies are reserved for destitute widows who possess the prescribed qualifications for appointment to any post under the State Government, with a pay level not exceeding Rs.20600-65500 (Revised) in the pay matrix. If no qualified and suitable destitute widow is available for selection, the turn so set apart for destitute widows shall go to the women / Transgender (women), other than destitute widows, belonging to the respective communal categories. In the event of non-availability of qualified and suitable destitute widows or women / Transgender (women) other than destitute widow candidates for selection, the vacancy will be filled by men / Transgender / Transgender (men) candidates, belonging to the respective communal categories.

**7-E.** ஒவ்வொரு பிரிவிலும், முன்னாள் இராணுவத்தினருக்கு, அரசுப் பணிகளில் **Group-C** தொகுப்பிலுள்ள பதவிகளில், பதவியின் ஊதிய

நிலை ரூ.**15,900-50,400/-** (திருத்தப்பட்ட சம்பளம்) அதற்கும் அதிகமாக உடையதும் ஆனால் ஊதியநிலை ரூ.**35,900-113500/-**க்கு (திருத்தப்பட்ட சம்பளம்) குறைவாகக் கொண்ட பதவிகளில் மட்டுமே, **5%** காலிப்பணியிடம் ஒதுக்கீடு செய்யப்படும்.

Out of the total number of vacancies, in each communal category, 5% shall be reserved for ex-servicemen in the posts which are classified under Group ‘C’ (i.e., the posts with a minimum pay level of Rs.15900-50400 [Revised] and above but below Rs.35900-113500 [Revised]) in the pay matrix.

**7-F.** பதவிகளுக்கான நேரடி நியமனங்களில், ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட - அருந்ததியினர் (முன்னுரிமை அடிப்படையில்) / பழங்குடியினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் / இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் மற்றும் பொதுப்பிரிவு, ஆகிய ஒதுக்கீட்டுப் பிரிவுகளில், கீழ்க்காணும் **(i), (ii)** மற்றும் **(iii)** பிரிவுகளைச் சார்ந்த **நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி**களுக்கு **தலா 1** சதவீதமும், **(iv)** மற்றும் **(v)** ஆகிய இரண்டு பிரிவுகளைச் சார்ந்த **நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளி**களுக்கு சேர்த்து **1** சதவீதமும் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

(i) பார்வையற்றோர் மற்றும் குறைந்த பார்வைத் திறனுடையவர்;

(ii) காது கேளாதோர் மற்றும் கேட்புத்திறனில் மந்தத்தன்மை;

(iii) கை, கால்களில் குறைபாடுடையவர், மூளை வாதம், தொழுநோயிலிருந்து மீண்டவர், வளர்ச்சிக் குறைபாடுடையோர், அமிலவீச்சில் பாதிக்கப்பட்டோர் மற்றும் தசைநார் தேய்மானமுற்றோர்;

(iv) ஆட்டிசம், அறிவுசார் குறைபாடுடையோர், குறிப்பிடத்தக்க வகையிலான கற்கும் ஆற்றலில் குறைபாடு மற்றும் மனநலிவு நோய்;

(v) மேற்கூறப்பட்ட **(i)** முதல் **(iv)** வரை குறைபாடுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட குறைபாடுகளைப் பெற்றிருத்தல் மற்றும் காதுகேளாமையுடன் பார்வைத்திறன் குறைவு, உட்பட பலவகையான இயலாமை.

Out of the total number of appointments to be made in the communal reservation categories, viz., Scheduled Castes / Scheduled Caste-Arunthathiyars (on preferential basis) /

Scheduled Tribes / Most Backward Classes / Denotified Communities / Backward Classes (other than Muslim) / Backward Classes (Muslim) and General Turn, in the case of appointment made by direct recruitment, 1% each shall be reserved for persons with benchmark disabilities under categories (i), (ii) and (iii) and 1% for persons with benchmark disabilities under categories (iv) and (v) both taken together, namely:

(i) blindness and low vision;

(ii) deaf and hard of hearing;

(iii) locomotor disability including cerebral palsy, leprosy cured, dwarfism, acid attack victims and muscular dystrophy;

(iv) autism, intellectual disability, specific learning disability and mental illness;

(v) multiple disabilities from amongst persons under categories (i) to (iv) including deaf-blindness in the posts identified for each disability.

**மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டம், 2016-ன், பிரிவு 33-ன்படி, ஒவ்வொரு துறையிலும் அரசால் இனம் காணப்பட்ட பதவிகள், நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரருக்கு நியமன ஒதுக்கீடு செய்யப்படுகிறது;**

Reservation for persons with benchmark disabilities shall be made in respect of posts identified by the Government in each department, under section 33 of the Rights of Persons with Disabilities Act, 2016;

**நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் ஒதுக்கீட்டிற்கு, தகுதியுடைய நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் இல்லாதபோது அல்லது வேறு போதுமான காரணங்களுக்காக, அந்தக் காலிப்பணியிடம் நிரப்பப்படாத சூழல் ஏற்படும்போது, அப்பணியிடம் அடுத்த தெரிவிற்கு முன்கொணர்வு (carried forward) செய்யப்படும். அப்போதும் அந்தந்த வகையினரில் தகுதியுடையோர் இல்லையெனில், மேற்கூறப்பட்ட ஐந்து பிரிவுகளிலிருந்து பரிமாற்றத்தின்படி, தெரிவு செய்யப்பட்டு, அந்தக் காலிப்பணியிடம் நிரப்பப்படும். அந்த ஆண்டிற்கான தெரிவிலும், எந்தவகை மாற்றுத்திறனாளிகளும் இல்லையெனில்,**

மாற்றுத் திறனாளிகள் அல்லாதோர்களைக் கொண்டு அப்பணியிடம் நிரப்பப்படும்:

எனினும், ஒரு துறையில் காலிப்பணியிடங்களின் தன்மை காரணமாக அப்பணியிடங்களில் ஒரு குறிப்பிட்ட வகையைச் சார்ந்த மாற்றுத்திறனாளியால் பணிபுரிய இயலாது என்றால், அரசின் முன்அனுமதி பெற்று அப்பணியிடங்களை 5 பிரிவுகளுக்கிடையே பரிமாற்றத்தின்படி நிரப்பிக்கொள்ளலாம்.

Where in any recruitment year any vacancy cannot be filled up due to non-availability of a suitable person with benchmark disability or for any other sufficient reasons, such vacancy shall be carried forward in the succeeding recruitment year and if in the succeeding recruitment year also suitable person with benchmark disability is not available, it may first be filled by interchange among the five categories and only when there is no person with disability available for the post in that year, such vacancy shall be filled up by appointment of a person, other than a person with disability:

Provided that if the nature of vacancies in a department is such that a given category of person cannot be employed, the vacancies may be interchanged among the five categories with the prior approval of the Government.

**7-G.** முன்னுரிமை அடிப்படையில், ஆதிதிராவிட- அருந்ததியர் வகுப்பினருக்கான 3% இடஒதுக்கீட்டின்படி, பணியிடங்கள் நிரப்பப்பட்டப் பின்னரும், தகுதியான ஆதிதிராவிட – அருந்ததியர் இருக்கும் பட்சத்தில், ஆதிதிராவிட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டுப் பிரிவிலும், போட்டியிடத் தகுதியானவராவர். போதுமான அளவு தகுதிவாய்ந்த ஆதிதிராவிட-அருந்ததியர் வகுப்பினைச் சார்ந்த விண்ணப்பதாரர் இல்லையெனில், அப்பணியிடங்கள், அருந்ததியர் அல்லாத, ஆதிதிராவிட வகுப்பினைச் சார்ந்தவர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

Even after filling up of the 3% of posts reserved for Scheduled Caste (Arunthathiyars) on preferential basis, if qualified Scheduled Caste (Arunthathiyars) are still available, they shall be entitled to compete with the Scheduled Caste (other than Arunthathiyars)candidates in the inter-se merit among them and if any posts reserved for Scheduled Caste (Arunthathiyars) remain unfilled for want of adequate number of qualified candidates, it

shall be filled up by Scheduled Caste (other than Arunthathiyars) candidates.

**குறிப்பு**/*Note:*

*(a)* தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், **2016**-ன் அட்டவணை **I** - ல் பகுதிகள்**A, B, C D** மற்றும் அட்டவணை **II**–ல் பகுதிகள் **A** மற்றும் **B**-ல் உள்ள பட்டியல்களின்படி ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் ஆகியோரின் பட்டியல்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

*A list of Scheduled Castes,Scheduled Tribes, Most Backward Classes / Denotified Communities, Backward Classes and Backward Classes (Muslim), as listed in Parts A, B, C and D of Schedule I and Parts A and B of Schedule II of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, is given in the Annexure to these Instructions.*

*(b)* தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்து, இணைப்பில் காணும் பட்டியல்களில் குறிப்பிட்டுள்ள சாதிகளில் ஒன்றைச் சார்ந்தவராக இருந்தால் மட்டுமே அவ்விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிட –அருந்ததியர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் என்று கருதப்படுவார். பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், அப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள சாதிகளில் ஒன்றைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும், ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிட - அருந்ததியர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட

வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட மாட்டார்கள்.

*Persons belonging to Tamil Nadu and to any one of the communities mentioned in the lists shown in the Annexure alone shall be treated as Scheduled Castes or Scheduled Tribes or Most Backward Classes / Denotified Communities*

*or Backward Classes and Backward Classes (Muslim), as the case may be. Persons belonging to other States shall not be treated as belonging to the Scheduled Castes or Scheduled Tribes or Most Backward Classes / Denotified Communities or Backward Classes and Backward Classes (Muslim) even though they may belong to any one of the communities specified in the list.*

## 8. <u>குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி</u>

## <u>MINIMUM GENERAL EDUCATIONAL QUALIFICATION</u>

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பட்டியல் 3ன் படி குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதி என்பது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் என்று பொருள்படும்:**

As per Schedule III of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, the minimum general educational qualification means the qualification specified below:

(i) **இம்மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்லூரிப் படிப்புகளுக்கு அனுமதிக்கத் தகுதி பெறும்வகையில், பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி; அல்லது**

A pass in the Secondary School Leaving Certificate (SSLC) Examination with eligibility for admission to college course of studies in the Universities in this State; or

(ii) **இம்மாநிலத்தில் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி.**

A pass in the Secondary School Leaving Certificate Examination of this State.

<u>**விளக்கம்-**I /Explanation – I</u>

**ஒரு நபர் பதினொரு ஆண்டுகள் பள்ளி இறுதித்தேர்வு எழுதியிருந்து, ஒவ்வொரு பாடத்திலும் ஒரே முறையிலோ அல்லது பகுதி முறையிலோ 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தால் அவர் பள்ளி இறுதித்தேர்வில் தேறியவராகக் கருதப்படுவார்.**

A person who had appeared for 11-year SSLC Public Examination and obtained 35 per cent marks in each subject, either in one sitting or compartmentally, shall be deemed to have passed the SSLC Public Examination.

<u>**விளக்கம்-**II/Explanation – II</u>

**ஒரு நபர் பதினொரு ஆண்டு பள்ளி இறுதித்தேர்வில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெறத் தவறி, தோல்வியுற்ற அந்தப் பாடம் அல்லது பாடங்களில் 10ஆண்டு பள்ளி இறுதித்தேர்வு எழுதி, 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் பள்ளி இறுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றவராகக் கருதப்படுவார்.**

A person who had appeared for 11-year SSLC Public Examination and had failed to obtain 35 per cent marks in one or more subjects but who had appeared and obtained 35 per cent marks in the corresponding subject or subjects in 10-year SSLC Public Examination shall be deemed to have passed SSLC Public Examination.

<u>**விளக்கம்-**III/Explanation – III</u>

**ஒரு நபர் பதினொரு ஆண்டு பள்ளி இறுதித்தேர்வில் விருப்பப்பாடம் எடுத்துப் படித்து, அந்த விருப்பப் பாடத்தில் தோல்வியடைந்திருந்து, விருப்பப்பாடத்தைத் தவிர மற்ற அனைத்துப் பாடங்களிலும் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் பள்ளி இறுதித்தேர்வில் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.**

A person who had studied optional subjects in 11-year SSLC and failed in the optional subjects, but had obtained 35 per cent marks in all other subjects except the optional subjects in 11-year SSLC Public Examination, shall be deemed to have passed the SSLC Public Examination.

<u>**விளக்கம்**-IV/Explanation – IV</u>

**ஒரு நபர், தமிழ்நாடு திறந்தவெளிப் பள்ளிக் குழுமத்தினால் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு அரசுத்தேர்வு எழுதி வெற்றி பெற்றிருந்தால் பள்ளி இறுதித்தேர்வில் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.**

A person who had appeared and passed the 10th Standard Government Examination conducted by the Board of Open School, Tamil Nadu shall be deemed to have passed the SSLC Public Examination.

## 9. கல்வி/ தொழில்நுட்பக் கல்வித் தகுதி
## EDUCATIONAL / TECHNICAL QUALIFICATIONS

தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் **2016**, பிரிவு **25**-ன் படி ,எந்தவொரு நபரும், கீழ்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்கவில்லையெனில், எந்த ஒரு பணியிலோ, தரத்திலோ, இனத்திலோ அல்லது தர நிலையிலோ அல்லது எந்த ஒரு பதவியிலோ நியமிக்க தகுதியற்றவராவார்:

(i) சிறப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு சிறப்புத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும், சிறப்புத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(ii) சிறப்புத் தகுதிகள் அல்லது அரசின் சிறப்புத் தேர்வுகளுக்கு அதிகமான அல்லது இணையான பிற தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

As per Section 25 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, no person shall be eligible for appointment to any service, class, category or grade or any post borne on the cadre thereof unless he,—

(i) possesses such special qualifications and has passed such special tests as may be prescribed in that behalf in the special rules; or

(ii) possesses such other qualifications as have been declared to be higher than or equivalent to the said special qualifications or special testsby the Government.

<u>**விளக்கம்-**I **/**Explanation-I</u>

சிறப்பு விதிகளில் நியமனத்திற்கான கல்வித் தகுதியாக பட்டயம் அல்லது இளங்கலைப் பட்டம் அல்லது முதுகலைப் பட்டம் என நிர்ணயிக்கப்பட்டிருப்பின், அது,

**(i)** நிர்ணயிக்கப்பட்ட பட்டயக் கல்வித்தகுதியினை, பள்ளியிறுதி வகுப்பு அல்லது மேல்நிலை வகுப்பு முடித்தப் பின்னர் **[10+3** (மூன்று வருட பட்டயம்)**]** அல்லது **[10+2+2(Lateral Entry)]** பெற்றிருக்க வேண்டும்; அல்லது

**(ii)** நிர்ணயிக்கப்பட்ட இளங்கலைப் பட்டக்கல்வித் தகுதியினை, பள்ளியிறுதி வகுப்பு மற்றும் மேல்நிலை வகுப்பு முடித்தப் பின்னர், பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட பட்டம்

**(10+2+3 அல்லது அதற்கும் மேல், என்ற வரிசை முறையில் பெறப்பட்ட பட்டம்); அல்லது**

**(iii)** **நிர்ணயிக்கப்பட்ட முதுகலைப் பட்டம் கல்வித் தகுதியினை, பள்ளியிறுதி வகுப்பு மற்றும் மேல்நிலை வகுப்பு மற்றும் இளங்கலைப் பட்டம் ஆகியவற்றை முடித்தப் பின்னர் பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / கல்வி நிறுவனத்திடமிருந்து (10+2+3+2அல்லது 3 என்ற வரிசை முறையில்) பெறப்பட்ட முதுகலைப் பட்டம் அப்பதவிக்கான கல்வித் தகுதியாக கருதப்படும்.**

In cases where the Special Rules prescribe a diploma or a degree or a post-graduate degree as a qualification for appointment, then,

(i) a diploma obtained, after completion of SSLC or Higher Secondary Course [10+3 (3 Years Diploma)] or [10+2+2 (Lateral Entry)]; or

(ii) a degree obtained, after completion of SSLC and Higher Secondary Course (10+2+3 or more); or

(iii) a post-graduate degree obtained, after completion of SSLC, Higher Secondary Course and a degree (10+2+3+2 or 3)

from any University or Institution recognized by the University Grants Commission shall be recognized as the qualification.

<u>**விளக்கம்**-II /Explanation-II</u>

[5]**[சிறப்பு விதிகளில் குறிப்பிட்ட பாடத்தில் பட்டயம் என கல்வித்தகுதி நிர்ணயிக்கப்பட்டிருப்பின், அப்பாடத்தில் பெற்ற இளங்கலைப் பட்டம் உயர்கல்வித் தகுதியாகக் கருதப்படும்.**

In cases where the special rules prescribe a diploma in a particular subject as qualification, then, a degree in that subject shall be deemed to be a higher qualification][5].

---

5. Amended vide Commission's Orders dated 02.11.2022.

<u>**விளக்கம்-**III/Explanation-III</u>

**சிறப்பு விதிகளில் ஒரு நியமனத்திற்கு கல்வித்தகுதி அல்லது தொழில்நுட்பக் கல்வித்தகுதி இவற்றுடன் கூடுதலாக நடைமுறை அனுபவம் அல்லது**

பிற அனுபவம் நிர்ணயிக்கப்பட்டிருப்பின், கல்வித்தகுதி அல்லது தொழில்நுட்பக் கல்வித்தகுதியினை பெற்ற பின்னரே, அந்த அனுபவங்களைப் பெற்றிருக்க வேண்டும் (சிறப்பு விதிகளில் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருந்தாலன்றி).

In cases where the special rules prescribe a period of practical or other experience in addition to educational or technical qualification, for an appointment, such a period of practical or other experience, as the case may be, should have been acquired after obtaining the educational or technical qualification prescribed for such appointment unless otherwise specified in the special rules.

*குறிப்பு/ Note:*

(a) *விண்ணப்பதாரர் அறிவிக்கை நாளன்றோ அல்லது அறிவிக்கை நாளுக்கு முன்னதாகவோ நிர்ணயிக்கப்பட்ட கல்வி / தொழில்நுட்பத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.*

*Candidates must possess the prescribed educational / technical qualification, on or before the date of notification.*

(b) *இணைக்கல்வித் தகுதி பெற்றிருப்பதாக உரிமை கோரும் விண்ணப்பதாரர்*, இணைக்கல்வித் தகுதி என அறிவிக்கப்பட்ட அரசாணையினை / பிற ஆவணங்களை சான்றாவணமாக தேர்வுக்கான அறிவிக்கை நாளுக்கு முன்னதாகவோ அல்லது அறிவிக்கை நாளன்றோ பெற்று வைத்திருக்க வேண்டும். மேலும், அந்த அரசாணையினை தேர்வாணையம் கோரும்பொழுது, சமர்ப்பிக்க அல்லது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

*Candidates claiming equivalence of qualification should possess evidence for such claim in the form of G.O./ other documents, issued on or before the date of notification and the same has to be produced or uploaded when called for.*

## 10. <u>தமிழ் மொழியில் தகுதி</u>
## <u>QUALIFICATION IN TAMIL</u>

தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், **2016** பிரிவு**21**ன் படி எவரும், மாநிலத்தின் ஆட்சிமொழியில், அதாவது தமிழில் போதுமான அறிவு கொண்டிருந்தாலன்றி நேரடி நியமனத்தின் மூலமாக எந்தப் பணியிலும் பணியமர்த்தப்படுவதற்கு தகுதியுடையவர் அல்லர்:

எனினும், எந்தப் பணியிடத்திற்கு நியமனம் நடைபெற இருக்கிறதோ அந்தப் பணியிடத்திற்கு பணி நியமனம் செய்ய, பிறவகைகளில் தகுதியுடையவராக இருக்கும் ஒருவர், அப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும்போது, போதுமான தமிழறிவு கொண்டிருக்கவில்லையென்றாலும் அவர் அந்தப் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டு, பணியமர்த்தம் செய்யப்பட்டால், பணிநியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் **தேர்வாணையத்தினால் நடத்தப்பெறும் இரண்டாம்வகுப்பு மொழித் தேர்வில்** (**முழுத்தேர்வு**) **தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்**. **தவறினால்**, அவர் பணியிலிருந்து விடுவிக்கப்படுவார்.

As per Section 21 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, no person shall be eligible for appointment to any service by direct recruitment unless he has an adequate knowledge of the official language of the State, namely, Tamil:

Provided that a person, being otherwise qualified for appointment to the post to which recruitment is to be made, may apply for recruitment to the post, despite the fact that, at the time of such application, he does not possess an adequate knowledge of Tamil. If selected and appointed, such a candidate should pass the Second Class Language Test (Full Test) in Tamil conducted by the Commission, within a period of two years from the date of appointment, failing which he will be discharged from service.

### <u>விளக்கம்/ Explanation</u>

பின்வரும் தகுதியைப் பெற்றிருக்கும் ஒருவர் தமிழில் போதிய தகுதி உடையவராகக் கருதப்படுவர். ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதியாகவும் அதற்கு மேலும் இருந்தால், பள்ளியிறுதிப் பொதுத்தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) அல்லது அதற்கு சமமான தேர்வு / மேல்நிலை வகுப்பு (பன்னிரெண்டாம்வகுப்பு) / பட்டப் படிப்பு/ அதற்கும்

மேற்பட்ட கல்வித்தகுதிகளில் தமிழை ஒரு மொழிப்பாடமாக எடுத்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது உயர்நிலைப்பள்ளிப் படிப்பில் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு பள்ளியிறுதிப் பொதுத்தேர்வை அல்லது அதற்கு இணையான தேர்வினைத் தமிழில் எழுதித்தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது தேர்வாணையத்தினால் நடத்தப்பெறும் இரண்டாம்வகுப்பு மொழித்தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

For this purpose a person shall be deemed to possess an adequate knowledge of Tamil if, in the case of a post for which the educational qualification prescribed is the Minimum General Educational Qualification and above, he has passed the SSLC examination or its equivalent examination / HSC / Degree, etc., with Tamil as one of the languages or studied the High School Course in Tamil medium and passed the SSLC examination or its equivalent examination in Tamil medium; or passed the Second Class Language Test (Full Test) in Tamil conducted by the Commission.

சில பதவிகளுக்கான தெரிவு மற்றும் பணி நியமனத்திற்கு, குறிப்பிட்ட நிலையில் தமிழறிவு கட்டாயம் என சிறப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட நிகழ்வுகளில், விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தமிழறிவினை பெற்றிருந்தால் மட்டுமே தெரிவிற்கு தகுதியுடையவராவார்.

In the case of recruitment to posts for which the Special Rules prescribe a mandatory knowledge of Tamil at a specified level, as a pre-requisite to selection and appointment, candidates possessing such prescribed knowledge of Tamil alone shall be eligible for selection.

## 11. <u>பிற நிபந்தனைகள்</u>

## <u>OTHER CONDITIONS</u>

**11-A.** குறிப்பிட்டு சொல்லப்பட்டிருந்தாலன்றி, அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையானது தோராயமானதாகும். மேலும், அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாறுதலுக்குட்பட்டதாகும்:

Unless and otherwise specified, the number of vacancies notified is approximate and is liable to modification as indicated below:

ஒரேநிலை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிலைகளில் நடைபெறும் எழுத்துத் தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் தெரிவுகளில், காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையானது, தெரிவின் எந்த நிலையிலும், அதாவது கொள்குறிவகைத் தேர்வு /விரிந்துரைக்கும் வகைத் தேர்வு முடிவுகள் வெளியாகும் முன்னரோ அல்லது கலந்தாய்வு தொடங்குவதற்கு முன்னரோ மாறுதலுக்குட்பட்டதாகும்.

In the case of selections based on a single level written examination *(multiple choice based objective type examination)* / multiple level written examination *[comprising of a preliminary examination (multiple choice based objective type examination) and main written examination (descriptive type examination)]* alone, the vacancies are liable to be modified at any stage of the recruitment, viz., before publication of the results of the written examination *(multiple choice based objective type examination or descriptive type examination)* / beforethe start ofcounselling, as the case may be.

ஒரேநிலையில் நடைபெறும் எழுத்துத்தேர்வுடன் கூடிய நேர்முகத் தேர்வின் அடிப்படையிலோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட நிலைகளில் நடைபெறும் எழுத்து தேர்வுகளுடன் கூடிய நேர்முகத்தேர்வின் அடிப்படையிலோ நடத்தப்படும் தெரிவுகளில், காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையானது, தெரிவின் எந்த நிலையிலும், அதாவது, கொள்குறிவகை எழுத்துத்தேர்வு / விரிந்துரைக்கும்வகை எழுத்துத்தேர்வு முடிவுகள் வெளியாகும் முன்னரோ / நேர்முகத் தேர்விற்கு விண்ணப்பதாரர் அனுமதிக்கப்படுவதற்கு முன்னரோ / நேர்முகத்தேர்வு முற்றிலும் நிறைவடைவதற்கு முன்னரோ மாறுதலுக்குட்பட்டதாகும்.

In the case of selections based on a single level written examination *(multiple choice based objective type examination)*and oral test / multiple level written examination *[comprising of a preliminary examination (multiple choice based objective type examination) and main written examination (descriptive type examination)]* and oral test, the vacancies are liable to be modified at any stage of the recruitment, viz., before

publication of the results of the written examination *(multiple choice based objective type examination or descriptive type examination)* / before admission of candidates to the oral test / before conclusion of the oral test, as the case may be.

காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையில் திருத்தம் செய்யப்படுகின்ற பொழுது, தேர்விற்கான அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட விகிதாச்சாரத்தின்படி, அடுத்தடுத்த நிலைகளுக்கு தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரரின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படும். எனினும், காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையில் ஏற்படும் உயர்வு, எந்தவொரு நிலையிலும், அதற்கு முந்தைய நிலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரரின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

Whenever the vacancies are revised, the number of candidates selected to the successive stages would also be revised commensurately, in accordance with the ratio originally notified for the recruitment. Increase in vacancies in the later stages of the recruitment would not in any case entail the consideration of candidates unsuccessful in the previous stages.

**11-B.** தேர்விற்கு விண்ணப்பிக்கும் முன்னால் / தேர்வு எழுதுவதற்கு முன்னால், தேர்வாணைய அறிவிக்கை நாளன்று, அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது, கல்வித்தகுதி, இலவசக் கட்டண வாய்ப்புகளின் எண்ணிக்கை தொடர்பான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து, தேர்வுக்கான அனைத்து தகுதிகளையும் பெற்றிருப்பதை விண்ணப்பதாரர் உறுதி செய்து கொள்ள வேண்டும். தேர்வின் அனைத்து நிலைகளுக்கும் விண்ணப்பதாரர் அனுமதிக்கப்படுவது, விண்ணப்பதாரர் தகுதி நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்குட்பட்டதும் முற்றிலும் தற்காலிகமானதாகும்.

Before applying for / appearing for the examination, the applicants should ensure their eligibility for such examination and that they fulfil all the conditions in regard to age, educational qualifications, number of chances for fee concession, etc., as prescribed by the Commission’s notification. Their admission to all stages of the examination will be purely provisional, subject to their satisfying the eligibility conditions.

**11-C.** இணையவழி விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரால் அளிக்கப்படும் தகவல்களின் அடிப்படையில் மட்டுமே, விண்ணப்பதாரர் கோரும் பிறந்த தேதி, கல்வித் தகுதி / தொழில்நுட்பக் கல்வித் தகுதி, பணி முன்அனுபவம், சமூகப் பிரிவு, இருப்பிடம், விருப்பப்பாடம், தேர்வு எழுத தெரிவு செய்யப்பட்ட மொழி (விரிந்துரைக்கும் வகைத் தேர்வு), சிறப்புப் பிரிவுகளான, தமிழ் வழியில் கல்வி பயின்றோர் / நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் / முன்னாள் இராணுவத்தினர் / ஆதரவற்ற விதவைகள் முதலியன ஏற்றுக் கொள்ளப்படும். மேற்குறிப்பிட்ட தகவல்களைத் தேர்வாணையம் ஐயமறத் தெரிந்து, ஏற்றுக் கொள்ளும் வரை விண்ணப்பதாரரின் விண்ணப்பம் தற்காலிகமாக மட்டுமே ஏற்கப்படும். எழுத்துத் தேர்வு / சான்றிதழ் சரிபார்ப்பு / நேர்முகத் தேர்வு / கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவது அல்லது தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாக விண்ணப்பதாரரின் பெயர் சேர்க்கப்படுவதால் மட்டுமே, ஒரு விண்ணப்பதாரர் பதவி நியமனம் பெற உரிமை அளிக்கப்பட்டவராக மாட்டார். எனவே, விண்ணப்பதாரரின் விண்ணப்பம் எல்லா நிலைகளிலும் தற்காலிகமானது மற்றும் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறு என்றாலோ தேர்வாணைய அறிவுரைகள் அல்லது விதிகள் மீறப்பட்டுள்ளன என்று கண்டறியப்பட்டாலோ, எந்நிலையிலும், தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர்கூட, விண்ணப்பத்தை உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கும் உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு.

The claims of the applicants with regard to the date of birth, educational/ technical qualifications, experience, community, nativity, optional subject, choice of language in which the examination is to be written (in the case of descriptive type examination), special categories like persons studied in Tamil medium/persons with benchmark disability / ex-serviceman / destitute widow, etc., are accepted, based only on the details furnished by them in their online applications. The admission of candidature, therefore, will be provisional and subject to the satisfaction of the Commission regarding their claims. Mere admission to the written examination / certificate verification / oral test / counselling or inclusion of name in the selection list will not confer on the candidates any right to appointment. The candidature is therefore, provisional at all stages and the Commission reserves the right to reject candidature at any stage after due process, even after selection

has been made, if a wrong claim or violation of rules or instructions is confirmed.

**11-D.** **இணையவழி** விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு, விண்ணப்பதாரரால் எழுப்பப்படும் உரிமைகோரல்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

Any claim by an applicant made after the submission of an online application will not be entertained.

**11-E.** விண்ணப்பதாரர், அவ்வப்பொழுது தேர்வாணையத்தினால் வெளியிடப்படும் அறிவிக்கையின் அடிப்படையில், ஒவ்வொரு தேர்வுக்கும், தனித்தனியே இணையவழியில் விண்ணப்பத்தினை, விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளுக்கிணங்க சமர்ப்பிக்க வேண்டும்.

Applicants are advised to apply online separately for each recruitment based on thenotifications being issued by the Commission from time to time, in accordance with the instructions to applicants.

**11-F.** விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை இணையவழியாக சமர்ப்பிக்கும்போது ஆவணங்களையோ அல்லது இணையவழி விண்ணப்பத்தின் நகலையோ தேர்வாணைய அலுவலகத்துக்கு அனுப்பத் தேவையில்லை. எனினும், விண்ணப்பதாரர் இணையவழி விண்ணப்பத்தில் / ஒருமுறைப் பதிவில் கீழ்க்காணும் உரிமைகோரல்களுக்கு ஆதாரமாக கோரப்படும் தகவல்களான சான்றிதழ்எண், சான்று வழங்கும் அலுவலர் மற்றும் சான்று வழங்கிய நாள் போன்ற விவரங்களை கட்டாயம் அளிக்க வேண்டும். அளிக்கத் **தவறினால்**, பின்னர் அதற்கான உரிமை கோரமுடியாது.

(i) சமூகப்பிரிவு/வகுப்பு
(ii) கல்வித் தகுதி
(iii) தமிழ்வழியில் கல்வி பயின்றோர்
(iv) ஆதரவற்ற விதவை
(v) முன்னாள் இராணுவவீரர்
(vi) நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி
(vii) திருநங்கைகள்
(viii) மருத்துவ / வழக்குரைஞர் மன்ற பதிவு
(ix) ஓட்டுநர் உரிமம், போன்றவைகள்

Applicants need not send any copies of certificates / application to the Commission. However, they must furnish details such as certificate number, issuing authority and date of issue, required in the online application / One Time Registration, in support of the following claims, failing which such claims shall not be permitted.

(i) Community
(ii) Educational Qualification
(iii) Persons Studied in Tamil Medium.
(iv) Destitute Widow
(v) Ex-serviceman
(vi) Person with Benchmark Disability
(vii) Transgender
(viii) Medical / Bar Council Registration
(ix) Driving Licence, etc.

**11-G.** **நியமனத்திற்கு போட்டியிடத் தகுதியுடையவர் எனத் தேர்வாணையத்தால் கருதப்படும் விண்ணப்பதாரர், தேர்வாணையத்தால் அழைக்கப்பட்டால், சென்னை அல்லது மாநிலத்தின் பிற மையங்களுக்கு தனது சொந்தச்செலவில் வருவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.**

An applicant found by the Commission qualified to compete for the selection must be prepared to appear when summoned before the Commission at Chennai, or at any other centre in the State, at his own expense.

**11-H.** **விண்ணப்பதாரர் ஒருவரை தேர்வாணையம் தெரிந்தெடுப்பதால் மட்டுமே அவர் அரசுத்துறையில் பணிநியமனம் பெற உத்தரவாதமளிப்பதாகாது.**

Selection of a candidate by the Commission carries with it no guarantee of appointment in a Government department.

## 12. தகுதி நீக்கம், முதலியன
## DEBARMENT, ETC.

**12-A.** **கீழ்க்காணும் அட்டவணையில் கலம்2ல் குறிப்பிடப்பட்டுள்ள குற்ற நடவடிக்கைகளுக்காக கலம்3ல் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு விண்ணப்பதாரர் தேர்வாணையத்தால் தேர்வெழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர். இது மட்டுமல்லாமல், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சில நடவடிக்கைகளுக்காக விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும் அல்லது விடைத்தாள்/ விடைப்புத்தகம் செல்லாததாக்கப்படும். அத்தகைய விண்ணப்பதாரரின் மீது சில இனங்களில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.**

The period for which candidates shall be debarred from appearing for the examinations / participating in the recruitment processes conducted by the Commission are shown in column (3) against the respective offences shown in column (2). Besides debarment, the candidate shall also be liable to rejection of candidature after due process, invalidation of answer papers, as the case may be. Criminal action may also be initiated against such candidates, wherever indicated.

...அட்டவணை/ Table

| வ. எண் Sl. No. | குற்றத்தின் தன்மை / Nature of Offence | விலக்கி வைக்கப்படும் காலம் Period of Debarment |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், செயலாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், பிறஅலுவலர்கள் அல்லது ஊழியர்களின் ஆதரவைப் பெற நேரடியாகவோ, கடிதத்தின் மூலமாகவோ, உறவினர், நண்பர், காப்பாளர், அலுவலர் அல்லது வேறொருவர் மூலமாகவோ செல்வாக்கை செலுத்த முயற்சித்தல்<br><br>Attempts to influence the Chairman, Members of the Commission, Secretary, Controller of Examinations or any officer or staff of the Commission, personally / by letter / through relatives, friends, patrons, officials or other persons. | மூன்று ஆண்டுகள்<br><br>Three Years |
| 2. | சாதிச் சான்றிதழ் / ஆதரவற்ற விதவைச் சான்றிதழ்/ ஊனமுற்றோர் சான்றிதழ் / முன்னாள் இராணுவ வீரருக்கான சான்றிதழ் / திருநங்கைகளுக்கான சான்றிதழ் / தமிழ்வழியில் பயின்றோருக்கான சான்றிதழ் போன்ற சான்றிதழ்களை போலியாக சமர்ப்பித்தல், ஆவணங்கள் அல்லது சான்றிதழ்களில் ஏதேனும் திருத்தங்கள் அல்லது சேதங்களை ஏற்படுத்துதல்<br><br>Production of bogus community / destitute widow / differently abled / ex-serviceman / transgender / person studied in Tamil medium certificates, etc. Tampering or alteration in the documents or certificates. | நிரந்தரமாக மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.<br><br>Permanent<br>Initiation of criminal action |

| | | |
|---|---|---|
| 3. | தெரிவு தொடர்பான பணிகளின் எந்தநிலையிலும் கீழ்க்கண்ட உண்மைகளை மறைத்தல்:<br>(i) முந்தைய தேர்வுகளில் கலந்து கொண்டது மற்றும் இலவச சலுகையினைப் பயன்படுத்தியது.<br>(ii) அரசு அல்லது மத்திய-மாநில அரசின் கீழ் உள்ள நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், சட்டத்தின் வாயிலாக நிறுவப்பட்ட நிறுவனங்கள், அரசுத்துறைக் கழகங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவற்றில் முறையாகவோ / தற்காலிகமாகவோ பணிபுரிந்து வருவது/ பணிபுரிந்தது<br>(iii) குற்றவியல் நிகழ்வுகள், கைதானது, குற்றங்களுக்கான தண்டனை பெற்றது, ஒழுங்கு நடவடிக்கைகள் முதலியன<br>(iv) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் / மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் / இதர முகமைகளினால் தேர்வு எழுதும் உரிமை இரத்து செய்யப்பட்டது அல்லது தகுதியற்றவராக அறிவிக்கப்பட்டது.<br><br>Suppression of material information, at any stage of the selection process, regarding:<br>(i) Previous appearances or availing free chances.<br>(ii) Regular / temporary employment in Government or Quasi-Government organizations, local bodies, public sector units, statutory bodies, public corporations, Universities, etc.<br>(iii) Criminal cases, arrests, convictions, disciplinary proceedings, etc.<br>(iv) Debarment or disqualification by Union Public Service Commission / State Public Service Commissions / other agencies | ஓராண்டு<br><br>One Year |

| | | |
|---|---|---|
| 4. | **தேர்வறையின் உள்ளே மின்னணு சாதனங்களான செல்லிடப்பேசிகள், நினைவூட்டுக் குறிப்புகள் உள்ளடக்கிய கடிகாரம் மற்றும் மோதிரங்கள்(watches and rings with inbuilt memory), புளூடூத் உபகரணங்கள்(Blue tooth devices), தொடர்பு சிப்புகள்(communications chips) , வேறு ஏதேனும் மின்னணு உபகரணங்கள் ஆகியவற்றை வைத்திருத்தல், அறைக் கண்காணிப்பாளர் / வேறு அலுவலர்கள் அல்லது வெளிநபரின் உதவியை நாடுதல்**<br><br>Possession of electronic devices such as cellular phones, watches and rings with in-built memory notes, Bluetooth devices, communication chip, any other electronic devices inside the examination room and also seeking the help of / assistance of any official / invigilator / any outsider in answering question, | **நிரந்தரமாக**<br><br>Permanent |
| 5. | **தேர்வறையின் உள்ளே மின்னணு சாதனங்கள்அல்லாத P & G Design Data புத்தகம், புத்தகங்கள், குறிப்புகள், வழிகாட்டிக் கையேடுகள், கைப்பைகள், மற்றும் இதர அனுமதிக்கப்படாத பொருட்களை வைத்திருத்தல்**<br><br>Possession of non-electronic devices such as P&G Design Data Book, books, notes, guides, handbags, other non-permitted materials, etc. inside the examination room. | **மூன்றுஆண்டுகள்**<br><br>Three Years |

| | | |
|---|---|---|
| 6. | **சகதேர்வர்களுடன் கலந்தாலோசித்தல், சகதேர்வர்களைப் பார்த்து எழுதுதல்/ மற்றவர்களை தன்னிடமிருந்துப் பார்த்து எழுத அனுமதித்தல், புத்தகங்கள் அல்லது அச்சிடப்பட்ட /தட்டச்சு செய்யப்பட்ட/ கையினால் எழுதப்பட்ட குறிப்புகளைப் பார்த்து எழுதுதல் போன்றவை.**<br><br>Consulting with other candidates, copying from other candidates, permitting others to copy from his / her answer paper, copying from books or notes which are printed / typewritten / hand written, etc. | **மூன்றுஆண்டுகள்**<br><br>Three Years |
| 7. | **பட்டியலில் மேற்கூறப்பட்ட இனங்களைத் தவிர, தேர்வு அறையின் உள்ளேயோ அல்லது வெளியிலோ, ஏதேனும் ஒழுங்கீனம் அல்லது முறைகேடுகளில் ஈடுபடுதல்.**<br><br>In addition to the offences listed herein, the involvement of candidates in any indiscipline or irregular practices within / outside the examination room. | **மூன்றுஆண்டுகள்**<br><br>Three Years |
| 8. | **விடைகளுக்கு தொடர்பில்லாத தேவையற்ற குறியீடுகள், தரக்குறைவான மற்றும் ஆபாசமான சொற்களை விடைத்தாள்களில் எழுதுதல்.**<br><br>Written certain unwarranted remarks unconnected with answers to the subject concerned in the answer books, etc., i.e., vulgar, derogatory and obscene language. | **மூன்று ஆண்டுகள்**<br><br>Three Years |

| | | |
|---|---|---|
| 9. | **விடைத்தாள்களை தாராளப்போக்குடன் திருத்துமாறு அல்லது அதிக மதிப்பெண்களை வழங்குமாறு அல்லது பரிவோடு திருத்தும்படியும் தேர்வாளரைக் கோருதல்**<br><br>Appeal to the examiners in the answer books, to value liberally or to award more marks or to be sympathetic, etc. | **ஓராண்டு**<br><br>One Year |
| 10. | **தேர்வாளரை அணுகுதல் அல்லது தேர்வாளரை அணுக முயற்சித்தல் அல்லது அவர் சார்பாக மற்றவர்களைத் தேர்வாளரை அணுகக் கோருதல்**<br><br>Approaching or attempting to approach an examiner or getting other people to approach an examiner on his / her behalf. | **நிரந்தரமாக மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.**<br><br>Permanent, Initiation of criminal action |
| 11. | **தேர்வுக்கூடத்திலிருந்து, பயன்படுத்தப்பட்ட / பயன்படுத்தப்படாத விடைத்தாளினை / வினாத்தாளுடன் கூடிய விடைப்புத்தகத்தினை, முழுமையாகவோ / பகுதியாகவோ அறைக்கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்காமல் எடுத்துச் செல்லுதல்.**<br>**OMR விடைத்தாள் /வினாக்களுடன் கூடிய விடைப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக்குறியீடு (மற்றும்/அல்லது) OMR ட்ராக் (track) சேதப்படுத்துதல்.**<br><br>Taking away from the examination hall, the whole or part of any used / unused OMR answer sheet / answer booklet, without handing it over to the room invigilator.<br><br>Tampering with the Barcode and/or OMR Track printed on the OMR answer sheet / question -cum- answer booklet. | **மூன்று ஆண்டுகள்**<br><br>Three Years |

| | | |
|---|---|---|
| 12. | மது அருந்திவிட்டு வரும் விண்ணப்பதாரர், தேர்வுக்கூடத்தில் புகைப்பிடிக்கும் விண்ணப்பதாரர், வாக்குவாதத்தில் ஈடுபடும் விண்ணப்பதாரர் மற்றும் முதன்மைக் கண்காணிப்பாளரிடமோ / ஆய்வுக் குழுவினரிடமோ/ தேர்வுக்கூடக் கண்காணிப்பாளரிடமோ / சக தேர்வெழுதுபவர்களுடனோ தேர்வு அறையிலோ அல்லது தேர்வுக்கூட வளாகத்திலோ தேர்வு நடைபெறுவதற்கு முன்னரோ, பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும் பொழுதோ, முறைதவறி நடந்து கொள்ளுதல்.<br><br>Candidates found smoking / intoxicated, or found to have entered into a quarrel of any kind, or to have misbehaved with the Chief Invigilator or with the inspection authorities or with the invigilator or with any other candidate either in the examination hall or inside the campus of the examination venue, either before, during or after the examination. | மூன்றுஆண்டுகள்<br><br>Three Years |
| 13. | ஆள்மாறாட்டம், தேர்வு நடைபெறுவதை முறியடிக்கும் வகையில் நடந்து கொள்ளுதல் போன்ற கடுமையான ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடுதல்<br><br>Indulging in grave malpractices, including impersonation, amounting to subversion of the conduct of examination. | நிரந்தரமாக மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.<br><br>Permanent, Initiation of criminal action |

**12-B.** விண்ணப்பதாரருக்கான அறிவுரைகள், வினாத் தொகுப்பு, **OMR** விடைத்தாள், வினாத்தாளுடன் கூடிய விடைப்புத்தகம் மற்றும் தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளில் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்டவற்றை மீறினால், விண்ணப்பதாரர் நிரந்தரமாகவோ அல்லது தேர்வாணையத்தால் தக்கதென கருதப்படும் காலம் வரையிலோ விலக்கி வைக்கப்படுவதுடன் அவர்தம் விண்ணப்பமும் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படலாம். மேலும், அவரது விடைத்தாள் / விடைப்புத்தகம் செல்லாததாக்கப்படலாம் அல்லது தேர்வாணையத்தால் விதிக்கப்படும் வேறு ஏதேனும் அபராதத்திற்கும் உள்ளாவர்.

Violation of any one or more of the instructions contained in the Commission's Instructions to Applicants / instructions printed on the question booklet or OMR answer sheet or question-cum-answer booklet / memorandum of admission (hall ticket) shall also make the candidate liable to debarment, either permanently or for such period as the Commission deems fit, and/or rejection of candidature after due process and /or invalidation of answer sheet / answer booklet and/or any other penalty, as decided by the Commission.

**13.** <u>**சான்றிதழ் சரிபார்ப்பு**</u>
<u>**CERTIFICATE VERIFICATION**</u>

In respect of notifications where certificates are required to be uploaded alongwith Online Application, the instructions available in paragraph 2 W. shall be referred.

இணையவழி விண்ணப்பத்துடன் தேவையான சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்யும்படி அறிவிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருப்பின், அது தொடர்பான அறிவுறுத்தல்களுக்கு விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின் பத்தி 2W -ஐப் பார்க்கவும்

**13-A.** விண்ணப்பதாரரால் இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் மற்றும் விண்ணப்பதாரரின் தகுதியினை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ் சரிபார்ப்பு நடத்தப்படும். சான்றிதழ்

சரிபார்ப்பானது, தெரிவுப்பணியின் அடுத்தநிலை அல்ல. சான்றிதழ் சரிபார்ப்பானது, தேர்வாணையத்தால் தேவையெனக் கருதப்படும் பட்சத்தில், எந்த நிலையிலும் மேற்கொள்ளப்படும்.

Certificate verification is carried out to verify the claims made by the candidates in the online application and is meant to confirm the eligibility of the candidates. Certificate verification is not the next stage of the selection process. Certificate verification may be undertaken at any stage deemed necessary by the Commission.

**13-B.** விண்ணப்பதாரர் இணையவழி விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள விவரங்களுக்கு ஆதாரமாக மூலச்சான்றிதழ்களை இணையவழிச் சான்றிதழ் சரிபார்ப்பிற்காக, தேர்வாணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் ஸ்கேன்**(Scan)** செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். **தவறினால்**, விண்ணப்பதாரரின் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

The original certificates in support of the claims made in the online application, should be scanned and uploaded for onscreen certificate verification, during the period stipulated by the Commission, failing which candidature is liable to be summarily rejected after due process.

**13-C.** ஒவ்வொரு ஆவணங்களும் / சான்றிதழ்களும் **200 DPI** ஒளிச்செறிவில் **(resolution) 300KB** முதல் **500KB –** க்குள் **PDF** வடிவில் இருக்க வேண்டும்.

Each and every document / certificate must be in PDF format and the file size must be between 300 KB and 500 KB, with a minimum resolution of 200 DPI.

**13-D.** தேர்வாணைய இணையதளத்தில் அவ்வப்போது வெளியிடப்படும் விண்ணப்பதாரருக்கான குறிப்பாணையின்படி, தங்களது ஆவணங்களை / மூலச் சான்றுகளை தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தால் நடத்தப்படும் இ-சேவை மையம் வழியாக பதிவேற்றம் செய்யலாம்.

The uploading of the documents / certificates shall be done through listed e-seva centres run by Tamil Nadu Arasu Cable TV, as mentioned in the Commission's memorandum to candidates hosted in the Commission's website.

**13-E.** **இவ்வாறு பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து மூலச்சான்றுகளும், நேரடி சான்றிதழ் சரிபார்ப்பிற்கு விண்ணப்பதாரர் அழைக்கப்படும்போதோ / தேர்வாணையம் கேட்கும்போதோ விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

All original certificates thus uploaded, shall be produced, when the candidate is summoned for physical certificate verification or when called for by the Commission.

**13-F.** **இணையவழி விண்ணப்பத்தில் சிறப்பு இனங்களைக் கோரியுள்ள விண்ணப்பதாரர், அதற்கான படிவங்களை தேர்வாணைய இணையதளத்திலும் சான்றிதழ் சரிபார்ப்புக்கான குறிப்பாணையில் அச்சிடப்பட்ட QR Code-லும் காணலாம். விண்ணப்பதாரர் மேற்குறிப்பிட்ட படிவங்களின்படி மட்டுமே ஆதார ஆவணங்களை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும்.**

Candidates must upload / produce certificates in support of their claims to belong to special categories, made in the online application, as per the formats available in the Commission's website andin the QR code printed on the memorandum of admission to certificate verification.

**13-G.** **இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படாத தகவல்களுக்கு ஆதரவாக பதிவேற்றம் செய்யப்படும்/ சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது/பரிசீலிக்கப்பட மாட்டாது.**

Documents uploaded / produced in support of claims **not** made in the online application shall not be entertained / considered.

**13-H.** **தேர்வாணையத்திற்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரரிடம் கோரப்படும் ஆவணங்கள் கடந்த காலங்களில் ஏற்கனவே பதிவேற்றம் செய்து/ சமர்ப்பித்து இருந்தாலும், அவற்றைக் கோரும்பொழுது மறுபடியும் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும்.**

A candidate who had applied to the Commission on a previous occasion should upload / produce the required documents, when called for, even though the documents might have been uploaded / produced previously.

**13-I.** **இணையவழியிலோ, நேரடியாகவோ சான்றிதழ் சரிபார்ப்புக்காக பதிவேற்றம் செய்யப்படும் / சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் தமிழிலோ, ஆங்கிலத்திலோ, இருமொழிகளிலுமோ இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தமிழ் அல்லது ஆங்கிலம் அல்லாத பிறமொழிகளில் மட்டுமே வழங்கப்பட்ட ஆவணங்களை தமிழிலோ, ஆங்கிலத்திலோ மொழிபெயர்த்து மூலச்சான்றை அளித்த அலுவலரின் சான்றொப்பத்தோடு பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். தமிழ் அல்லது ஆங்கிலம் அல்லாத பிறமொழிகளில் மட்டுமே வழங்கப்பட்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யும்/ சமர்ப்பிக்கும் பட்சத்தில், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Documents uploaded at the time of onscreen certificate verification / produced at the time of physical certificate verification must be in Tamil or English or both. Candidates possessing certificates / documents in languages other than Tamil or English shall obtain and upload / produce a translated version of the said certificate(s) / document(s) in Tamil or English, attested by the authority who originally issued the certificate / document.Uploading / production of documents issuedonly in languages other than Tamil or English shall result in the rejection of candidature after due process.

**13-J.** **தேர்வாணையம் விரும்பும்பொழுது, விண்ணப்பதாரரை அடையாளம் காண்பதற்காக Biometric Verification மேற்கொள்ளப்படும்.**

Biometric verification of the identity of the candidates shall be undertaken whenever the Commission so desires.

## 14. இணையவழி விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட தகவல்களை சரிபார்த்தல்

## VERIFICATION OF CLAIMS MADE IN THE ONLINE APPLICATION

**விண்ணப்பதாரரால் இணையவழி விண்ணப்பத்தில் அளிக்கப்பட்ட தகவல்கள், குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய ஆவணங்கள் வாயிலாக சான்றிதழ் சரிபார்ப்பின்போது சரிபார்க்கப்படும்.**

Information furnished / claims made in the online application shall be verified against the documents indicated at the time of certificate verification.

### 14-A. பெயர் Name

(i) விண்ணப்பதாரரின் பெயர், அவரால் பதிவேற்றம் செய்யப்பட்ட / சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் சரிபார்க்கப்படும்.

The name of the candidate shall be verified against all documents uploaded / produced.

(ii) இணையவழி விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள பெயருக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயருக்கும் (அதாவது எழுத்துப் பிழை, பெயரில் எழுத்துகளுக்கு இடையே இடைவெளி, தலைப்பெழுத்து) ஏதேனும் வேறுபாடு இருப்பின், அதற்குரியவிளக்கத்தினை ஓர் உறுதிமொழியாக, சான்றிதழ் சரிபார்ப்பின்போது, உரிய ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்ய /சமர்ப்பிக்க வேண்டும்.

Any variation in the name(viz., spelling, spacing, initials) as furnished in the online application and that found in one or more documents, must be explained in an undertaking to be uploaded / produced, along with the documents at the time of the certificate verification.

(iii) **பெயர் மாற்றம் அல்லது மாற்றுப்பெயர் பயன்படுத்துதல் தொடர்பான தகவல்களுக்கு ஆதாரமாக, அரசிதழில் வெளியான அறிவிக்கை/உரிய நீதிமன்ற ஆணை முதலிய ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். தவறினால், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Claims of change of name or use of alias must be supported by uploading / producing a notification in the Government Gazette / appropriate court order. Failure to upload / produce such a document shall result in rejection of candidature after due process.

(iv) **ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரில், ஏதேனும் திருத்தம் செய்யப்பட்டிருப்பின், அத்திருத்தம் தொடர்பாக மூலஆவணம் வழங்கும் அலுவலரால் சான்றொப்பம் இடப்பட்டோ அல்லது மாற்றாக விண்ணப்பதாரரின் பெயர் சரியாக குறிப்பிடப்பட்ட புதிய ஆவணத்தினையோ பதிவேற்றம் செய்ய/ சமர்ப்பிக்க வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Name corrections in the documents must be attested by the authority issuing the document or a fresh document bearing the correct name of the candidate must be uploaded / produced instead. Any failure in this regard shall result in rejection of candidature after due process.

**14-B.** **<u>பாலினம்</u>**
**<u>Gender</u>**

(i) **மாற்றுச்சான்றிதழ் /சாதிச் சான்றிதழின் அடிப்படையில் பாலினம் (திருநங்கைகள் தவிர) சரிபார்க்கப்படும்**.

Gender claimed (other than Transgender) shall be verified against the Transfer Certificate / Community Certificate.

(ii) **திருநங்கைகள் / திருநங்கைகள்(ஆண்) / திருநங்கைகள் (பெண்) தொடர்பான தகவல்கள், தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் மூலம் சரிபார்க்கப்படும்.**

Transgender / Transgender (Male) / Transgender (Female) claim shall be verified against the **Transgender ID card issued only by the Tamil Nadu Transgender Welfare Board.**

(iii) **தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம் அல்லாத மற்ற அமைப்புகளால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினை பதிவேற்றம் செய்தாலோ / சமர்ப்பித்தாலோ விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Uploading / production of Transgender ID card, issued by any authority other than the Tamil Nadu Transgender Welfare Board shall result in rejection of candidature after due process.

(iv) **இணையவழி விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள திருநங்கைகள் அல்லது திருநங்கைகள்(ஆண்) அல்லது திருநங்கைகள் (பெண்) தொடர்பான தகவல்கள் திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்க வேண்டும். இதில் ஏதேனும் முரண்பாடு இருப்பின், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Transgender **or** Transgender (Male) **or** Transgender (Female) claim made in the online application must correspond to what is stated in the Transgender ID card. Any discrepancy in this regard shall result in rejection of candidature after due process.

(v) **பாலினம் தொடர்பாக விண்ணப்பதாரரின் உரிமைகோரலுக்கு தேவையான ஆவணங்கள் ஆதாரமாக இல்லாதிருப்பின், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Gender claim unsupported by the requisite documents shall result in rejection of candidature after due process.

## 14-C. <u>பிறந்த தேதி</u>
## <u>Date of Birth</u>

(i) **விண்ணப்பதாரரின் பிறந்த தேதி, தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் அல்லது தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி வாரியத்தால் முறையே வழங்கப்படும் பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரெண்டாம் வகுப்பு**

மதிப்பெண் பட்டியலுடன் சரிபார்க்கப்படும். பிறந்த தேதி குறிப்பிடப்படாமல் இருக்கும் ஓரியண்டல் பள்ளி மதிப்பெண் பட்டியல் வைத்திருக்கும் விண்ணப்பதாரர், பத்தாம் வகுப்பு / பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலுக்கு பதிலாக தங்களது மாற்றுச் சான்றிதழை/ பிறப்புச் சான்றிதழைப் பதிவேற்றம் செய்ய/ சமர்ப்பிக்க வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

The date of birth shall be verified against the Tenth Standard (SSLC) or Twelfth Standard (HSC) mark sheet, issued by the Tamil Nadu Board of Secondary Education and Tamil Nadu Board of Higher Secondary Education, respectively, except for candidates who possess the Oriental School Leaving Certificate (OSLC) wherein their date of birth is not mentioned. Such candidates must upload / produce their Transfer Certificate / Birth Certificate in lieu of their tenth standard / twelfth standard mark sheet.Failure to upload / produce such a certificate shall result in rejection of candidature after due process.

(ii) விண்ணப்பதாரரின் பிறந்த தேதி, பிற வாரியங்களிலிருந்து பெறப்பட்ட பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் வாயிலாகவும் சரிபார்க்கப்படும். பத்தாம் வகுப்பு / பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலில் விண்ணப்பதாரரின் பிறந்த தேதி குறிப்பிடப்படாமல் இருப்பின், விண்ணப்பதாரர் அவர்களது பிறப்புச் சான்றிதழ் / மாற்றுச் சான்றிதழ் / பட்டப்படிப்பு மதிப்பெண் பட்டியல் போன்ற ஆவணங்களை தங்களது பத்தாம்வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலுக்கு மாற்றாக பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கவேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

The date of birth shall also be verified against the Tenth Standard or Twelfth Standard mark sheet issued by other Boards. In this case, those candidates whose date of birth is not mentioned in their tenth standard / twelfth standard mark sheet, must upload / produce their Birth Certificate / Transfer Certificate / Degree Mark Sheets, in lieu of the tenth standard or twelfth standard mark sheet. Failure to upload / produce such a document shall result in rejection of candidature after due process.

(iii) வேறு எந்தவித ஆதாரமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

Any other form of evidence will not be accepted.

(iv) பிறந்த தேதிக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆதாரமாக இல்லாத நிலையில், அவருடைய விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

Date of Birth claim unsupported by the prescribed documents shall result in rejection of candidature after due process.

**14-D. <u>தகப்பனார் / தாயின் பெயர்</u>**
**<u>Father's / Mother's Name</u>**

(i) இணையவழியில் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள தகப்பனார் / தாயின் பெயர், சாதிச் சான்றிதழ் / மாற்றுச்சான்றிதழ் மூலம் சரிபார்க்கப்படும்.

Father's / mother's name, whichever is furnished in the online application shall be verified against the Community Certificate / Transfer Certificate.

(ii) இணையவழி விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள தகப்பனார் / தாயின் பெயருக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகப்பனார் / தாயின் பெயருக்கும் ஏதேனும் வேறுபாடு (அதாவது எழுத்துப்பிழை, பெயரில் எழுத்துகளுக்கு இடையே இடைவெளி, தலைப்பெழுத்து) இருப்பின், அதற்குரிய விளக்கத்தினை ஓர் உறுதிமொழியாக, சான்றிதழ் சரிபார்ப்பின்போது, உரிய ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்ய /சமர்ப்பிக்க வேண்டும்.

Any variation in father's / mother's name(viz., spelling, spacing, initials)as furnished in the online application and that found in one or more documents, <u>must</u> be explained in an undertaking to be uploaded / produced, along with the documents at the time of the certificate verification.

(iii) தகப்பனார் / தாயின் பெயர் மாற்றம் அல்லது மாற்றுப்பெயர் தொடர்பான கோரிக்கைகளுக்கு ஆதாரமாக அரசிதழில் வெளியான அறிவிக்கை / உரிய நீதிமன்ற ஆணை பெற்றிருக்க வேண்டும். அந்த ஆவணத்தை

பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

Claims of change of father's / mother's name or use of alias must be supported by uploading / production of a notification in the Government Gazette / appropriate court order. Failure to upload / produce such a document shall result in rejection of candidature after due process.

(iv) ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகப்பனார் / தாயின் பெயரில், ஏதேனும் திருத்தம் செய்யப்பட்டிருப்பின், அத்திருத்தம் தொடர்பாக மூலஆவணம் வழங்கும் அலுவலரால் சான்றொப்பம் இடப்பட்டோ அல்லது மாற்றாக தகப்பனார் / தாயின் பெயர் சரியாக குறிப்பிடப்பட்ட புதிய ஆவணத்தினையோ பதிவேற்றம் செய்ய/ சமர்ப்பிக்க வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

Corrections in father's / mother'sname inthe documents must be attested by the authority issuing the document or a fresh document bearing the correct name must be uploaded / produced instead. Failure in this regard shall result in rejection of candidature after due process.

(v) இணையவழி விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகப்பனார் / தாயார் பெயர் தொடர்பாக, நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆதாரமாக இல்லாத நிலையில், அவருடைய விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**Father's / Mother's Name furnished in the online application, unsupported by the prescribed documents shall result in rejection of candidature after due process.**

**14-E.** <u>மதம்</u>
**<u>Religion</u>**

சில பதவிகளின் தெரிவிற்கு, ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே தகுதியாக இருப்பின், இணையவழி விண்ணப்பத்தில், விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள மதம் தொடர்பான தகவலுக்கு ஆதரவாக அவர்களது சாதிச் சான்றிதழ் /வருவாய்த்துறை அலுவலர்களால் இது குறித்து வழங்கப்பட்ட சான்றிதழைப் பதிவேற்றம்

**செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

In case of recruitment to posts mandating profession of a specific religion, Community Certificate / Certificate from the Revenue Authorities concerned, in support of the religion claimed in the online application, must be uploaded / produced. Failure to upload / produce such a certificate shall result in rejection of candidature after due process.

**14-F. <u>சாதிவாரியான இட ஒதுக்கீட்டு வகை</u>**
**<u>Communal Reservation Category</u>**

(i) **ஆதிதிராவிடர்/ ஆதிதிராவிட –அருந்ததியர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் அல்லது இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினைச் சேர்ந்த விண்ணப்பதாரர், அவரது தகப்பனார் அல்லது தாயின் பெயரைக் குறிப்பிட்டு, அரசாணைஎண்.781, வருவாய்த்துறை, நாள்02.05.1988-ல், நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில், கீழே, அந்தந்த சமூகப் பிரிவினருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களால் வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்ய/ சமர்ப்பிக்க வேண்டும். கணவர் பெயரைக் குறிப்பிட்டு பெறப்பட்ட சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்தால் / சமர்ப்பித்தால் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

In the case of a candidate who claims to be a member of Scheduled Castes / Scheduled Caste (Arunthathiyars) or Scheduled Tribes or Most Backward Classes / Denotified Communities or Backward Classes (other than Muslim) or Backward Classes (Muslim), a certificate citing either father's / mother's name, from the following authority noted against each, should be uploaded / produced in the form prescribed, referred to in G.O.(Ms.)No.781, RevenueDepartment, dated 2nd May 1988.Uploading / production of a community certificate citing name of spouse, shall result in rejection of candidature after due process.

| சமூகப்பிரிவின் பெயர் | சான்றிதழ் வழங்க தகுதியுடைய அலுவலர் |
|---|---|
| பழங்குடியினர் | வருவாய்க் கோட்ட அலுவலர் / உதவி ஆட்சியர் / சார் ஆட்சியர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட- (அருந்ததியர்) | வட்டாட்சியர் |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமியவகுப்பினர் | வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத வருவாய்த்துறை அலுவலர் அல்லது தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் அல்லது சாதிச்சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புத் துணைவட்டாட்சியர் அல்லது துணைவட்டாட்சியர் (பள்ளி சான்றிதழ்கள்) அல்லது செயற் துணை வட்டாட்சியர் ( சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை) அல்லது கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அல்லது மண்டலத் துணை வட்டாட்சியர் |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொட்டிய நாயக்கர் (ராஜகம்பளம், கொல்லவர், சில்லவர், தொக்களவர், தொழுவ நாயக்கர் மற்றும் எர்ரகொல்லார் உட்பட) | தலைமையிடத்துத் துணைவட்டாட்சியர் / [3][மண்டலத் துணை வட்டாட்சியர்][3] |

| Name of the Community | Competent Authority to issue the Certificate |
|---|---|
| ST | Revenue Divisional Officer / Assistant Collector / Sub-Collector / Personal Assistant (General) to the Collector of Chennai / District Adi-Dravidar Welfare Officer |
| SC / SC(A) | Taluk Tahsildar |
| MBC / DC, BC (other than Muslim) and BC(Muslim) | Revenue Officer not lower in rank than a Tahsildar or Head Quarters Deputy Tahsildar or Special Deputy Tahsildar appointed to issue Community Certificate or Deputy Tahsildar (School Certificates) or Executive Deputy Tahsildar (in respect of Chennai district)or Additional Head Quarters Deputy Tahsildar or Zonal Deputy Tahsildar |
| Thottia Naicker (including Rajakambalam, Gollavar, Sillavar, Thockalavar, Thozhuva Naicker, and Erragollar) included in the list of MBC / DC | Head Quarters Deputy Tahsildar/ [3]**[**Zonal Deputy Tahsildar**]**[3] |

(ii) **விண்ணப்பதாரரின் நிரந்தரக் குடியிருப்பு இருக்கும் பகுதி எவருடைய அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதோ அந்த தகுதிவாய்ந்த அலுவலரால் சாதிச்சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அரசாணைஎண்.781, வருவாய்த்துறை, நாள்02.05.1988-ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அல்லாத சாதிச் சான்றிதழ்கள், உயர்நிலைப் பள்ளியை விட்டுச் சென்றதற்கான சான்றிதழ் அல்லது மாற்றுச்சான்றிதழ் அல்லது பள்ளி / கல்லூரி ஆவணங்களில் கண்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.**

Community certificate should have been issued by the competent authorities referred to above, in whose jurisdiction the applicant claims to have permanent residence. The certificate obtained by the applicants in the form other than the one referred to in G.O. Ms. No.781, Revenue Department, dated 2nd May 1988 and solely based on the entries in SSLC or Transfer Certificate or other school / college records will not be accepted.

---

3. Incorporated vide Commission's orders dated 10.08.2022

(iii) தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழில் பதிவு செய்யப்பட்டுள்ள சாதி, "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பிற்சேர்க்கையில் (தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், **2016-**லிருந்து எடுக்கப்பட்டது) கொடுக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர், ஆதிதிராவிட அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்படவில்லையென்றால், அவ்விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர், ஆதிதிராவிட -அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியரல்லாதபிற்படுத்தப்பட்டவகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினைச் சேர்ந்தவர்களாக உரிமை கோருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். இப்பட்டியலில் இடம்பெறாத சாதியைச் சேர்ந்தவர் ஏனையோர் **(others category)** என்ற பிரிவின்கீழ் மட்டுமே உரிமை கோர அனுமதிக்கப்படுவர்.

Candidates are warned that if the community recorded in the certificate produced by them from the competent authority is not included in the list of Scheduled Castes, Scheduled Caste (Arunthathiyars), Scheduled Tribes, Most Backward Classes / Denotified Communities, Backward Classes (other than Muslim) or Backward Classes (Muslim) given in the Annexure to these Instructions [extracted from the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2005], they will not be permitted to claim to belong to Scheduled Castes, Scheduled Caste (Arunthathiyars), Scheduled Tribes or Most Backward Classes / Denotified Communities, Backward Classes (other than Muslim) or Backward Classes (Muslim), as the case may be. They will, in that case, be permitted to claim to belong to 'Others' category only.

(iv) பழங்குடியினத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர், மாநில கூர்நோக்கு குழுவிலிருந்து பெறப்பட்ட அறிக்கை கிடைக்கப் பெற்றிருப்பின், அதனைக் கட்டாயம் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லையெனில், அவர்தம் உரிமைகோரல், மாநில கூர்நோக்கு குழுவின் சரிபார்ப்பிற்கு உட்படுத்தப்படும்.

Candidates belonging to Scheduled Tribe communities must upload / produce the report of the State Level Scrutiny Committee, if available. Failure to do so would render their claim liable to verification by the State Level Scrutiny Committee.

(v) **ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த விண்ணப்பதாரர், கிருத்துவ மதம் நீங்கலாக ஏனைய மதங்களுக்கு மாறினால், "ஏனையோர்" ("others" category) எனக் கருதப்படுவர். எனினும், சீக்கியம் மற்றும் பௌத்த மதங்களுக்கு மாறிய ஆதி திராவிடர் (Scheduled Caste) ஆதி திராவிடராகவே கருதப்படுவர்.**

Applicants belonging to Scheduled Castes, Backward Classes, Most Backward Classes and Denotified Communities on conversion to religions other than Christianity, shall be treated as 'Others'. However, Scheduled Caste converts to Sikhism and Buddhism shall be treated as Scheduled Castes.

(vi) **எந்தவொரு சாதிச்சான்றிதழும் இல்லாத திருநங்கை விண்ணப்பதாரர், தங்களது இணையவழி விண்ணப்பத்தில் ஏனையோர் பிரிவினையோ அல்லது அரசாணை(நிலை) எண். 28, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 06.04.2015-ன்படி, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினையோ தேர்வு செய்து கொள்ளலாம்.**

Transgender candidates, who do not possess any community certificate may choose to be considered under 'Others'or as per G.O.(Ms.) No.28, Backward Classes, Most Backward Class and Minorities Welfare Department, dated 06.04.2015,under Most Backward Classes.

(vii) **சாதிச்சான்றிதழ் வைத்துள்ள ஆதிதிராவிடர்/ ஆதி திராவிட-(அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த திருநங்கை விண்ணப்பதாரர், அவர்களது சமூகத்தினைச் சார்ந்தவர்களாகவே கருதப்படுவர்.**

Transgender candidates who belong to Scheduled Caste / Scheduled Caste (Arunthathiyar) / Scheduled Tribe communities and possess community certificate as such, shall be considered as per their respective community.

(viii) **ஆதிதிராவிடர் / ஆதி திராவிட - அருந்ததியர் / பழங்குடியினர் வகுப்பைத் தவிர மற்ற வகுப்பினைச் சார்ந்த மற்றும் அப்பிரிவின் அடிப்படையில் சாதிச் சான்றிதழ் பெற்றுள்ள திருநங்கை விண்ணப்பதாரர், அவருடைய வகுப்பு (class) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆகிய இரண்டு வகுப்புகளில், அவருக்கு சாதகமாக தோன்றுகின்ற ஒன்றை, ஒருமுறைப் பதிவின் போதே தேர்வு செய்ய வேண்டும். அதன் பிறகு, வகுப்பை எப்பொழுதும் மாற்ற இயலாது.**

Transgender candidates who belong to communities <u>other</u> than Scheduled Caste / Scheduled Caste (Arunthathiyar) / Scheduled Tribe and possess community certificate as such, are permittedto choose to be considered as belonging to their own community or as Most Backward Class, whichever is advantageous to them, at the time of One Time Registration itself.Once the individual opts to be considered as a particular community, it shall be crystallized and this option shall not be changed in the future.

(ix) **சாதிச்சான்றிதழ் இல்லாத திருநங்கைகள், தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கருதுமாறு இணையவழி விண்ணப்பத்தில் விருப்பத்தேர்வு செய்தவர்கள் அல்லது ஏனையோர் (0thers) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) / சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த திருநங்கைகள் சாதிச்சான்றிதழ் வைத்திருந்தாலும், தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கருதும்படி இணையவழி விண்ணப்பத்தில் விருப்பத்தேர்வு செய்திருக்கும் பட்சத்தில், அவர்கள் தங்களது உரிமைக்கோரலுக்கு ஆதாரமாக சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்யவோ / சமர்ப்பிக்கவோ தேவையில்லை. இருப்பினும், அவர்கள் திருநங்கைகளுக்கான அடையாள அட்டையை அவர்களது உரிமைகோரலுக்கு ஆதாரமாக பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும்.**

Transgender candidates who do not possess a community certificate and have chosen to be considered under ‘Most Backward Classes’ or ‘Others’ and those in possession of a community certificate as Backward Classes / Backward Classes (Muslim) / Denotified Communities but have chosen to be considered under ‘Most Backward Classes’, **need not upload / produce a community certificate** in support of their claim. However, such candidates must upload / produce the prescribed Transgender ID card, to substantiate their claim.

(x) **சாதிச்சான்றிதழ் வைத்துள்ள திருநங்கை விண்ணப்பதாரர் அவர்கள் பெற்றுள்ள சாதிச்சான்றிதழின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குமாறு இணையவழி விண்ணப்பத்தில் விருப்பத்தேர்வு செய்திருந்தால், அவர்கள் தங்களது சாதிச்சான்றிதழை கட்டாயமாக பதிவேற்றம் செய்ய/ சமர்ப்பிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் அவர்களது விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Transgender candidates, in possession of a community certificate and who have chosen to be considered under the communal reservation category as stated in the community certificate, must upload / produce the same. Failure to upload / produce such a certificate shall result in rejection of candidature after due process.

(xi) **சமூகப்பிரிவின் அடிப்படையிலான இடஒதுக்கீட்டைத் தேர்வு செய்வது தொடர்பாக, திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து சலுகைகளும் அவர்களால் பதிவேற்றம் செய்யப்படும்/ சமர்ப்பிக்கப்படும், தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்படும் அடையாள அட்டையினைச் சார்ந்தே அமையும். விண்ணப்பதாரர், திருநங்கைக்கான அடையாள அட்டையினை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கத் தவறினாலோ, மற்ற வாரியங்களால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினைப் பதிவேற்றம் செய்தாலோ / சமர்ப்பித்தாலோ, அவர்களது விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

All concessions permitted to Transgender candidates in the matter of choice of communal reservation category, shall be wholly dependant on the uploading / production of a Transgender ID card issued by the Tamil Nadu Transgender Welfare Board.Failure to upload / produce the same or uploading / production of a Transgender ID card issued by other authorities, shall result in rejection of candidature after due process.

(xii) **இணையவழி விண்ணப்பத்தில் அளிக்கப்பட்ட சாதியின் பெயருக்கும், சாதிச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்கும் சாதியின் பெயருக்கும் ஏதேனும் வேறுபாடு இருப்பின், சான்றிதழ் சரிபார்ப்பின்போது அதற்குரிய விளக்கத்தினை ஓர் உறுதிமொழியாக சாதிச்சான்றிதழுடன் கட்டாயம் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும்:**

**எனினும், அக்கோரிக்கை இணையவழி விண்ணப்பத்தில் கோரப்பட்ட சாதி / வகுப்பை (class) மாற்றும் வண்ணம் இருக்கக்கூடாது; அவ்வாறு இருப்பின் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Any variation in the community name as furnished in the online application and that mentioned in the community certificate, must be explained in an undertaking to be uploaded / produced, along with the community certificate at the time of the certificate verification:

Provided that such variation does not entail reassignment of the communal reservation category claimed in the online application; if it does, it shall result in rejection of candidature after due process.

(xiii) **சொந்த மாவட்டம் / வட்டத்தைத் (taluk) தவிர பிற இடங்களில் சாதிச்சான்றிதழைப் பெற்றிருக்கும் விண்ணப்பதாரரின் சாதிப்பிரிவு, சொந்த மாவட்டத்தை/ வட்டத்தைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட இடஒதுக்கீட்டுக்குரிய சமூகப்பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருப்பின், அந்த விண்ணப்பதாரர், தனது சாதிச்சான்றிதழுடன் கூடுதலாக தகப்பனார் அல்லது தாயாரின் சாதிச்சான்றிதழ் / இருப்பிடச் சான்றிதழை தங்கள் உரிமைகோரலுக்கு ஆதரவாக கட்டாயம் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். பதிவேற்றம் செய்ய அல்லது சமர்ப்பிக்கத் தவறினாலோ அல்லது பதிவேற்றம்செய்த / சமர்ப்பித்த ஆவணங்கள் உரிமைகோரலுக்கு ஆதரவாக இல்லையென்றாலோ விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Candidates in possession of a community certificate obtained elsewhere than at their native district and whose classification under a particular communal reservation category is dependent on their native district / taluk, must upload / produce in addition to their community certificate, their father’s or mother’s community / nativity certificate, in support of their claim. Failure to do so / failure of the uploaded / produced documents to substantiate their claim, shall result in rejection of candidature after due process.

(xiv) **தமிழ்நாடு அல்லாத பிற மாநிலங்களிலிருந்து சாதிச் சான்றிதழைப் பெற்றவர்கள், கீழ்க்கண்டவாறு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர்.**

(a) 'ஏனையோர்' – சாதிச் சான்றிதழைப் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கத் தேவையில்லை.

(b) ஆதி திராவிடர் / ஆதி திராவிட- அருந்ததியர் / பழங்குடியினர் – தங்கள் சாதிச்சான்றிதழுடன், தங்களது தகப்பனார்/தாயாரின் இருப்பிடச் சான்றிதழை Nativity Certificate) கட்டாயம் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். பதிவேற்றம் செய்ய அல்லது சமர்ப்பிக்கத் தவறினாலோ அல்லது பதிவேற்றம் செய்த / சமர்ப்பித்த ஆவணங்கள் உரிமைகோரலுக்கு ஆதரவாக இல்லையென்றாலோ விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

(c) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (இசுலாமியர்) – தமிழ்நாட்டில் தங்களது சொந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து புதிய சாதிச்சான்றிதழைப் பெற்று கட்டாயம் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். **தவறினால்** விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

Candidates in possession of a community certificate obtained outside the State of Tamil Nadu are permitted to apply under:

(a) 'Others' - such candidates need not upload / produce their community certificate.

(b) Scheduled Caste / Scheduled Caste (Arunthathiyar) / Scheduled Tribe – such candidates must upload / produce in addition to their community certificate, their father's or mother's nativity certificate, in support of their claim. Failure to do so, or failure of the uploaded / produced documents to substantiate their claim, shall result in rejection of candidature after due process.

(c) Most Backward Classes / Denotified Communities, Backward Classes (other than Muslim) or Backward Classes (Muslim) – such candidates must upload / produce a fresh community certificate from the District Revenue Officer of their native district in Tamil Nadu. Failure to upload / produce such certificates shall result in rejection of candidature after due process.

(xv) உரிமை கோரப்பட்ட சமூகப்பிரிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆவணங்கள் ஆதாரமாக இல்லையெனில், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**Community claim unsupported by the prescribed documents shall result in rejection of candidature after due process.**

**14-G.** **<u>கல்வித்தகுதி</u>**
**<u>Educational qualification</u>**

(i) பத்தாம்வகுப்பு மதிப்பெண்சான்றிதழ் / மேல்நிலைக்கல்வி மதிப்பெண் சான்றிதழ் / பட்டயம் / பட்டம் / முதுகலைப்பட்டம் /ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டம் அல்லது அப்படிப்புகளுக்கான தற்காலிக சான்றிதழ் அல்லது அப்படிப்புகளுக்கான ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழுடன் தற்காலிக / இறுதி சான்றிதழ் ஆகியவை கல்வித்தகுதிக்கு ஆதாரமானவையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

SSLC / HSC / Diploma / Degree / PG Degree / Integrated PG Degree /Provisional Degree or Provisional Diploma Certificate / Consolidated Mark Sheet along with Degree or Provisional Degree Certificate shall be accepted as proof of educational qualification.

(ii) விண்ணப்பதாரர் இணையவழி விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள கல்வித்தகுதிகளை அறிவிக்கை நாளுக்கு முன்னரோ அல்லது அறிவிக்கை நாளன்றோ பெற்றிருப்பதுடன், அவற்றை சான்றிதழ் சரிபார்ப்பின்போது ஆதாரமாக பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். அச்சான்றிதழ்களை சமர்ப்பிக்கத் **தவறினால்**, விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

Candidates must be in possession of the educational qualification(s) claimed in the online application, on or before the date of notification and upload / produce certificates in support of the same. Failure to upload / produce such certificates shall result in rejection of candidature after due process.

(iii) பட்டயம்/ பட்டப்படிப்பு/ முதுகலைப்பட்டப் படிப்புச்சான்றிதழ்கள் அறிவிக்கை தேதிக்குப் பின்னர் வழங்கப்பட்டிருப்பின், விண்ணப்பதாரர் தங்களது கல்வித்தகுதியை அறிவிக்கைதேதி அன்று அல்லது அறிவிக்கைத்தேதிக்கு முன்னர் பெற்றதற்கு ஆதாரமான

ஆவணங்களை அதாவது தற்காலிக பட்டயம் / பட்டச்சான்றிதழ் / ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ் ஆகியவற்றை பதிவேற்றம் செய்ய வேண்டும். இச்சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய/ சமர்ப்பிக்கத் **தவறினால்** விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

In cases where the Diploma / Degree / PG Degree certificates had been issued after the date of notification, candidates must upload / produce proof (in the form of Provisional Diploma / Degree Certificate / Consolidated Mark Sheet, etc.) of the publication of results of the respective qualification(s) on or before the date of notification. Failure to upload / produce such certificates shall result in rejection of candidature after due process.

(iv) பத்தாம் வகுப்பு **(SSLC)**/ பன்னிரண்டாம் வகுப்பினை**(HSC)** ஒருமுறைக்கு மேல் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர், அவரது அனைத்து மதிப்பெண் சான்றிதழ்களையும் பதிவேற்றம் செய்ய/சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கத் தவறினால், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

Candidates who have cleared SSLC / HSC examinations in more than one attempt, must upload / produce mark sheets pertaining to all attempts. Failure to upload / produce such certificates shall result in rejection of candidature after due process.

(v) அடிப்படை / முன் அடிப்படை படிப்புக்கான சான்றிதழை, பத்தாம் வகுப்பு/ பன்னிரண்டாம் வகுப்பு சான்றிதழ்களுக்கு பதிலாக பதிவேற்றம் செய்தாலோ / சமர்ப்பித்தாலோ விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

Uploading / production of Foundation / Pre-Foundation Course certificates in lieu of SSLC / HSC certificates shall result in rejection of candidature after due process.

(vi) ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியைவிட அதிகமான கல்வித்தகுதியைப் பெற்றிருப்பதாக உரிமைகோரும் விண்ணப்பதாரர், அதற்கு ஆதரவாக அறிவிக்கைநாள் அன்றோ அதற்கு முன்னரோ பெறப்பட்ட சான்றிதழை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கவேண்டும்.

அச்சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறினால், அவர்களது விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

Candidates claiming possession of qualification higher than that prescribed for a post, must upload / produce certificates, issued on / before the date of notification, in support of such claim. Failure to upload / produce such certificates shall result in rejection of candidature after due process.

(vii) **நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியைவிட வேறு கல்வித்தகுதியைப் பெற்றிருக்கும் விண்ணப்பதாரர், தங்களது கல்வித்தகுதி, நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிக்கு இணையானது என்பதை நிரூபிக்கும் வகையில் தேர்வுஅறிவிக்கை நாளுக்கு முன்னதாகவோ அல்லது அறிவிக்கை நாளன்றோ வெளியிடப்பட்ட ஆவணங்களைக் கட்டாயம் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆவணங்களை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Candidates possessing qualification other than that prescribed, must upload / produce documents, issued on / before the date of notification, proving equivalence of their qualification to the prescribed qualification, failing which their candidature shall be liable to rejection. Failure to upload / produce such documents shall result in rejection of candidature after due process.

(viii) எந்த ஒரு நேர்விலும், நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியானது தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், **2016**, பிரிவு**25**ல் குறிப்பிட்டுள்ள மற்றும் இவ்வறிவுரைகளில் பத்தி **9**ல் உள்ள விளக்கம் **(i)** முதல் **(iii)** வரை கூறப்பட்டுள்ள வரிசையில் பெறப்பட்டிருக்க வேண்டும்.

In any case, the educational qualification prescribed, should have been obtained in the order as specified in Section 25 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 and as stated at (i) to (iii) of Explanation-I of Paragraph 9 of these Instructions.

(ix) நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி/ தொழில்நுட்பக் கல்விப் படிப்புக்கான காலஅளவு, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நேர்வுகளில், விண்ணப்பத்தில் உள்ள உரிமை கோரலுக்கும் பதிவேற்றப்பட்ட / சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களுக்கும் இடையே ஏதேனும் வேறுபாடு இருப்பின், விண்ணப்பதாரரின் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

In cases where the duration of the prescribed educational / technical course has been specified in the notification, any discrepancy between the claim in the application and the documents uploaded / produced, shall result in the rejection of candidature after due process.

(x) பட்டப்படிப்புச் சான்றிதழ் தொலைந்து விட்டாலோ அல்லது குறிப்பிட்ட காரணங்களுக்காக உடனடியாக சான்றிதழ் கிடைக்கப் பெறாமலிருந்தாலோ, பட்டப்படிப்புச் சான்றிதழ் பதிவேட்டின் சுருக்கக்குறிப்பு கல்வித்தகுதிக்கு சான்றாக எடுத்துக் கொள்ளப்படும்.

In case the Degree Certificate is lost or is not immediately available for reasons to be specified, an extract from the Convocation Register will be accepted as evidence of qualification.

(xi) பத்தாம் வகுப்பு முடித்த முன்னாள் இராணுவத்தினர் (இந்திய இராணுவத்தில் சிறப்புக்கல்விச் சான்றிதழ் அல்லது கடற்படை அல்லது விமானப்படையில் அதே போன்று சான்றிதழ் பெற்ற முன்னாள் இராணுவத்தினர்) பதினைந்து வருடங்களுக்குக் குறையாமல் இந்திய பாதுகாப்புப் படையில் பணிபுரிந்திருந்தால், பட்டப்படிப்பு கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட குரூப் **"C"** பதவிகளில், இடஒதுக்கீடு செய்யப்பட்ட காலிப்பணியிடத்தில் நியமனம் செய்யப்பட தகுதியுடையவராகக் கருதப்படுவார்.

For appointment to any reserved vacancy in Group 'C' posts, a Matriculate Ex-Serviceman (which term includes an Ex-Serviceman who has obtained the Indian Army Special Certificate of Education or the corresponding certificate in the Navy or the Air Force), who has put in not less than 15 years of service in the Armed Forces of the Union shall be considered eligible for appointment to the posts for which the essential qualification prescribed is Graduation.

(xii) உரிமை கோரப்பட்ட கல்வித்தகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட ஆவணங்கள் ஆதாரமாக இல்லையெனில், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**Claim to possess educational qualification unsupported by the prescribed documents shall result in rejection of candidature after due process.**

**14-H.** **<u>தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் தகுதி</u>**

**Typewriting / Shorthand Qualification**

(i) விண்ணப்பதாரர் இணையவழி விண்ணப்பத்தில் உரிமை கோரிய தட்டச்சு / சுருக்கெழுத்துத் தகுதிகளை அறிவிக்கை நாளன்றோ / அறிவிக்கை நாளுக்கு முன்னரோ கட்டாயம் பெற்றிருப்பதுடன், அச்சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

Candidates must be in possession of Typewriting / Shorthand qualification(s) claimed in the online application, on or before the date of notificationand must upload / produce such certificate(s). Failure to upload / produce such document shall result in rejection of candidature after due process.

(ii) தட்டச்சு/ சுருக்கெழுத்து சான்றிதழ்கள் அறிவிக்கைக்குப் பின்னர் வழங்கப்பட்டிருக்கும் நேர்வுகளில், விண்ணப்பதாரர் தேர்வு முடிவுகள் அறிவிக்கை நாளுக்கு முன்னரோ அல்லது அறிவிக்கை நாளன்றோ வெளியிடப்பட்டதற்கான ஆதாரச் சான்றினை கட்டாயம் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். **தவறினால்**, விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

In cases where the Typewriting / Shorthand certificates had been issued after the date of notification, candidates must upload / produce proof of the publication of results of the respective qualification(s) on or before the date of notification. Failure to upload / produce such document shall result in rejection of candidature after due process.

(iii) **நிர்ணயிக்கப்பட்ட தட்டச்சு அல்லது சுருக்கெழுத்து தகுதியைவிட வேறு கல்வித் தகுதியைப் பெற்றிருக்கும் விண்ணப்பதாரர், தங்களது கல்வித்தகுதி, நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிக்கு இணையானது என்பதை நிரூபிக்கும் வகையில் தேர்வுக்கான அறிவிக்கை நாளுக்கு முன்னதாவோ அல்லது அறிவிக்கை நாளன்றோ வழங்கப்பட்ட ஆவணங்களைக் கட்டாயம் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். தவறினால், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Candidates possessing Typewriting or Shorthandqualification other than that prescribed, must upload / produce documents proving equivalence of their qualification to the prescribed qualification. Such a document proving equivalence must have been issued on / before the date of notification. Failure to upload / produce such document shall result in rejection of candidature after due process.

(iv) **உரிமை கோரப்பட்ட தட்டச்சு / சுருக்கெழுத்துத் தகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட ஆவணங்கள் ஆதாரமாக இல்லையெனில், விண்ணப்பதாரரின் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

**Claim to possess Typewriting / Shorthand qualification unsupported by the prescribed documents shall result in rejection of candidature after due process.**

## 14-I. <u>போதுமான தமிழறிவு</u>

## <u>Adequate knowledge in Tamil</u>

(i) **போதுமான தமிழறிவு பெற்றுள்ளதாக உரிமை கோரும் விண்ணப்பதாரர், பத்தாம்வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வியில், தமிழை ஒருமொழிப் பாடமாக எடுத்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது உயர்நிலைப்பள்ளிப் படிப்பில் தமிழைப் பயிற்று மொழியாகவும், பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையானக் கல்வியை தமிழில் எழுதித் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பெறும் இரண்டாம்நிலைமொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.**

Claim to possess adequate knowledge of Tamil shall require passing the SSLC examination or its equivalent, with Tamil as one of the languages or studying the High School Course in Tamil medium and passing the SSLC examination or its equivalent in Tamil medium; or passing the SecondClass Language Test (Full Test) in Tamil conducted by the Commission.

(ii) **விண்ணப்பதாரர் தங்களது பத்தாம் வகுப்பு/ பன்னிரெண்டாம் வகுப்பு / இளங்கலை பட்டம் /முதுகலைப் பட்ட மதிப்பெண் சான்றிதழ்களில் ஏதேனும் ஒன்றையோ தமிழில் இரண்டாம்நிலை மொழித்தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான சான்றையோ கட்டாயமாக பதிவேற்றம் செய்ய/ சமர்ப்பிக்க வேண்டும்.**

Candidates must upload / produce **either** SSLC / HSC / Degree / PG Degree marksheets or proof of having passed the Second Class Language Test (Full Test) in Tamil conducted by the Commission.

(iii) **போதிய தமிழறிவுப் பெற்றதற்கான சான்றாவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர், பணியில் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் இரண்டாம்நிலை மொழித் (தமிழில்)தேர்வில் (முழுத்தேர்வு) தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறத் தவறுபவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள்.**

Failure to produce documents in support of possession of adequate knowledge of Tamil, shall result in the candidate being required to pass the Second Class Language Test (Full Test) in Tamil conducted by the Commission, within a period of two years from the date of his appointment, failing which he shall be discharged from service.

**14-J.** **<u>தமிழில் கட்டாயக்கல்வித் தகுதி (நிர்ணயிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு)</u>**
**<u>Mandatory Qualification in Tamil, where applicable</u>**

**சில பதவிகளுக்கான தெரிவிற்கு தமிழில் தேர்ச்சி அவசியம் என முன்நிபந்தனையாக குறிப்பிடப்பட்டிருந்தால்,விண்ணப்பதாரர் தமிழ் கல்வித்தகுதி தொடர்பாக தங்களது பத்தாம் வகுப்பு/ பன்னிரெண்டாம் வகுப்பு / இளங்கலை/ முதுகலை மதிப்பெண் சான்றிதழ்களில் ஏதேனும்**

ஒன்றினை அல்லது தமிழில் இரண்டாம் நிலைமொழித் தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான சான்றினை கட்டாயம் பதிவேற்றம் செய்ய/ சமர்ப்பிக்க வேண்டும். **தவறினால்**, விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

Candidates claiming to possess the mandatory qualification in Tamil, wherever prescribed, must upload / produce **either** SSLC / HSC / Degree / PG Degree mark sheets / proof of having passed the Second Class Language Test (Full Test) in Tamil, as required. Failure to do so / not uploading / not producing the prescribed documents shall result in rejection of candidature after due process.

**14-K.** **<u>பதிவுச்சான்றிதழ் (மருத்துவம் / கால்நடை மருத்துவக்குழு / வழக்குரைஞர் மன்றப் பதிவு/ ஓட்டுநர் உரிமம்)</u>**

**<u>Medical / Veterinary Council Registration Certificate / Bar Council Registration Certificate / Driving Licence</u>**

(i) வழக்குரைஞர் மன்றம் அல்லது இந்திய மருத்துவத்திற்கான மத்திய வாரியம், சென்னை மற்றும் / அல்லது ஒருங்கிணைந்த மருத்துவத்திற்கான மத்திய வாரியம், சென்னை / தமிழ்நாடு சித்த மருத்துவ மன்றம் / இந்திய மருத்துவத்திற்கான தமிழ்நாடு வாரியம், தமிழ்நாடு மருத்துவ மன்றம், தமிழ்நாடு ஹோமியோபதி மன்றம் அல்லது தமிழ்நாடு கால்நடை மருத்துவ மன்றம் போன்றவற்றில் பதிவு செய்திருப்பது, சில பதவிகளின் தெரிவிற்கு அவசியம் என முன்நிபந்தனையாக விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டிருந்தால், அந்தப் பணிகளுக்கான, தேர்வாணையத்தின் அறிவிக்கை தேதி அன்றோ அதற்கு முன்னரோ, சம்மந்தப்பட்ட மன்றம்/ குழுவில், விண்ணப்பதாரர் தமது பெயரைப் பதிவு செய்திருக்க வேண்டும். இணையவழிச் சான்றிதழ் சரிபார்ப்பின்போது, அறிவிக்கை நாளன்று செல்லுபடியாகும் பதிவுச்சான்றிதழினை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். தேர்வின் அனைத்து நிலைகளிலும் அவ்வாறு செல்லத்தக்க சான்றிதழினை விண்ணப்பதாரர் பெற்றிருக்க வேண்டும்.

Candidates for recruitment to certain posts, appointment to which requires as a pre-condition, registration of their names in Councils/Boards like Bar Council or Central Board of Indian Medicine, Chennai and/or the Board of Integrated Medicine,

Chennai / Tamil Nadu Siddha Medical Council / Tamil Nadu Board of Indian Medicine, Tamil Nadu Medical Council or Tamil Nadu Homoeopathy Council or Tamil Nadu Veterinary Council, as the case may be, should have registered their names in the respective Councils/Boards, on or before the date of the Commission's notification and upload / produce suchregistration certificate, valid on the date of notification and valid at all stages of the selection process.

(ii) **குறிப்பிட்ட பதவிகளின் தெரிவிற்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் / பிற ஆவணங்களை விண்ணப்பதாரர் பெற்றிருக்க வேண்டும் என முன்நிபந்தனையாக இருப்பின், அறிவிக்கை நாளன்று அவ்வாறு இருப்பதற்கான ஆதாரத்தை சான்றிதழ் சரிபார்ப்பின்போது பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். தேர்வின் அனைத்து நிலைகளிலும் அவ்வாறு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் / பிற ஆவணங்களை விண்ணப்பதாரர் பெற்றிருக்க வேண்டும்.**

Candidates for recruitment to certain posts, appointment to which requires as a pre-condition, possession of a valid driving licence / other papers, must upload / produce such driving licence / papers, valid on the date of notificationand valid at all the stages of the selection process.

(iii) **விண்ணப்பதாரர், தங்களது பதிவுச்சான்றிதழினை / ஓட்டுநர் உரிமத்தை / பிற ஆவணங்களை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கத் தவறினாலோ அறிவிக்கை நாளன்று செல்லுபடியாகாத பதிவுச் சான்றிதழினை/ ஓட்டுநர் உரிமத்தை / பிற ஆவணங்களை பதிவேற்றம் செய்தாலோ/ சமர்ப்பித்தாலோ விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Failure to upload / produce the registration certificate /valid driving licence / other papers or uploading / production of a registration certificate / driving licence / other papers, not valid on the date of notification, shall result in rejection of candidature after due process.

(iv) இணையவழியே தேர்வுக்கு விண்ணப்பித்த பிறகு, பதிவு சான்றிதழ் / ஓட்டுநர் உரிமம் போன்றவை காலாவதியாகி விட்டாலோ அல்லது செல்லாததாகி விட்டாலோ அவற்றை உடனுக்குடன் புதுப்பிக்க வேண்டும். முழுத் தெரிவுப் பணிகளும் முடியும் முன்னர் எந்த நிலையிலும் தேர்வாணையம் கேட்கும்போது இந்த ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

In case the registration certificate / driving licence expires or becomes invalid, after submission of the online application, at any stage of the recruitment process before completion of the entire selection process, such candidates should have it renewed and possess valid registration certificate / driving licence at any time Commission calls for.

**14-L.** **<u>நடைமுறை அனுபவம் / பிற அனுபவம் ஏதேனும் சில பதவிகளுக்கு தேர்வாணைய அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்டிருப்பின்</u>**

**<u>Evidence of practical experience, if any, prescribed for the post advertised</u>**

(i) ஒரு பதவிக்கு, கல்வித் தகுதியுடன் பணி முன்அனுபவம் தேவையென அறிவிக்கப்பட்டிருந்தால், அப்பதவிக்கான கல்வித்தகுதியைப் பெற்ற பிறகே, பணி முன்அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும் (இவ்விதிக்கு ஏதேனும் விலக்கு இருப்பின் தேர்வு அறிவிக்கையில் வெளியிடப்படும்). பணி முன் அனுபவத்திற்கான சான்றிதழ். வழக்குரைத்தலில் அனுபவத்திற்கான சான்றிதழ் தேர்வாணைய அறிவிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள விவரங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். இவ்வகைச் சான்றுகள் மெய்த்தன்மை ஆய்விற்கு உட்படுத்தப்படும்.

In cases where the qualifications announced for a post include a period of practical or other experience, in addition to educational qualification / technical qualification, such a period of practical or other experience, as the case may be, should have been acquired after obtaining the educational / technical qualifications prescribed for such appointment, unless otherwise specified. Certificate regarding practical experience / experience at the bar, should conform to the requirements notified. These certificates will be subjected to verification.

(ii) **பணி முன்அனுபவம் அல்லது பிற அனுபவ சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கத் தவறினாலோ, முழுமையற்ற சான்றிதழை பதிவேற்றம் செய்தாலோ /சமர்ப்பித்தாலோ சான்றிதழில் உள்ள உள்ளடக்கங்களை (contents) சரிபார்க்க இயலாத நிலையிலிருந்தாலோ, சான்றிதழ் சரிபார்ப்பின்போது, உள்ளடக்கம் உண்மையற்றவை என கண்டறியப்பட்டாலோ, விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Failure to upload / produce practical experience or other experience certificates or uploading / production of documents that are incomplete or whose contents cannot be verified or whose contents upon verification are found to be not genuine, shall result in rejection of candidature after due process.

**14-M.** <u>**நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள்**</u>
<u>**Persons with Benchmark Disability**</u>

(i) **மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் விதி, 2017-ல் (மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் துறை(Divyangjan), சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், இந்திய அரசு) குறிப்பிடப்பட்டுள்ள கீழ்காணும் படிவத்தில் அரசாணை (நிலை) எண்.28, மாற்றுத்திறனாளிகள் (DAP.3.1)நலத்துறை, நாள்27.07.2018-ல், வரையறுக்கப்பட்டுள்ள சான்றிதழ் வழங்கக்கூடிய தகுதிவாய்ந்த** அலுவலரிட**மிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.**

Disability Certificate in the formatshown below,prescribed in the Rights of Persons with Disabilities Rules, 2017 [Department of Empowerment of Persons with Disabilities (Divyangjan), Ministry of Social Justice and Empowerment, Government of India] and issued by the competent authority defined in GO Ms. No. 28, Welfare of Differently Abled Persons (DAP 3.1), dated 27.07.2018.

(ii) நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அல்லாத மாற்றுத்திறனாளி சான்றிதழ் வைத்துள்ள விண்ணப்பதாரர் புதிய சான்றிதழ் பெற வேண்டியதில்லை. எனினும், தங்களது உரிமைகோரலுக்கு ஆதாரமான அனைத்துத் தகவல்களும் ஏற்கனவே பெற்றுள்ள மாற்றுத்திறனாளி சான்றிதழில் இருக்க வேண்டும். மேலும், அச்சான்றிதழ் தகுதிவாய்ந்த அலுவலரால் அல்லது இணையான உயர் அலுவலரால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

Candidates in possession of a Disability Certificate in a format other than the one prescribed, need not obtain a fresh Disability Certificate, provided that the Disability Certificate already obtained contains all essential information required to substantiate their claim and has been issued by the authority prescribed or an equivalent / higher authority.

<u>குறிப்பு/ *Note*</u>*:*

***அரசு அலுவலரல்லாத மருத்துவ அலுவலரால் மாற்றுத்திறனாளி சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பின், அச்சான்றிதழ் இணைஇயக்குநர், மருத்துவப்பணிகள் அவர்களால் மேலொப்பம் இடப்பட்டிருந்தால் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும்.***

*In case the certificate is issued by a medical authority who is not a Government servant, it shall be valid only if countersigned by the Joint Director, Medical Services.*

...***மாற்றுத்திறனாளிசான்றிதழ்*** – படிவம் **V, VI & VII**
Certificate of Disability - Formats V, VI & VII

**Form V**

Certificate of Disability

(In cases of amputation or complete permanent paralysis of limbs or dwarfism and in case of blindness)
[See rule 18(1)]

(Name and Address of the Medical Authority issuing the Certificate)

| |
|---|
| Recent passport size attestedphotograph (Showing face only) of the person with disability. |

Certificate No.______________ Date:____

This is to certify that I have carefully examined Shri./ Smt./ Kum. ______________________ son/ wife/ daughter of Shri __________________ Date of Birth (DD/ MM/ YY) ____________ Age ______ years, male/ female ______ Registration No. ______________ permanent resident of House No. ___________ Ward/ Village/ Street ________ Post Office _______________ District __________ State ________________, whose photograph is affixed above, and am satisfied that:

(A) he/ she is a case of:

- locomotor disability
- dwarfism
- blindness

(Please tick as applicable)

(B) the diagnosis in his/ her case is __________________

(C) he/ she has ________ % (in figure) __________________ percent (in words) permanent locomotor disability/ dwarfism/ blindness in relation to his/ her ______ (part of body) as per guidelines (............... number and date of issue of the guidelines to be specified).

2. The applicant has submitted the following document as proof of residence:-

| Nature of Document | Date of Issue | Details of authority issuing certificate |
|---|---|---|

(Signature and Seal of Authorised Signatory
of notified Medical Authority)

| |
|---|
| Signature/ thumb impression of the person in whose favour certificate of disability is issued. |

**Form VI**

Certificate of Disability

(In cases of multiple disabilities)

[See rule 18(1)]

(Name and Address of the Medical Authority issuing the Certificate)

Recent passport size attested photograph (Showing face only) of the person with disability.

Certificate No.________________ Date:_________

This is to certify that we have carefully examined Shri./ Smt./ Kum. ______________________________________son/ wife/ daughter of Shri ______________________________________Date of Birth (DD/ MM/ YY) _____________ Age _____ years, male/ female ________. Registration No. ________________ permanent resident of House No. _____________ Ward/ Village/ Street ________ Post Office _______ District _____________ State _____________, whose photograph is affixed above, and am satisfied that:

(A) he/ she is a case of Multiple Disability. His/ her extent of permanent physical impairment/ disability has been evaluated as per guidelines (....................... number and date of issue of the guidelines to be specified) for the disabilities ticked below, and is shown against the relevant disability in the table below:

| Sl. No. | Disability | Affected part of body | Diagnosis | Permanent physical impairment/ mental disability (in%) |
|---|---|---|---|---|
| 1. | Locomotor disability | @ | | |
| 2. | Muscular Dystrophy | | | |
| 3. | Leprosy cured | | | |
| 4. | Dwarfism | | | |
| 5. | Cerebral Palsy | | | |
| 6. | Acid attack Victim | | | |
| 7. | Low vision | # | | |
| 8. | Blindness | # | | |
| 9. | Deaf | £ | | |
| 10. | Hard of Hearing | £ | | |
| 11. | Speech and Language disability | | | |
| 12. | Intellectual Disability | | | |
| 13. | Specific Learning Disability | | | |
| 14. | Autism Spectrum Disorder | | | |
| 15. | Mental illness | | | |
| 16. | Chronic Neurological Conditions | | | |
| 17. | Multiple sclerosis | | | |
| 18. | Parkinson's disease | | | |
| 19. | Haemophilia | | | |
| 20. | Thalassemia | | | |
| 21. | Sickle Cell disease | | | |

(B) In the light of the above, his/ her over all permanent physical impairment as per guidelines (.................. number and date of issue of the guidelines to be specified), is as follows : -

In figures :- ------------------ percent

In words :- -------------------------------------------------------------------------- percent

2. This condition is progressive/ non-progressive/ likely to improve/ not likely to improve.

3. Reassessment of disability is:

(i) not necessary, or

(ii) is recommended/ after ...... years ..... months, and therefore this certificate shall be valid till --- --- --- (DD) (MM) (YY)

e.g. Left/ right/ both arms/ legs

e.g. Single eye

e.g. Left/ Right/ both ears

4. The applicant has submitted the following document as proof of residence:-

| Nature of document | Date of issue | Details of authority issuing certificate |
|---|---|---|

5. Signature and seal of the Medical Authority.

| Name and Seal of Member | Name and Seal of Member | Name and Seal of the Chairperson |
|---|---|---|

Signature/ thumb impression of the person in whose favour certificate of disability is issued.

**Form VII**

Certificate of Disability

(In cases other than those mentioned in Forms V and VI)

(Name and Address of the Medical Authority issuing the Certificate)

[See rule 18(1)]

| Recent passport size attested photograph (Showing face only) of the person with disability. |
|---|

Certificate No.______________ Date:________

This is to certify that I have carefully examinedShri/ Smt/ Kum ___________________ son/ wife/ daughter of Shri _______________ Date of Birth (DD/ MM/ YY)___ __ ____ Age ________ years, male/ female __________ Registration No. ____________________ permanent resident of House No. ____________ Ward/ Village/ Street _______________________ Post Office __________________ District _________________ State _____________________, whose photograph is affixed above, and am satisfied that he/ she is a case of _________________________________ disability. His/ her extent of percentage physical impairment/ disability has been evaluated as per guidelines (................ number and date of issue of the guidelines to be specified) and is shown against the relevant disability in the table below:-

| Sl. No. | Disability | Affected part of body | Diagnosis | Permanent physical impairment/mental disability(in %) |
|---|---|---|---|---|
| 1. | Locomotor disability | @ | | |
| 2. | Muscular Dystrophy | | | |
| 3. | Leprosy cured | | | |
| 4. | Cerebral Palsy | | | |
| 5. | Acid attack Victim | | | |
| 6. | Low vision | # | | |
| 7. | Deaf | € | | |
| 8. | Hard of Hearing | € | | |
| 9. | Speech and Language disability | | | |
| 10. | Intellectual Disability | | | |
| 11. | Specific Learning Disability | | | |
| 12. | Autism Spectrum Disorder | | | |
| 13. | Mental illness | | | |
| 14. | Chronic Neurological Conditions | | | |
| 15. | Multiple sclerosis | | | |
| 16. | Parkinson's disease | | | |
| 17. | Haemophilia | | | |
| 18. | Thalassemia | | | |
| 19. | Sickle Cell disease | | | |

(Please strike out the disabilities which are not applicable)

2. The above condition is progressive/ non-progressive/ likely to improve/ not likely to improve.

3. Reassessment of disability is:
   (i) not necessary, or
   (ii) is recommended/ after __ years __ months, and therefore this certificate shall be valid till (DD/ MM/ YY) ____ ____ ____

) - eg. Left/ Right/ both arms/ legs
- eg. Single eye/ both eyes
- eg. Left/ Right/ both ears

4. The applicant has submitted the following document as proof of residence:-

| Nature of Document | Date of Issue | Details of authority issuing certificate |
|---|---|---|

(Authorised Signatory of notified Medical Authority)

(Name and Seal)

Countersigned

{Countersignature and seal of the Chief Medical Officer/ Medical Superintendent/ Head of Government Hospital, in case the Certificate is issued by a medical authority who is not a Government servant (with seal)}

| Signature/ thumb impression of the person in whose favour certificate of disability is issued. |
|---|

(iii) **இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைபாட்டின் வகை(type of disability) மாற்றுத்திறனாளி சான்றிதழில் குறிப்பிட்டுள்ளபடி சரியாக இருத்தல் வேண்டும்.  இதில் ஏதேனும் வேறுபாடு இருப்பின்,  விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

The disability claimed in the online application, shall be exactly the same as stated in the Disability Certificate. Any discrepancy in this regard shall result in rejection of candidature after due process.

(iv) **நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளின் உரிமைகோரலுக்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஆதாரமாக இல்லையெனில், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

**Claim as person with benchmark disability, unsupported by the prescribed documents shall result in rejection of candidature after due process.**

**14-N.** <u>**ஆதரவற்ற விதவை**</u>

<u>**Destitute Widow**</u>

(i) ஆதரவற்ற விதவை சான்றிதழ் – வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவிஆட்சியர் அல்லது சார்ஆட்சியரிடமிருந்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், **2016,** பட்டியல் 10-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் பெறப்பட்டிருக்க வேண்டும்.

Destitute Widow Certificate from the Revenue Divisional Officer or the Assistant Collector or the Sub-Collector concerned, in the format prescribed in Schedule X of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, as shown.

... ஆதரவற்ற விதவைச் சான்றிதழ் படிவம்/
Format of Destitute Widow Certificate

(1) Name of the individual

(2) Full Postal Address

(3) Details of job held, if any:

(4) Particulars of herchildren, if any

(5) Name and last occupation of her late husband

(6) Date of demise of her husband

(7) Monetary benefits received after her husband'sdeath by way of familypension, insurance, etc., if any

(8)Details of Properties if any immovable and movable left behind by him

(9)Present monthly income—
(a)From salaries/wages
(b)From familypension
(c) From private properties
(d)Rents received
(e)From private practice
(f) Other sources, if any
(g)Total

(10)Whether living alone or living with her husband's parents/in-laws/ parents/brother(s)

(11)Whether she satisfies the definition of the term"Destitute Widow" as defined in section 20(8) and 26 of this Act

Certified that I have verified the particulars furnished by the individual and satisfied myself as to the correctness of her claim with reference to the definition of the term "Destitute Widow" in section 20(8) and 26 of this Act.

| | | |
|---|---|---|
| Certificate Reference No.: | Signature | : |
| Place: | Name | : |
| Date: | Designation | : |

*RevenueDivisionalOfficer/AssistantCollector/Sub-Collector*

Explanation- The above certificate should be issued only by the *Revenue Divisional Officer or the Assistant Collector or the Sub-Collector concerned.*

(ii) 'விதவை சான்றிதழ்' ஆதரவற்ற விதவை சான்றிதழிலிருந்து வேறுபட்டதாகும். மேற்காணும் படிவத்தில் பெறப்பட்ட ஆதரவற்ற விதவை சான்றிதழை மட்டுமே பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். அந்தச் சான்றிதழை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கத் தவறினாலோ அல்லது விதவை அல்லது விவாகரத்து பெற்றதற்கான சான்றிதழை பதிவேற்றம் செய்தாலோ / சமர்ப்பித்தாலோ அவர்களது விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

A 'Widow Certificate' is different from a 'Destitute Widow Certificate'. A Destitute Widow certificate in the format as shown above alone should be uploaded / produced. Failure to upload / produce such certificate or uploading / production of a widow or divorcee certificate, shall result in rejection of candidature after due process.

(iii) **விண்ணப்பதாரர் தேர்வு அறிவிக்கை நாளன்று ஆதரவற்ற விதவையாக இருத்தலுடன் அனைத்து வருமான ஆதாரங்களின் மூலம் பெறப்படும் வருமானம் ரூபாய் 4,000/-க்கு மேற்படாமலும் இருந்தால் மட்டுமே ஆதரவற்ற விதவைக்கான உரிமைக்கோரல் அனுமதிக்கப்படும்.**

Claim as Destitute Widow shall be admitted only if the date of demise of husband is on or before the date of notification and income from all sources does not exceed Rs. 4000/- per month.

(iv) **ஆதரவற்ற விதவைச் சான்றிதழில் ஏதேனும் திருத்தம் செய்யப்பட்டிருப்பின், அத்திருத்தம் சான்றிதழ் வழங்கும் அலுவலரால் சான்றொப்பமிடப்பட்டிருக்க வேண்டும் அல்லது அதற்கு பதிலாக புதிய சான்றிதழை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும்.**

Any correction in the Destitute Widow certificate must be attested by the issuing authority or a fresh certificate in lieu thereof must be uploaded / produced.

## 14-O. முன்னாள் இராணுவத்தினர்
## Ex-serviceman

(i) **முன்னாள் இராணுவத்தினர் நலவாரியத்தால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழை (Bonafide certificate) அல்லது ஓய்வூதிய கொடுப்பாணையை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். அச்சான்றிதழ் அல்லது ஓய்வூதிய கொடுப்பாணையை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கத் தவறினால், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Bonafide Certificate issued by the Ex-Servicemen Welfare Board in the following format or Pension Payment Order must be uploaded / produced. Failure to upload / produce the certificate / order shall result in rejection of candidature after due process.

| | |
|---|---|
| (a) | Name of the applicant |
| (b) | Rank held, Name of the Service (Army / Navy / Airforce) |
| (c) | Date of enrolment |
| (d) | Date of discharge |
| (e) | Reasons for discharge |
| (f) | Whether an 'Ex-Serviceman' should be specifically stated |
| (g) | Whether in receipt of pension |
| (h) | P.P.O. No. |
| (i) | Conduct and character while serving in the defence forces |
| (j) | Name of the post applying for |
| (k) | Unique Service No. |
| (l) | Whether the individual is employed in any post under the Government of Tamil Nadu<br>If so, Name of the post and Date of appointment |

(ii) **அறிவிக்கை வெளியிட்டு, விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான இறுதி நாளிலிருந்து ஓராண்டுக்குள், முப்படைப் பணியிலிருந்து விடுவிப்புப் பெறவிருக்கும் இராணுவ வீரர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பட்டியல் XII-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு கீழ்க்கண்ட உறுதிமொழியினையும், சான்றிதழையும் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட உறுதிமொழியினையும், சான்றிதழையும் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க தவறினால், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

In-service personnel of the Armed Forces, whose date of discharge is within one year from the last date for receipt of applications for the post applying for, must upload / produce the following documents prescribed in Schedule XII of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016. Failure to upload / produce the undertaking and certificate shall result in rejection of candidature after due process.

**<u>Undertaking to be given by the Applicant</u>**

I hereby accept that if selected on the basis of the recruitment / examination to which this application relates, I will produce documentary evidence to the satisfaction of the appointing authority that I have been duly released / retired / discharged from the Armed Forces and I am entitled to the benefits admissible to Ex-Servicemen given under Section 63 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.

Place: Signature of the Applicant

**<u>Form of Certificate for Serving Personnel</u>**

I hereby certify that according to the information available with me (Number) ________ (Rank) __________ (Name) ___________ is due to complete the specified term of his engagement with the Armed Forces on the (date) ___________ .

Place:
Date: Signature of the Commanding Officer

(iii) **முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர்கள் அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் / இராணுவ, கடற்படை அல்லது விமானப்படையல்லாத மற்ற முன்னாள் படைவீரர்கள் (அதாவது எல்லைப் பாதுகாப்புப் படை, மத்திய தொழில்பாதுகாப்புப் படை, இரயில்வே பாதுகாப்புப்படை முதலானவை) / மருத்துவக்காரணங்களன்றி வேறு காரணங்களால் இராணுவத்திலிருந்து மருத்துவ அல்லது இயலாமைக்கான ஓய்வூதியமின்றிப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் முன்னாள் இராணுவத்தினருக்கான சலுகைக்கோரி ஏதேனும் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்தாலோ / சமர்ப்பித்தாலோ அவர்களது விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Any certificate uploaded / produced as proof of Ex-Serviceman claims made by wards or dependents of Ex-servicemen / claims made by erstwhile personnel of other than the Army, Navy or Air Force (viz., BSF, CISF, CRPF, RPF, etc.) / recruits boarded out or released except on medical grounds <u>without</u> medical or disability pension, shall result in rejection of candidature after due process.

**14-P.** **<u>பணி விவரங்கள்</u>**

**<u>Employment Details</u>**

(i) விண்ணப்பதாரர், இணையவழியில் விண்ணப்பிக்கும்போது, இந்திய அரசின் அல்லது இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசின் பணியில்அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது இந்திய அரசின் அல்லது இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசின் அதிகாரத்தின்கீழ் அமைக்கப்பட்டிருக்கும் அரசு சார்புள்ள நிறுவனங்கள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களில் நிரந்தரப் பணியில் அல்லது தற்காலிகப் பணியில் இருப்பின், தங்களது பணி குறித்த விவரத்தினை தேர்வாணையத்திற்கு தெரிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரர், பணி குறித்த உண்மையை மறைக்கும் பட்சத்தில், அவரது விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

Candidates who are in the service of the Indian Union or a State in India or in the employment of Local Bodies or Universities or Quasi Government Organizations or Public Sector Units constituted under the authority of the Government of India or of a State in India, whether in regular service or in temporary service, must inform the Commission of such fact, at the time of applying. Suppression of the fact of employment by candidates shall result in rejection of candidature after due process.

(ii) விண்ணப்பதாரர், தங்களுடைய விண்ணப்பங்களை துறைத்தலைவர் வாயிலாகவோ அல்லது தாம் வகித்து வரும் பதவிக்கு நியமனம் செய்வதற்கு தகுதி பெற்ற அலுவலர் மூலமாகவோஅனுப்பத் தேவையில்லை. மாறாக, தமது துறைத் தலைவருக்கு, தாம் தேர்வாணையத்தின் எந்தத் தேர்வுக்கு விண்ணப்பிக்கிறார் என்பதை எழுத்து மூலம் தெரிவித்து, தெரிவாகும் பட்சத்தில் கீழ்கண்ட நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தடையின்மைச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

Candidates need not send their applications through their Head of Department or employer. Instead, they may directly apply to the Commission after duly informing their employer in writing that they are applying for the particular recruitment, subject to the condition that they should produce ‘No Objection Certificate’ in the format prescribed below.

**தடையின்மைச் சான்றிதழ்**

திரு. /திருமதி./செல்வி------------------------------------------------------ (பெயர்) இவ்வலுவலகத்தில் ------------------- ஆக (பதவி) ---------------------முதல் (பணிநியமனம் செய்யப்பட்டதேதியைக் குறிப்பிடவும்) நிரந்தரமாக / தற்காலிகமாக பணிபுரியும் தகுதிகாண் பருவத்தினர் / ஒப்புதல் அளிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினர் / முழு உறுப்பினர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட------------------------------------------------------------------------ பணிகளில் உள்ள ………………………………… பதவிக்கான நேரடி நியமனத்திற்கு விண்ணப்பத்திருந்தார் என்ற தகவல் தனியரால் இத்துறைக்கு / நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

தனியரால் அளிக்கப்பட்ட தகவல்கள் சரியானவை எனக் கண்டறியப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரது விண்ணப்பத்தினை தேர்வாணையம் பரிசீலனை செய்வதில் இத்துறை / நிறுவனத்திற்கு தடையேதும் இல்லை* எனத் தெரிவிக்கப்படுகிறது.

நியமனஅதிகாரி
(ஒப்பம் மற்றும் அலுவலக முத்திரை)

* நியமன அதிகாரி தடையின்மைச் சான்றிதழ் வழங்கும்போது, அரசுஅலுவலருக்கு எதிராக துறைசார்ந்த / குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப்படக்கூடிய நிலையில் இருந்தாலோ அல்லது நிலுவையிலிருந்தாலோ, அதனை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு தடையின்மைச் சான்றிதழுடன் தெரிவிக்கவேண்டும். அதன்பின்னர், அந்த அரசு அலுவலர் தற்போதுள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியில் நியமனம் செய்யப்படும் நாள் வரை ஏதேனும் துறைரீதியான அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் அவர்மீது தொடரப்பட்டால் அத்தகவலையும் நியமன அதிகாரி தேர்வாணையத்திற்குத் தெரிவிக்கவேண்டும்.

**NO OBJECTION CERTIFICATE**

This is certify that Thiru/Tmt/Selvi______________________ (Name) employed as ______________________(designation) in this Office from__________ (specify the date from which appointed), regularly / temporarily appointed and a probationer/approved probationer/ full member, had applied for direct recruitment to the post of ___________________________ in ______________________ Service, conducted by the Tamil Nadu Public Service Commission and informed the fact to this department/organization.

This department / organization has 'No Objection'*regarding the processing of the application of the individual by the Tamil Nadu Public Service Commission, subject to the condition that the particulars furnished by the individual are found to be correct.

Appointing Authority
(Signature with Seal)

* *In the case of a Government servant against whom departmental or criminal proceedings are contemplated or pending, the appointing authority shall inform the said fact to the Tamil Nadu Public Service Commission along with the "No Objection Certificate" and shall also inform the Tamil Nadu Public Service Commission about the initiation of departmental or criminal proceedings, if any, subsequently, till the date of his actual relief from the office to take up appointment in the post for which he has been selected.*

(iii) **தேர்வர், இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னர், அரசுப் பணியில் சேர்ந்திருந்தால், தடையின்மைச் சான்றிதழையோ அல்லது குறைந்தபட்சம் அரசுப்பணியில் சேர்ந்த தகவலைத் தெரிவித்து தடையின்மைச் சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்ற ஓர் உறுதிமொழியினையோ பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Candidates who secure employment subsequent to submission of online application, must upload / produce 'No Objection Certificate' or at least an undertaking regarding the fact of employment and that 'No Objection Certificate' has been applied for. Failure to upload / produce the 'No Objection Certificate' / an undertaking shall result in rejection of candidature after due process.

(iv) **தேர்வர் அரசுப்பணியிலிருந்து நீக்கப்பட்டாலோ / பணியறவு செய்யப்பட்டாலோ / பணியினை இராஜினாமா செய்தாலோ அத்தகவலை தேர்வர் தனது ஒரு முறைப் பதிவு Dashboard வாயிலாக தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Candidates who have been removed / dismissed / resigned from a post, shall intimate such fact to the Commission, through the One Time Registration Dashboard. Any failure in this regard shall result in rejection of candidature after due process.

(v) **தெரிவுப்பணிகள் முழுமையாக முடிவடைவதற்கு முன்னர், தெரிவுப் பணியின் எந்த நிலையிலும், அவரது பணிநிலையில் ஏதேனும் மாற்றம் நேரிடின், அதாவது பணிநியமனம் செய்யப்பட்டாலோ அல்லது பணியிலிருந்து இராஜினாமா செய்தாலோ, பணி நீக்கம் / பணியறவு செய்யப்பட்டாலோ அது குறித்த தகவலை தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும். தவறினால், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Any change in the employment status of the candidate, whether appointment to, or resignation / removal / dismissal, from a post, at any stage of the recruitment process, until completion of the entire selection process, must be informed to the Commission. Any failure in this regard shall result in rejection of candidature after due process.

(vi) பணியில் உள்ள தேர்வர்கள், "தடையின்மைச் சான்றிதழைப்" பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கத் **தவறினால்** விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**Failure on the part of employed candidates to upload / produce the 'No Objection Certificate' shall result in rejection of candidature after due process.**

**14-Q. பிற ஆவணங்கள் ஏதேனும் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பின்**

**Other records, if any, specified in the notification.**

**14-R. <u>தமிழ் வழியில் கல்வி பயின்றோர்</u>**

**Person Studied in Tamil Medium**

(i) தமிழ்வழிக் கல்வி மூலம் படித்த நபர்களுக்கு, மாநிலத்தின் கீழ் உள்ள பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யும் (திருத்த) சட்டம் **2020**-ன் பிரிவு**2 (d)-**ல்சொல்லப்படுவதாவது:

தமிழ்வழியில் படித்த நபர் என்றால், மாநிலத்தில் நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பப்படும் பதவிகளுக்கான சிறப்பு விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில் படித்தவராவார்.

Section 2 (d) of the Tamil Nadu Appointment on Preferential Basis in the Services under the State of Persons Studied in Tamil Medium (Amendment) Act, 2020, states that '***Person studied in Tamil medium means a person who has studied through Tamil medium of instruction upto the educational qualification prescribed for direct recruitment in the rules or regulations or orders applicable to any appointment in the services under the State'.***

<u>**விளக்கம்**: இவ்வறிவுரைகளின் பத்தி 4 (E) – ஐக் காண்க.</u>
<u>**Explanation**</u>: See paragraph 4 (E) of these Instructions.

(ii) தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான உரிமை கோரும் விண்ணப்பதாரர், அதற்கான சான்றாவணமாக, நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி வரை அனைத்து கல்வித்தகுதிகளின் படிப்புக்காலம் முழுவதும் தமிழ்வழியில்

மட்டுமே பயின்றதற்கான பத்தாம்வகுப்பு /பன்னிரண்டாம்வகுப்பு /மாற்றுச்சான்றிதழ் / தற்காலிகச்சான்றிதழ் / பட்டச்சான்றிதழ் / பட்ட மேற்படிப்புச் சான்றிதழ்/ மதிப்பெண் பட்டியல்/ குழுமம் அல்லது பல்கலைக்கழகம் அல்லது கல்விநிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ஆகிய ஆவணங்களை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கவேண்டும்.

Candidates claiming to be Persons studied in Tamil Medium (PSTM) must upload / produce evidence for the same, in the form of SSLC, HSC, Transfer Certificate, Provisional Certificate, Convocation Certificate, Degree Certificate,PG Degree Certificate, Mark Sheets, Certificate from the Board or University or from the Institution, as the case may be, with a recording that he had studied **the entire duration of the respective course(s) through Tamil medium of instruction.**

(iii) விண்ணப்பதாரர், நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி வரை அனைத்து கல்வித் தகுதிகளையும் தமிழ்வழியில் பயின்றுள்ளார் என்பதற்கு ஆதாரமான சான்றுகளை கட்டாயம் பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும்.

Candidates must upload / produce documents as evidence of having studied in the Tamil medium, **all educational qualification upto the educational qualification prescribed**.

*உதாரணம்/ Example:*

ஒன்றாம் வகுப்பு முதல், தொடர்புடைய பணி விதிகளில் நேரடி நியமன முறைக்கென வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி வரையில் (10/12ஆம் வகுப்புகள், பட்டயம், இளங்கலை / முதுகலைப் பட்டங்கள்) முழுவதுமாக தமிழ் வழியில் கல்வி பயின்றவர்கள் மட்டுமே 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ் வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் மற்றும் அச்சட்டத்திற்கான 2020-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்பட தகுதியுடையவர்கள் ஆவர். (அரசாணை (நிலை) எண். 82, மனித வள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 16.08.2021)

(iv) **தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றாவணம் எதுவும் இல்லையெனில், கல்வி நிறுவனத்தின் முதல்வர் / தலைமையாசிரியர் / மாவட்டக் கல்வி அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் / பதிவாளர் / தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் / கல்வி நிறுவனத் தலைவர் / இயக்குநர் / தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் / இணை இயக்குநர் / பல்கலைக்கழகங்களின் பதிவாளரிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள படிவத்தில், நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி வரையிலான ஒவ்வொரு கல்வித்தகுதிக்கும் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.**

If no such document as evidence for 'Person Studied in Tamil Medium' is available, a certificate from the Principal / Head Master / District Educational Officer / Chief Educational Officer / District Adi Dravidar Welfare Officer / Registrar / Controller of Examinations / Head / Director of the Educational Institution / Director / Joint Director of Technical Education/ Registrar of Universities as the case may be, in the format as given below must be uploaded / produced, for each and every educational qualification upto the educational qualification prescribed.

(v) **நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி வரையிலான அனைத்து கல்வித் தகுதிகளையும் தமிழ்வழிக் கல்வியில் பயின்றுள்ளார் என்பதற்கான ஆதாரச் சான்றினை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Failure to upload / produce such documents as evidence for 'Persons Studied in Tamil Medium' for all educational qualification upto the educational qualification prescribed, shall result in the rejection of candidature after due process.

(vi) **ஏதேனும் ஒரு பாடத்தை பகுதி நேரமாகப் படித்ததற்காகவோ/ ஏதேனும் தேர்வினை தனித் தேர்வராக எழுதியதற்காகவோ, தனியர் தமிழ்வழிக் கல்வியில் பயின்றுள்ளார் என சான்றாவணம் ஏதேனும் பதிவேற்றம் செய்தால் / சமர்ப்பித்தால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Documents uploaded / produced as proof of having studied in Tamil medium, for the partial duration of any course / private appearance at any examination, shall not be accepted and shall result in the rejection of candidature after due process.

**<u>Certificate for having studied in Tamil Medium</u>** #

This is to certify that Thiru./Tmt./Selvi. ......................................(Name) had studied Classes ……….. to ………… with **Tamil as the medium of instruction**, during the year ………… to …………..and had satisfactorily completed the course of studies prescribed for Classes ………. to ………..

Thiru./Tmt./Selvi. ......................................(Name) was / was not awarded **scholarship meant for students studying in the Tamil medium**.

This certificate is issued with reference to Section 2(d) of the PSTM (Amendment) Act, 2020, based on verifiable documentary evidence. The undersigned assumes full responsibility for the veracity of the contents herein.

Signature of
Principal/Head Master /
District Educational Officer /
Chief Educational Officer /
District Adi Dravidar Welfare Officer

Place:

Date: Seal of the Institution **Mobile No. _______**

# *If the candidate has studied in different schools from 1st std. up to 10th std./ 12th std., then the above certificate shall be obtained from each of the schools the candidate has studied in.*

**<u>தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழ்</u>** #

திரு./திருமதி/செல்வி……………………………………………………………………………….. (பெயர்) …………………………… வகுப்பு முதல் ……………………. வகுப்பு வரை, **தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு** ………………………… ஆண்டு முதல் …………………………..ஆண்டு வரை இப்பள்ளியில் படித்தார் எனவும், மேற்குறிப்பிட்ட வகுப்புகளுக்கானபடிப்பினை திருப்திகரமாக நிறைவு செய்தார் எனவும் சான்றளிக்கப்படுகிறது.

திரு./திருமதி/செல்வி……………………………………………………………………………….. (பெயர்) அவர்களுக்கு **தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக வழங்கப்படும் கல்வி உதவித் தொகை**வழங்கப்பட்டது / வழங்கப்படவில்லை.

தமிழ் வழியில் படித்தோருக்கான முன்னுரிமை அளிக்கும் (திருத்தச்) சட்டம், 2020 பிரிவு 2 (d) ன்கீழ், ஆதார ஆவணங்களை சரிபார்த்ததன் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வுள்ளடக்கங்களின் உண்மைத் தன்மைக்கு இச்சான்றிதழில் கையொப்பமிட்டுள்ளவர் முழுப் பொறுப்புடையவர் ஆவார்.

கையொப்பம்
முதல்வர் / தலைமைஆசிரியர் /
மாவட்டக்கல்விஅலுவலர் /
முதன்மைக்கல்விஅலுவலர்/
மாவட்டஆதிதிராவிடர்நலஅலுவலர்/
(**அலைபேசிஎண்**……………)

இடம்:

கல்வி நிறுவனத்தின் அலுவலகமுத்திரை

நாள்:

# *தேர்வர் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை/ பனிரெண்டாம் வகுப்பு வரை வெவ்வேறு பள்ளிகளில் பயின்றுள்ளார் எனில், தான் பயின்ற ஒவ்வொரு பள்ளியிலும் தனித் தனியாக சான்றிதழைப் பெற வேண்டும்.*

**<u>Certificate for having studied in Tamil Medium</u>**@

This is to certify that Thiru./Tmt./Selvi. ……………………………….(Name) had studied ….……………. (Diploma/Degree/PG Degree, etc.) during the year …………. to ……..….. with **Tamil as the medium of instruction** and had satisfactorily completed the course of studies prescribed for ……………………………. (Diploma/Degree/PG Degree, etc.).

Thiru./Tmt./Selvi. ……………………………….(Name)was / was not awarded **scholarship meant for students studying in the Tamil medium**.

This certificate is issued with reference to Section 2(d) of the PSTM (Amendment) Act, 2020, based on verifiable documentary evidence. The undersigned assumes full responsibility for the veracity of the contents herein.

Signature of Registrar/ Principal/
Controller of Examinations /
Head / Director of Educational Institution /
Director / Joint Director of Technical Education /
Registrar of Universities

Place:

Date: Seal of the Institution **Mobile No. _______**

@*If the candidate has completed different courses in different Institutions, such a certificate shall be obtained from each of these Institutions for the courses completed therein.*

**தமிழ்வழியில்பயின்றதற்கானசான்றிதழ்**@

திரு./திருமதி/செல்வி……………………………………………………………………….. (பெயர்) ……………………………… படிப்பினை (பட்டயம் / பட்டம் / முதுநிலை பட்டம் போன்றவை) **தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு** ……………….. ஆண்டு முதல் …………………………ஆண்டு வரை இந்நிறுவனத்தில் படித்தார் எனவும் அப்படிப்பினை………………………………(பட்டயம் / பட்டம் / முதுநிலை பட்டம் போன்றவை) திருப்திகரமாக நிறைவு செய்தார் எனவும் சான்றளிக்கப்படுகிறது.

திரு./திருமதி/செல்வி……………………………………………………………………….. (பெயர்) அவர்களுக்கு **தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக வழங்கப்படும் கல்வி உதவித் தொகை** வழங்கப்பட்டது / வழங்கப்படவில்லை.

தமிழ் வழியில் படித்தோருக்கான முன்னுரிமை அளிக்கும் (திருத்தச்) சட்டம், 2020 பிரிவு 2 (d)ன்கீழ், ஆதார ஆவணங்களை சரிபார்த்ததன் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வுள்ளடக்கங்களின் உண்மைத்தன்மைக்கு இச்சான்றிதழில் கையொப்பமிட்டுள்ளவர் முழுப்பொறுப்புடையவர் ஆவார்.

கையொப்பம்
பதிவாளர் / முதல்வர் /
தேர்வுக்கட்டுப்பாட்டுஅலுவலர் /
கல்விநிறுவனத்தலைவர் /
இயக்குநர் / தொழில் நுட்பக் கல்வி
இயக்குநர் / இணை இயக்குநர்/
பல்கலைக்கழகங்களின் பதிவாளர்

இடம்: கல்வி நிறுவனத்தின் **(அலைபேசிஎண்**…………….**)**
நாள்: அலுவலக முத்திரை

@ தேர்வர் வெவ்வேறான படிப்புகளை வெவ்வேறு நிறுவனங்களில் நிறைவு செய்துள்ளார் எனில், தான் படிப்பினை நிறைவு செய்த ஒவ்வொரு நிறுவனத்திலும் தனித்தனியாக இச்சான்றிதழைப் பெறவேண்டும்.

**14-S.** **<u>குற்றவியல் வழக்குகள் / ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்</u>**
**<u>Information regarding Criminal Cases / Disciplinary Cases</u>**

(i) **இணையவழி விண்ணப்பத்தில் நிலுவையிலுள்ள குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றி தெரிவித்துள்ள விண்ணப்பதாரர், அது தொடர்பான முதல் தகவல்அறிக்கையின் நகலை / குற்றக் குறிப்பாணை / காரணம் கேட்கும் குறிப்பாணையின் நகலை (நேர்வுக்கேற்ப) கண்டிப்பாக பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Candidates who have declared pending criminal or disciplinary cases in their online application, must upload / produce the copy of First Information Report (FIR) or memorandum of charges / show cause notice, as the case may be. Failure to upload / produce such papers when called for, shall result in rejection of candidature after due process.

(ii) **விண்ணப்பதாரர், தங்கள் மீதான குற்றவியல் நடவடிக்கைகளில் குற்றத் தீர்ப்பு / ஒழுங்கு நடவடிக்கைகளில் தண்டனை விதிக்கப்பட்டது தொடர்பாக தங்களது இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், கோரும் பொழுது தொடர்புடைய நீதிமன்ற ஆணை அல்லது விடுவிக்கப்பட்ட ஆணை அல்லது ஒழுங்கு நடவடிக்கை சார்ந்த குறிப்பாணையினை பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

Candidates who have declared conviction in criminal cases or punishment in disciplinary cases, in their online application, must upload / produce the relevant court orders and/or release orders or memorandum of proceedings, as the case may be, when called for. Failure to upload / produce such papers, shall result in rejection of candidature after due process.

(iii) **தடையின்மைச்** சான்றிதழை சமர்ப்பித்த பிறகோ அல்லது இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பிறகோ, நியமனம் தொடர்பான பணிகள் முழுமையாக நிறைவடைவதற்கு முன்வரை உள்ள தெரிவு பணிகளின் எந்த ஒரு நிலையின் போதும் விண்ணப்பதாரர் மீது, ஏதேனும் குற்றவியல் வழக்கு பதியப் பட்டிருந்தாலோ / ஒழுங்கு நடவடிக்கை

எடுக்கப் பட்டிருந்தாலோ, அவர் குற்றத்தீர்ப்பு / தண்டனை ஏதும் பெற்றிருந்தாலோ, தேர்வாணையத்தால் ஆவணங்களைப் பதிவேற்றம் / சமர்ப்பிக்கக் கோரும் நிலையில், விண்ணப்பதாரர் அது குறித்த உண்மை விவரங்களை, தேர்வாணையத்திற்குத் தெரிவித்தல் வேண்டும். மேலும், இந்த அறிவுரையினை கடைபிடிக்கத் தவறினால் அத்தகைய விண்ணப்பதாரருடைய விண்ணப்பம் தேர்வாணையத்தால் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் இரத்து செய்யப்பட்டு, ஓராண்டுக்கு தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர்.

In case any criminal case is filed / disciplinary action is taken against or conviction / punishment is imposed on a candidate after submission of the online application, at any stage of the recruitment process before the completion of the entire selection process, such candidates should report this fact to the Commission in the next immediate stage when Commission calls for uploading / producing documents. Failure to comply with these instructions shall result in rejection of candidature after due process and debarment for a period of one year.

(iv) **நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் / குற்றவியல் நடவடிக்கைகள், விண்ணப்பதாரரின் தெரிவு வாய்ப்புகளை(Selection prospects) எவ்வகையிலும் பாதிக்காது. எனினும், மேற்கண்ட தகவல்களை விண்ணப்பதாரர் தேர்வாணையத்திற்கு தெரிவிக்கத் தவறினால், (எவ்வித உள்நோக்கமுமின்றி இருந்தாலும்) விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.**

The pendency of disciplinary cases / criminal cases shall in no way affect the selection prospects of candidates. However, failure to inform such pendency, even unintentionally, shall result in rejection of candidature after due process.

## 15. <u>எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டம்</u><br><u>SYLLABI FOR WRITTEN EXAMINATION</u>

அனைத்துப் பாடங்கள்/ தேர்வுகளுக்கான பாடத்திட்டங்கள், தேர்வாணையத்தின் இணையதள முகவரி **www.tnpsc.gov.in –**ல் கிடைக்கப் பெறும்.

The syllabi for all subjects / all examinations are available in the Commission’s website **<u>www.tnpsc.gov.in</u>**

## 16. <u>நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு அறிவுரைகள், பதிலி எழுத்தரைப் பயன்படுத்துதல் முதலியன</u>

**<u>SPECIAL INSTRUCTIONS FOR PERSONS WITH BENCHMARK DISABILITIES, USAGE OF SCRIBES, ETC.</u>**

**16-A.** பதிலி எழுத்தரின் உதவி வேண்டும் என **இணையவழி** விண்ணப்பத்தில் கோரியதன் பேரில், நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர், பதிலி எழுத்தரின் உதவியைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவார். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அல்லது தேர்வு நாளன்று பதிலி எழுத்தர் வேண்டும் எனக் கோருவது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

Candidates with benchmark disability, shall be permitted the services of a scribe upon making such request in their online application. Requests for scribes made after the submission of application or on the date of examination will receive no attention.

**16-B.** பார்வையற்ற மற்றும் தன்னுடைய கையினால் எழுத இயலாத மாற்றுத்திறன் கொண்ட விண்ணப்பதாரர், தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொள்ளும்போது கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டு, பதிலி எழுத்தர்**(Scribe)** உதவியுடன் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்.

Visually impaired candidates and orthopedically challenged candidates who are unable to use their hands for writing, are allowed the assistance of a scribe subject to the following conditions:

(i) பதிலி எழுத்தரை **(Scribe)** தேர்வாணையமே நியமிப்பதுடன் அவர்களுக்கான கட்டணம் தேர்வாணையத்தால் வழங்கப்படும். பதிலி எழுத்தரின் பணியினை பயன்படுத்திக் கொள்ளும் விண்ணப்பதாரர் பதிலி எழுத்தருக்கென தனியே எந்தத் தொகையும் செலுத்தத் தேவையில்லை.

The Commission will arrange for scribes and the fee amount to be paid to the scribes will be met by the Commission. Candidates availing of the services of the scribes need not pay any fee to them.

(ii) **தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளை எழுதும் பொழுது பதிலி எழுத்தரின் பணியினைப் பயன்படுத்திக் கொள்ளும் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய அனைத்து மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரரும் தரைத்தளத்தில் தலைமைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டு அறைக்கு அருகில், அவரின் நேரடி மேற்பார்வையின்கீழ், தனி அறையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.**

All candidates with benchmark disability, availing of the services of the scribes while appearing for the written examination will be seated in a separate room in the ground floor, in close vicinity to the Chief Invigilator's control room and under the close supervision of the Chief Invigilator.

**16-C.** **நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர், விடைத்தாளில் தங்களது கையொப்பம் மற்றும் இடதுகை பெருவிரல் ரேகை அடையாளத்தை அதற்கென கொடுக்கப்பட்டுள்ள இடங்களில் (முடியும் பட்சத்தில்) இட வேண்டும்.**

Candidates with benchmark disability must affix their signature and left hand thumb impression in the space provided in the answer sheets, if possible.

**16-D.** **கையொப்பமிட இயலாத மற்றும் பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர், தேர்வு முடிவடைந்த பின்னர், OMR விடைத்தாளின் பகுதி– 1-ல் அதற்கென கொடுக்கப்பட்ட இடத்தில் தங்களது இடதுகைப் பெருவிரல் ரேகைப் பதிவினை வைக்க வேண்டும்.**

Visually disabled / orthopaedically disabled candidates who have been permitted to use scribe facility, who are unable to affix their signature, may affix their left hand thumb impression alone in the space provided in Part I of the OMR answer sheet after the closure of examination.

**16-E.** **இடது கையைப் பயன்படுத்த இயலாத மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர், தங்களது வலது கையின் பெருவிரல் ரேகைப் பதிவினை வைக்க வேண்டும்.**

Candidates who are unable to use their left hand, must affix right hand thumb impression.

**16-F.** **இரண்டு கைகளையும் பயன்படுத்த இயலாத மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர், கையொப்பம் மற்றும் பெருவிரல் ரேகைப் பதிவினை வைக்க வேண்டிய இடங்களை காலியாக விட்டு விடலாம்.**

Candidates who are unable to use both hands, and who have been permitted to use scribe, may leave the signature and thumb impression columns blank.

<u>குறிப்பு / *Note*</u>*:*

**மேலே 16-D, 16-E மற்றும் 16-F-ல் கூறப்பட்டுள்ள நிகழ்வுகள் நேர்ந்தால், பதிலி எழுத்தர் / அறைக் கண்காணிப்பாளர் மற்றும் தலைமைக் கண்காணிப்பாளர் ஆகியோர் இது குறித்து அறிக்கை ஒன்றினை வழங்குமாறு அறிவுறுத்தப்படுவர்.**

*In the case of instances as stated at16-D, 16-E and16-F above, the scribe / room invigilator and Chief Invigilator shall be instructed to furnish a specific report in this regard.*

**16-G.** தேர்வினை வேகமாக எழுத இயலாத உடல் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர், பதிலி எழுத்தரின் உதவியுடன் தேர்வு எழுதும்போது ஒரு மணி நேரத்திற்கு **20** நிமிடம் வீதம் கூடுதல் நேரம்**(Compensation)** வழங்கப்படும்.

Compensatory time of not less than 20 minutes per hour of examination will be allowed to candidates with benchmark disability, who have physical limitation to write including that of speed and who are utilizing the services of a scribe.

**16-H.** பதிலி எழுத்தரின் உதவியின்றி, தேர்வு எழுதும் அனைத்து நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மற்றும் தேர்வினை வேகமாக எழுத இயலாத மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரருக்கும், மூன்று மணி நேரம் நடைபெறும் தேர்விற்கு குறைந்தபட்சம் ஒரு மணி நேரம் கூடுதலாக வழங்கப்படும். மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரரின் தனிப்பட்ட நிலையைப் பொறுத்து இது மேலும் உயர்த்தப்படலாம் (அரசாணை (நிலை) எண்.**43**, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த**(M)**துறை, நாள் **06.04.2018**-ல் உள்ள ஆணைகளின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டது).

All candidates with disability who have physical limitation with regard to writing including that of speed and <u>not</u> availing the services of a scribe will be allowed additional time of a minimum of one hour for an examination of three hours duration which could further be increased on a case-to-case basis (amended in terms of orders issued in G.O.(Ms.) No. 43, Personnel& Administrative Reforms (M)Department, dated 06.04.2018.

**<u>குறிப்பு</u>**<u>*/ Note*</u>*:*

**மாடிஏற இயலாத நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர், தேர்வுக்கூடத்தின் தரைத்தளத்தில் தலைமைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டு அறைக்கு அருகில் உள்ள அறையில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்.**

*All persons with benchmark disability, who are unable to climb the staircase, will be allowed to write the examination in a roomin the ground floor, in close vicinity to the Chief Invigilator’s control room.*

## 17. தேர்வாணையம் நடத்தும் பல்வேறு நியமனங்களுக்கான போட்டித் தேர்வுகள் (கொள்குறி வகைத் தேர்வுகள் மற்றும் விரிந்துரைக்கும் வகைத் தேர்வுகள்) எழுதும் விண்ணப்பதாரர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்

**INSTRUCTIONS TO BE FOLLOWED BY CANDIDATES WHILE APPEARING FOR WRITTEN EXAMINATIONS (OBJECTIVE TYPE AND DESCRIPTIVE TYPE) CONDUCTED BY THE COMMISSION**

### 17-A. பொதுவான அறிவுரைகள் General Instructions

(i) தேர்வர்கள், தேர்வாணைய இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட அனுமதிச் சீட்டுடன் தேர்வு மையத்திற்கு வர வேண்டும். தவறும் பட்சத்தில், தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். தேர்வர்கள், தங்களது ஆதார் அட்டை / கடவுச்சீட்டு **(Passport)** /ஓட்டுநர் உரிமம் / நிரந்தரக் கணக்கு அட்டை**(PAN card)** / வாக்காளர் அடையாள அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகலை தேர்வுமையத்திற்கு கொண்டு வர வேண்டும்.

Candidates shall present themselves at the examination venue with the memorandum of admission (hall ticket) downloaded from the Commission's website, failing which, they shall not be allowed to write the examination. Candidates shall also bring with them, a photocopy of their Aadhaar card / Passport / Driving Licence / Permanent Account Number (PAN) card / Voter ID card.

(ii) தேர்வர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்தில் (அனுமதிச்சீட்டில் குறிப்பிட்டுள்ளபடி) மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். தேர்வு மையத்தை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது. உரியமுன் அனுமதி இல்லாமல், தேர்வர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வுமையத்திற்குப் பதிலாக வேறொரு தேர்வு மையத்தில் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

Candidates must appear for the examination at the venue they have been allotted, as mentioned in the memorandum of admission (hall ticket). Change of venue will not be permitted. No candidate, without prior approval, shall be allowed to appear for the examination at a venue other than the one originally allotted.

(iii) **தேவைப்பட்டால், தேர்வுக்கூடத்தில் காவல்துறையிலுள்ள ஆண் / பெண் காவலர்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட நபர்களால் தேர்வர்கள், முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.**

Candidates may be subjected to frisking at the examination venue, if required, with the assistance of male/female police personnel or any authorized persons, as the case may be.

(iv) **சொந்த உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கான வசதி தேர்வுமையத்தில் இருக்கும். தேர்வுமையத்திலுள்ள, பாதுகாப்பு அறை குறித்து தேர்வருக்குத் தெரிவிக்கப்படும். பாதுகாப்பு அறையினுள் வைக்கப்படும் அவர்களது உடைமைகளுக்கு டோக்கன் வழங்கப்படும். தேர்வு முடிவடைந்த பின்னர், டோக்கன் வழங்கிய அதிகாரியிடம், டோக்கனை திரும்ப கொடுத்து, உடைமைகளைப் பெற்றுக் கொள்ளலாம். எனினும், தேர்வு எழுதுவதற்குத் தேவைப்படாத பொருட்களைக் கொண்டு வர வேண்டாம் என தேர்வர் அறிவுறுத்தப்படுகிறார். பொருட்களின் பாதுகாப்பிற்கு முழுவதுமாக உத்திரவாதம் அளிக்க இயலாது. சொந்த உடைமைகளை பாதுகாப்பு அறையில் வைப்பது, தேர்வரின் சொந்த பொறுப்பிற்குட்பட்டதாகும்.**

Facility for safe keeping of personal belongings will be available in the examination venue. Candidates shall be informed about the cloak room facility available in the examination venue. They shall be issued tokens against their belongings deposited in the cloak room. Upon completion of the examination, they shall collect their belongings by depositing the token back with the issuing authorities.

However, the candidates are advised to bring no material other than the ones essential for the examination purpose. Safety of the material cannot be fully assured. Deposition of personal belongings in the cloak room shall be at the risk of the candidates.

(v) **தேர்வர்களுடன் வரும் பெற்றோர்கள் மற்றும் பிறர், தேர்வு நடைபெறும் மையத்திற்குள்அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

Parents and others who accompany the candidates will not be permitted inside the examination venue.

(vi) **தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில், தேர்வரின் புகைப்படம் அச்சிடப்படவில்லை அல்லது தெளிவாக இல்லை அல்லது தேர்வரின் தோற்றத்துடன் பொருந்தவில்லை என்றாலோ, தேர்வர் தன்னுடைய கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் ஒன்றினை ஒரு வெள்ளை காகிதத்தில் ஒட்டி, அதில் தனது பெயர், முகவரி, பதிவு எண்ணை குறிப்பிட்டு, முறையாகக் கையொப்பமிட்டு, தேர்வுக்கூட அனுமதிச்சீட்டின் ஒளிநகல் மற்றும் ஆதார் அட்டை / கடவுச்சீட்டு(Passport)/ஓட்டுநர்உரிமம் / நிரந்தரக்கணக்கு அட்டை(PAN card) / வாக்காளர் அடையாள அட்டை, இவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகலை இணைத்து, அதனை தலைமைக் கண்காணிப்பாளரிடம் மேலொப்பமிடும் பொருட்டு சமர்ப்பிக்க வேண்டும்.**

If the photograph of the candidate in the memorandum of admission (hall ticket) is not printed or not clear or does not match with candidate’s appearance, he should furnish a separate photograph affixed on a plain paper, along with his name, address,register number and signature along with a copy of the memorandum of admission (hall ticket) and a copy of Aadhaar card / Passport / Driving Licence / Permanent Account Number (PAN) card / Voter ID card, to the Chief Invigilator, who shall countersign it.

(vii) **மேலும், தேர்வர் தன்னுடைய அசல் அடையாள அட்டையை, சரிபார்ப்பு நோக்கத்திற்காக அறைக்கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அறைக் கண்காணிப்பாளர் தேர்வரின் மெய்த்தன்மையை உறுதி செய்த பிறகு, தேர்வரின்**

மெய்த்தன்மையை குறித்தும், தேர்வரால் அளிக்கப்பட்ட தகவல்கள் பின்னாளில் தவறானவை என கண்டறியப்படும் பட்சத்தில், தேர்வாணையம் எடுக்கும் எந்தவொரு குற்றவியல் அல்லது மற்ற நடவடிக்கைக்கும் பொறுப்பேற்பார் என்பது குறித்தும் ஓர் உறுதிமொழியினை தேர்வரிடமிருந்து பெற்று தலைமைக் கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

The ID proof in original, should also be shown to the room invigilator for verification. The room invigilator upon verification of the identity of the candidate, shall obtain an undertaking as to the genuineness of the candidate and to the effect that he is aware that he is liable to any criminal/penal action initiated by the Commission, if the information furnished is found to be incorrect at a later date. The undertaking shall then be handed over to the Chief Invigilator.

(viii) தேர்வு எழுத வரும் தேர்வர்களின் மெய்த்தன்மையை உறுதி செய்யவும், இதர தேர்வு விதிமுறைகளை தேர்வர்களுக்கு விளக்கும் விதமாகவும், தேர்வர்கள், தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு ஒருமணிநேரத்திற்கு முன்பாகவே தேர்வுகூடங்களுக்கு வருகை புரிதல் வேண்டும்.

In order to facilitate verification of the identity of the candidates and explanation of the procedures pertaining to the examination, the candidates shall present themselves at the examination venue **one hour before** the time scheduled for the commencement of the examination.

(ix) தேர்வுமையத்தின் அனைத்து நுழைவாயில்களும் தேர்வு தொடங்குவதற்கு **30** நிமிடங்களுக்கு முன்னதாகவே மூடப்படும். அதன் பின்னர், வரும் எவரும் தேர்வுமையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் (எ.கா. தேர்வர்கள் காலையில் நடைபெறும் தேர்வுகளுக்கு, தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரம் 09.30 மணி எனில் 09.00 மணிக்கும், பிற்பகல் நடைபெறும் தேர்வுகளில் தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரம் 02.00 மணி எனில், 01.30 மணிக்கும் தேர்வு மையத்திற்குள் வந்து விட வேண்டும். அதன் பின்னர் வரும் எவரும் தேர்வு மைய வளாகத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்)

All gates serving as entry into the examination venue shall be closed **thirty minutes** before the commencement of the examination and no one shall be allowed into the venue thereafter. (e.g., in case of forenoon session, for an examination scheduled to commence at 09.30 am, the candidates should present themselves at 09.00 am in the examination venue. In case of afternoon session, for an examination scheduled to commence at 02.00 pm, the candidates should present themselves at 01.30 pm. After that no candidate shall be permitted to enter the premises of the examination venue).

(x) **காலை மற்றும் பிற்பகல் ஆகிய இருவேளைகளில் நடைபெறும் தேர்வுகளில், பிற்பகல் தேர்விற்கு, தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே தேர்வர்கள் தேர்வுக்கூடத்துக்குள் வந்துவிட வேண்டும். அதன் பின்னர் வருகைபுரியும் எவரும் தேர்வுக்கூடத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

In case of examinations to be held in both forenoon and afternoon sessions, the reporting time for the afternoon session shall also be **thirty minutes before** the commencement of the examination and no one shall be allowed into the venue thereafter.

(xi) **எதிர்பாராத நிகழ்வுகளில், தொற்றுநோய் போன்ற காலங்களில் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகள்/ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அதாவது சானிடைசர் பயன்படுத்துவது, முகக்கவசம் அணிவது மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் போன்றவைகளை கடைப்பிடிக்கவேண்டும்.**

In case of extraordinary circumstances, like pandemic conditions, etc., the procedures / precautions prescribed (e.g., use of sanitizer and face mask, practising social distancing) shall be adhered to.

(xii) **விண்ணப்பதாரர் தேர்வுக்கூடத்தில் அறைக்கண்காணிப்பாளர்/ தலைமைக் கண்காணிப்பாளர் / ஆய்வு அலுவலர்கள் / அதிகாரம் அளிக்கப்பட்ட நபர்கள் எவரும் அனுமதிச்சீட்டினை ஆய்வுக்காக கேட்கும்பொழுது அவர்களிடம் காண்பிக்க வேண்டும்.**

Candidates must show the memorandum of admission (hall ticket) to the Invigilator / Chief Invigilator / inspection authorities / any authorized persons of the examination hall, on demand, for verification.

(xiii) **தேர்வர்கள் தங்களது அனுமதிச்சீட்டில் அறைக் கண்காணிப்பாளரின் கையொப்பத்தினை கட்டாயம் பெறவேண்டும். தேர்வர்கள் அனுமதிச்சீட்டினை தங்களது பாதுகாப்பில் நிரந்தரமாக வைத்துக் கொள்ளவேண்டும். தேர்வர்கள், தங்களது அனுமதிச்சீட்டினை அடுத்த கட்ட தேர்வுக்கு தெரிவு செய்யப்படும் நேர்வுகளில் / தேர்வாணையத்தால் கோரப்படுகின்ற நேர்வுகளில், சமர்ப்பிக்க வேண்டும்.**

Candidates must ensure that the Room Invigilator signs in the memorandum of admission (hall ticket). The memorandum of admission should be preserved carefully and retained permanently. The memorandum of admission should be produced if shortlisted for the next stage of selection / whenever sought for by the Commission.

(xiv) **தேர்வர்கள், அனுமதிச்சீட்டினை தேர்வுக்குப் பின்னர், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒருநகல் எடுத்து தங்கள் வசம் வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வு அனுமதிச்சீட்டின் பிரதி வழங்கப்படமாட்டாது.**

The memorandum of admission may also be photocopied, as a precaution, after the exam is over. **No duplicate memorandum of admission (hall ticket) will be issued later.**

(xv) தேர்வு அறையில் மட்டுமின்றி, தேர்வு மைய வளாகத்திலும் விண்ணப்பதாரர் கண்டிப்பாக ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். மது அருந்திவிட்டு வரும் விண்ணப்பதாரர், தேர்வுக்கூடத்தில் புகைப்பிடிக்கும் விண்ணப்பதாரர், வாக்குவாதத்தில் ஈடுபடும் விண்ணப்பதாரர் மற்றும் தேர்வுக்கூட கண்காணிப்பாளர் / முதன்மைக் கண்காணிப்பாளர், ஆய்வுக்குழுவினர் அல்லது தேர்வு எழுதவரும் மற்ற விண்ணப்பதாரருடன் தேர்வு அறையிலோ அல்லது தேர்வுக்கூட வளாகத்திலோ, தேர்வு நடைபெறுவதற்கு முன்னரோ, பின்னரோஅல்லது தேர்வு நடைபெறும்பொழுதோ, தவறாக நடக்கும் விண்ணப்பதாரரின் விடைத்தாள் / விடைப்புத்தகம் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது மற்றும் தேர்வாணையம் தக்கதென கருதும்காலம் வரை தகுதிநீக்கம் செய்யப்படுவார். மேலும், அவ்விண்ணப்பதாரர் மீது தகுந்த குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

Candidates should maintain strict discipline not only in the examination room, but also inside the campus of the examination venue. Candidates found smoking / intoxicated, or found to have entered into a quarrel of any kind, or to have misbehaved with the Chief Invigilator or with the inspection authorities or with the invigilator or with any other candidate either in the examination hall or inside the campus of the examination venue, either before, during or after the examination, are liable to invalidation of answer sheet/booklet and debarment for any period the Commission may deem fit, as well as appropriate criminal action.

(xvi) தேர்வுக்கூடத்திற்கு உள்ளே குடிநீர், தேநீர், காபி, சிற்றுண்டி மற்றும் குளிர்பானங்கள்போன்றவை அனுமதிக்கப்பட மாட்டாது.

Water, tea, coffee, snacks, soft drinks, etc., will not be allowed inside the examination venue.

(xvii) உடல்நலக் குறைவுடன் தேர்வு எழுதவரும் விண்ணப்பதாரர், தலைமைக் கண்காணிப்பாளரின் அனுமதி பெற்று அவர்களுக்கு தேவையான மருந்து மற்றும் மருந்து உபகரணங்களைக் கொண்டு வந்து, அறைக்கண்காணிப்பாளரின் மேஜையில் வைத்து தேவைப்படும்பொழுது பயன்படுத்திக் கொள்ளலாம்.

Candidates suffering from serious health issues, may, with the consent of the Chief Invigilator, deposit medication or other medical requirements on the room invigilator's table for use, if needed.

(xviii) **தேர்வர்கள் நேரத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு, கீழ்கண்ட ஒவ்வொரு நடவடிக்கைகளின்போதும் ஒரு எச்சரிக்கை மணி ஒலிக்கப்படும். தேர்வு அறைக்கண்காணிப்பாளர்களால் அவ்வப்பொழுது உரிய அறிவிப்புகள் வழங்கப்படும்.**

| **நிகழ்வு** | **கால வரிசை** | **மணி ஒலிக்கும் கால அளவு** |
|---|---|---|
| **தேர்வு தொடங்குவதற்கு முன்** | | |
| <u>கொள்குறிவகைத் தேர்வு</u> :<br>(i) OMR விடைத்தாள் வழங்குதல்<br>(ii) வினாத் தொகுப்பினை வழங்குதல் | 30 நிமிடங்களுக்கு முன்பாக<br>15 நிமிடங்களுக்கு முன்பாக | சிறு மணியோசை (2 நொடிகள்) |
| <u>விரித்துரைக்கும் வகைத் தேர்வு:</u><br>வினாக்களுடன் கூடிய விடைத்தாள் தொகுப்பு வழங்குதல் | 15 நிமிடங்களுக்கு முன்பாக | சிறு மணியோசை (2 நொடிகள்) |
| **தேர்வு தொடங்கும் பொழுது மற்றும் நடைபெறும்பொழுது** | | |
| தேர்வு எழுதத் தொடங்குதல் | நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் | நீண்ட மணியோசை (5 நொடிகள்) |
| தேர்வு நடைபெறும் பொழுது | ஒவ்வொரு ஒரு மணி நேரத்திற்கும் | சிறுமணியோசை (2 நொடிகள்) |
| தேர்வு முடிவடைவதற்கு முன் | தேர்வு முடிவடைவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பாக | சிறு மணியோசை (2 நொடிகள்) |

| தேர்வு முடிவுறும்போது மற்றும் முடிந்த பின் | | |
|---|---|---|
| தேர்வு முடிவடைதல் | நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் | நீண்ட மணியோசை (5 நொடிகள்) |
| <u>கொள்குறிவகைத் தேர்வு மட்டும்:</u><br>தேர்வு முடிவடைந்த பின்னர் | 15 நிமிடங்களுக்குப் பின்னர் | நீண்ட மணியோசை (5 நொடிகள்) |

An alarm bell shall be sounded in respect of each of the following activities in order to alert the candidates. The room invigilators shall make appropriate announcements as and when required.

| Event | Timeline | Duration of Bell |
|---|---|---|
| **Before Commencement of Examination** | | |
| <u>Objective type Examination:</u><br>(i) Distribution of OMR Answer Sheets<br>(ii) Distribution of Question Booklets | 30 minutes before<br>15 minutes before | Short Bell (2 seconds)<br>Short Bell (2 seconds) |
| <u>Descriptive type Examination:</u><br>Distribution of Question-cum-Answer Booklets | 15 minutes before | Short Bell (2 seconds) |
| **At the Start and During the Examination** | | |
| Commencement of the Examination | At the Designated Time | Long Bell (5 seconds) |
| During the Examination | Every One Hour | Short Bell (2 seconds) |
| Before Conclusion of the Examination | 10 minutes before conclusion | Short Bell (2 seconds) |
| **At the Conclusion and After the Examination** | | |
| Conclusion of the Examination | At the Designated Time | Long Bell (5 seconds) |
| <u>Objective type Examination only:</u><br>After Conclusion of the Examination | 15 minutes after | Long Bell (5 seconds) |

(xix) **கொள்குறி வகைத் தேர்வுகளாக இருப்பின், தேர்வர்கள் தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு அரைமணிநேரம் முன்பாகவே தேர்வு அறைக்குள் தங்களது இருக்கையில் அமர்ந்து விடவேண்டும்.**

In case of objective type examinations, the candidates shall compulsorily be seated in the examination room **thirty minutes before** the time scheduled for the commencement of the examination.

(xx) **விரிந்துரைக்கும் வகைத் தேர்வுகளாக இருப்பின், தேர்வர்கள் தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே தேர்வறைக்குள் தங்களது இருக்கையில் அமர்ந்து விடவேண்டும்.**

In case of descriptive type examinations, the candidates shall compulsorily be seated in the examination room **thirty minutes before** the time scheduled for the commencement of the examination.

(xxi) **விரிந்துரைக்கும் வகைத் தேர்வுகளாக இருப்பின், தேர்வர்கள் தேர்வறையின் உள்ளே நுழைந்த முதல் 15 நிமிடங்கள், Biometric விவரங்களைக் கொண்டு தேர்வரின் அடையாளத்தினை உறுதி செய்வதற்காக பயன்படுத்தப்படும். தேர்வர்களின் Biometric விவரங்கள் தேர்வாணையத்தால் அத்தேர்வு மையத்திற்கு நியமிக்கப்பட்ட தொழில்நுட்பப்பணியாளர்களால் சரிபார்க்கப்படும்.**

In the case of descriptive type examinations, the first fifteen minutes after the entry of candidates into the examination room shall be used exclusively for biometric authentication.The biometric details of the candidates shall be verified by the technical personnel deputed by the office of the Commission to the examination venue.

(xxii) **தேர்வறையின் இருக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு எண், பெயர் மற்றும் புகைப்படத்துடன் சரிபார்த்தப் பின்னரே, தேர்வர்கள் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமர வேண்டும்.**

Candidates must sit in the place allotted to them after checking the name, register number and photo as pasted on the table.

(xxiii) **தேர்வர்கள் தங்களது OMR விடைத்தாளில் / விடைப்புத்தகத்தில் கேட்கப்பட்டுள்ள தகவல்களை நிரப்புவது தொடர்பாக அறைக்கண்காணிப்பாளர் கூறும் அறிவுரைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.**

Candidates must follow the instructions from the invigilators regarding filling up of OMR answer sheets / question-cum-answer booklet.

(xxiv) **[4][விண்ணப்பதாரரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு, அவர்கள் எழுத்துத் தேர்விற்கான அனைத்துப் பாடத் தாள்களுக்கும் வருகை புரிந்திருக்க வேண்டும் மற்றும் விண்ணப்பதாரர் ஏதேனும் ஒரு பாடத்தாளுக்கு வருகை புரியவில்லை என்றாலும், அவர்கள் கலந்து கொண்ட அத்தேர்விற்கான மற்ற பாடத்தாள்களின் விடைத்தாள்களும் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.**

Candidate should appear for all the papers in the written examination for his / her answer sheets to be evaluated and in case the candidate absents himself / herself for any of the papers, the papers attended will not be evaluated**]**[4].

**17-B. <u>கொள்குறி வகைத் தேர்வுகள்</u>**

**<u>Objective Type Examinations</u>**

(i) **தேர்வர், தேர்வு அறைக்கு கருமைநிற மை கொண்ட பந்துமுனைப் பேனா(ball point pen), அனுமதிச்சீட்டு மற்றும் குறிப்பிடப்பட்ட அடையாள சான்றாவணங்களில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகல் ஆகியவை மட்டுமே எடுத்துவர அனுமதிக்கப்படுவர். மற்ற பொருட்களுக்கு அனுமதி இல்லை.**

---

4. Incorporated vide Commission's Orders dated 10.08.2022

Candidates must carry only black ball point pen, a photocopy of any one proof of ID, as specified and memorandum of admission (hall ticket) inside the examination room. Other materials are not allowed.

(ii) **கொள்குறிவகைத் தேர்வுகளில், தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாக OMR விடைத்தாள் மற்றும் அதனை நிரப்புவது தொடர்பான அறிவுரைகள் வழங்கப்படும்.**

The OMR answer sheet as well as instructions regarding filling up of the same, shall be given **thirty minutes before** the time scheduled for the commencement of the objective type examination.

(iii) **தேர்வர்களது அனுமதிச்சீட்டில் குறிப்பிட்டுள்ள பதிவு எண், பெயர், புகைப்படம், தேர்வின் பெயர் மற்றும் தேர்வு மையம், தேர்வு மற்றும் நேரம் போன்ற விவரங்களை உள்ளடக்கிய சுயவிவரங்கள் அச்சிடப்பட்ட OMR விடைத்தாள் தேர்வு அறையில் வழங்கப்படும். OMR விடைத்தாளினை பயன்படுத்துவதற்கு முன்பு, அதில் அச்சிடப்பட்டுள்ள புகைப்படம், மற்றும் விவரங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு, அவைகள் அத்தேர்வரின் விவரங்கள்தான் எனவும் உறுதி செய்துகொள்ள வேண்டும். OMR விடைத்தாள் / உள்ள தகவல்கள் ஏதேனும் தவறாக இருந்தால் அல்லது எந்த வகையிலேனும் குறைபாடுடையதாக இருந்தால், தேர்வர் விவரங்களை நிரப்புவதற்கு முன்னர், அதனை உடனடியாக மாற்றிக் கொடுக்கும்படி அறைக்கண்காணிப்பாளரிடம் கோரவேண்டும். OMR விடைத்தாள் பயன்படுத்திய பின்னர் மாற்றித் தரப்படமாட்டாது.**

Pre-printed personalized OMR answer sheets containing photograph, name, register number, subject and examination centre and venue, date and session as mentioned in the memorandum of admission (hall ticket) will be supplied in the examination room. Before using the OMR answer sheet, the photograph and the details printed on it shall be verified by the candidates. It shall be ensured that the OMR answer sheet pertains to the candidate only. If any

of the details are found to be incorrect or defective in any way, it should be immediately reported to the room invigilator for replacement. No OMR answer sheet will be replaced after use.

(iv) **OMR விடைத்தாளின் 2-ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள சரியான முறைப்படி, விவரங்கள் மற்றும் விடைக்கான கட்டங்களை முழுவதுமாக நிரப்ப வேண்டும்.**

Candidates shall shade all fields of the OMR answer sheet, including the particulars required as well as answers, as per the correct method specified in page 2 of the OMR answer sheet.

(v) **தேர்வர்கள், விடைத்தாளில் தங்களது கையொப்பத்தினை அதற்கென உள்ள இரண்டு இடங்களில் இட வேண்டும். தேர்வு தொடங்குவதற்கு முன் விடைத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளைப் படித்தபின் ஒரு கையொப்பத்தினையும் தேர்வு முடிவடைந்தபின் மற்றொரு கையொப்பத்தினையும் இடவேண்டும்.**

Candidates shall affix their signature at the two designated places in the answer sheet. One signature shall be affixed after having read the instructions therein, before the commencement of the examination and the other signature shall be affixed, after the conclusion of the examination.

(vi) **தேர்வு முடிவடைந்த பின், தேர்வர்கள், அவர்களது இடது கைப் பெருவிரல் ரேகைப் பதிவினை விடைத்தாளில் அதற்கென உரியகட்டத்தில் இடவேண்டும்.**

Candidates shall affix his/her left hand thumb impression in the appropriate box provided in the answer paper, after the examination is over.

(vii) **தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வினாத்தொகுப்பு விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.**

Candidates will be supplied with the question booklet fifteen minutes before commencement of the examination.

(viii) **தேர்வர்கள், வினாத்தொகுப்பின் எந்தவொரு பக்கத்திலும் எவ்வித குறியீடும் இடக்கூடாது. இவ்விதிமுறையை மீறும்பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**

Candidates must not tick mark / mark the answers in the question booklet. Failure to comply with this instruction will result in rejection of candidature.

(ix) **OMR விடைத்தாளில், வினாத் தொகுப்பு எண்ணை எழுதுவதற்கு மற்றும் அதற்கான வட்டங்களை நிரப்புவதற்கு முன், அனைத்து வினாக்களும் வினாத்தொகுப்பில் எவ்வித விடுதல்களுமின்றி அச்சிடப்பட்டுள்ளதா என்பதை தேர்வர்கள் முதலில் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ஏதேனும் குறைபாடு கண்டறியும் பட்சத்தில், அது குறித்து உடனடியாக அறைக்கண்காணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அதற்கு மாற்றாக, குறைபாடு இல்லாத முழுமையான வினாத்தொகுப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வினாத்தொகுப்பு எண்ணை OMR விடைத்தாளில் சரியாக எழுத வேண்டும். தேர்வு தொடங்கியபின்பு வினாத்தொகுப்பு / OMR விடைத்தாளில் ஏதேனும் குறைபாடு கண்டறியப்பட்டு முறையிட்டால், OMR விடைத்தாள் / வினாத்தொகுப்பு மாற்றித் தரப் படமாட்டாது.**

Before writing and shading the Question Booklet Number in the OMR answer sheet, the candidate shall verify whether all the questions are printed without any omission. In case any defect is found, it shall immediately be reported to the Room Invigilator and a replacement shall be obtained which is complete in all aspects. Correct Question Booklet Number which is used by the candidate shall be written in the OMR answer sheet. If any defect is noticed in the question booklet or OMR answer sheet after the commencement of the examination, it will not be replaced.

(x) **OMR விடைத்தாள் மற்றும் வினாத்தொகுப்பு ஆகியவற்றில் குறைபாடு ஏதேனும் இருக்கிறதா என சரிபார்க்கப்பட்ட பின்னர், விண்ணப்பதாரர் வருகைத்தாளில் தனது பெயர், பதிவெண் உள்ளதை உறுதி செய்து, அதில் தன்னுடைய வினாத்தொகுப்பின் எண்ணையும் குறிப்பிட்டு, கையொப்பத்தினை இடவேண்டும்.**


After checking the OMR answer sheet and the question booklet for discrepancies, candidates must sign in the attendance sheet, after verifying his name and register number therein, duly mentioning the question booklet number.

(xi) **தேர்வர்கள் வினாத்தொகுப்பு எண்ணை சரியாக எழுதுவதுடன், OMR விடைப்புத்தகத்தில் அதற்குரிய வட்டங்களில் சரியாக நிரப்ப வேண்டும். தேர்வர்களால் வட்டங்களில் நிரப்பப்பட்ட வினாத்தொகுப்பு எண்ணின்படியே அவர்களது OMR விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும்.**

The candidates must write and shade the Question Booklet Number correctly in the bubbles provided in the OMR answer sheet. The OMR answer sheets will be evaluated based on the Question Booklet Number shaded by the candidates in the bubbles.

(xii) **வினாத்தொகுப்பு எண்ணை நிரப்பும் சரியானமுறை கீழே விளக்கப்பட்டுள்ளது. எ.கா.: வினாத்தொகுப்பு எண் 27430896 எனில்:**

The correct method of shading Question Booklet Numberis illustrated below. For example, if the Question Booklet Number is 27430896:




(xiii) விண்ணப்பதாரரால் நிரப்பப்பட்ட வினாத்தொகுப்பு எண்ணை **OMR Scanner** –ஆல் கணிக்க இயலவில்லை எனில், அது விண்ணப்பதாரரால் வினாத்தொகுப்பு எண்ணை முறையற்று நிரப்புதல் அல்லது நிரப்பப்படாமல் விடுபட்டிருத்தல் போன்ற காரணங்களினால் ஏற்பட்டிருக்கலாம்; அத்தகைய விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய இயலாது. எனவே, அவ்விடைத்தாள்கள் செல்லாததாக்கப்படும்.

If the Question Booklet Number shaded by the candidate is not read by the OMR scanner, which may be due to improper or absence of shading of Question Booklet Number by the candidates, such answer sheets shall not be subjected to evaluation. Therefore, the said answer sheets shall be invalidated.

(xiv) தேர்வர், ஒவ்வொரு வினாவிற்கும் விடைத்தாளில் ஒரு வட்டத்தை மட்டும் கண்டிப்பாக நிரப்ப வேண்டும். ஒரு குறிப்பிட்ட வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்கள் நிரப்பப்பட்டிருந்தால், அவ்வினாவிற்கான விடை மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

Candidates must shade only one of the answer bubbles in the OMR answer sheet, for each question. In case more than one bubble is shaded for a particular question, that answer shall not be evaluated.

(xv) எந்த ஒரு வினாவிற்கும் விடைக்கான வட்டங்கள் நிரப்பப்படாமல் இருத்தல் கூடாது. ஏதேனும் கேள்விகளுக்கு வட்டங்கள் நிரப்பப்படாமல் இருப்பின், அவ்விடைத்தாள் செல்லாததாக்கப்படும். தேர்வருக்கு ஏதாவது ஒரு வினாவிற்கு விடை தெரியவில்லை எனில், **[E]** என்ற வட்டத்தை நிரப்ப வேண்டும். மொத்தம் எத்தனை வினாக்களுக்கு முறையே **[A], [B], [C], [D]** மற்றும் **[E]** விடைகளை நிரப்பியுள்ளார் என்ற விவரங்களை **OMR** விடைத்தாளின் பகுதி **2-**இன் பிரிவு **III-**ல் அதற்குரிய கட்டங்களில் எழுதுவதுடன் தொடர்புடைய வட்டங்களையும் தேர்வர்கள் நிரப்ப வேண்டும். தேர்வர்களால் **OMR** விடைத்தாளில் நிரப்பப்பட்ட **[A], [B], [C], [D]** மற்றும் **[E]** ஆகியவைகளின் மொத்த எண்ணிக்கையானது, வினாத் தொகுப்பில் அச்சிடப்பட்ட மொத்த கேள்விகளின் எண்ணிக்கைக்கு சமமாக இருக்க வேண்டும்.


There shall be no question for which none of the answer bubbles remains unshaded. In case none of the answer bubbles is shaded, for any question(s), the answer sheet shall be invalidated.Option **[E]** should be shaded if the answer is not known to the candidate. The total number of [A]s, [B]s, [C]s, [D]s and [E]s shaded as answers should be written in the boxes and the corresponding bubbles should be shaded by the candidates against Section III of Part II of the OMR answer sheet. The total number of [A]s + [B]s + [C]s + [D]s + [E]s shaded should be equal to the total number of questions printed in the question booklet.

[2] **[**OMR விடைத்தாளின் பகுதி –II இன் பிரிவு – III (a) மற்றும் பிரிவு III(b) நிரப்புவதற்கான சரியான முறை கீழே விளக்கப்பட்டுள்ளது.

எ.கா. OMR விடைத்தாளின் பகுதி – I ல் 36 As விடைகளாக நிரப்பப்பட்டிருந்தால், பிரிவு – III (a) இல் வழங்கப்பட்ட கட்டங்களில் 036 என எழுத வேண்டும் மற்றும் பிரிவு – III (b) இல் அதற்குரிய வட்டங்களில் 0, 3 மற்றும் 6 கீழே விளக்கப்பட்டுள்ளபடி நிரப்ப வேண்டும்.

The correct method of writing & shading in section – III(a) & section III(b) of the Part – II of OMR Answer Sheet illustrated below:

For eg., 36 **A**s are shaded as answers in Response portion, then 036 shall be written in the boxes provided in Section – III (a) and the corresponding bubbles 0,3 and 6 should be shaded in Section – III (b) as illustrated below:**]**[2]




(xvi) **தேர்வர்களால் OMR விடைத்தாளின் பிரிவு - III (b) ல் நிரப்பப்பட்ட [A], [B], [C], [D] மற்றும் [E] ஆகியவைகளின் எண்ணிக்கையை தேர்வு அறையின் கண்காணிப்பாளர் OMRவிடைத்தாளின் பகுதி2-இன் பிரிவு IV-ல் நிரப்ப வேண்டும். தேர்வு முடிவடைந்த பின்னர், தேர்வறையின் கண்காணிப்பாளர் மற்றும் தேர்வர் ஆகிய இருவரும் மேற்குறிப்பிட்ட பதிவிற்கு கீழே கையொப்பமிட வேண்டும்.**

The room invigilator shall fill in Section IV of Part II, the number of As, Bs, Cs, Ds and Es, as shaded by the candidate in Section III (b) of the OMR answer sheet. Both the invigilator and the candidate must sign below this entry after the examination is over.

---

2. Incorporated vide Commission's orders dated 28.04.2022

(xvii) **தேர்வு முடிவடைந்த பின்னர், விடைத்தாளில் இந்த விவரங்களை நிரப்புவதற்காக தனியே கூடுதல் நேரமாக 15 நிமிடங்கள் தேர்வர்களுக்கு வழங்கப்படும்.**

Fifteen minutes extra time shall be given after the examination exclusively for this activity.

(xviii) **இந்த நடைமுறைகள் முடிவடைந்த பின்னரே தேர்வர் தேர்வறையை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்படுவார்.**

Only upon completion of these procedures, candidates shall be permitted to leave the examination room.

(xix) **[4][விண்ணப்பதாரரது ஒரு பாடத்தாளிற்கான OMR விடைத்தாள் மதிப்பீடு செய்ய தகுதியற்றது எனக் கருதப்படுவதாக அறிவிக்கப்படுமாயின், விண்ணப்பதாரரது அத்தேர்விற்கான மீதமுள்ள பாடத்தாள்களின் OMR விடைத்தாள்களும் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.**

If an OMR answer sheet of a candidate for one paper is declared deemed not fit for valuation, the OMR answer sheets of the candidate for the remaining papers will not be evaluated**]**[4].

**17-C.** **<u>விரிந்துரைக்கும் வகைத் தேர்வுகள்</u>**
**<u>Descriptive Type Examination</u>**

(i) **தேர்வர்கள், தேர்வு அறைக்கு கருப்புமை பேனா (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா), அனுமதிச்சீட்டு மற்றும் குறிப்பிடப்பட்ட அடையாள சான்றாவணங்களில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகல் ஆகியவை மட்டுமே எடுத்துவர அனுமதிக்கப்படுவர். மற்ற பொருட்களுக்கு அனுமதி இல்லை.**

Candidates must carry only black ink pen (Fountain pen or Ball point pen or Gel pen), a photocopy of any one proof of ID, as specified and memorandum of admission (hall ticket) inside the examination room. Other materials are not allowed.

---

4. Incorporated vide Commission's orders dated 10.08.2022

(ii) **விரிந்துரைக்கும் வகைத் தேர்வுகளில், தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வினாக்களுடன் கூடிய விடைத்தாள் தொகுப்பு மற்றும் அதனை நிரப்புவது தொடர்பான அறிவுரைகள் வழங்கப்படும்.**

In respect of descriptive type examination, the question-cum-answer booklet as well as instructions regarding filling up of the same, shall be given fifteen minutes before the time scheduled for the commencement of the examination.

(iii) **விண்ணப்பதாரர் வருகைத்தாளில் தனது, பெயர், பதிவெண் உள்ளதை உறுதி செய்து, தன்னுடைய வினாக்களுடன் கூடிய விடைத்தாள் தொகுப்பு எண்ணையும் குறிப்பிட்டு, கையொப்பத்தினை இடவேண்டும்.**

Candidates must sign in the attendance sheet, after verifying his name and register number therein, duly mentioning the question-cum-answer booklet number.

(iv) **வினாஎண் மற்றும் அதில் எழுதப்பட்ட விடைகள் அல்லது வினா மற்றும் எழுதப்பட்ட விடை தொடர்பற்றதாக இருந்தாலும் அல்லது விண்ணப்பதாரர் வினா எண்ணில் ஏதேனும் திருத்தம் செய்து இருந்தாலும் அந்த விடை திருத்தப்பட மாட்டாது .**

In cases where the question number andthe answer written therein or the question and answer written therein do not correspond to each other or the candidate makes any modification in the question number, such an answer shall not be evaluated.

(v) **விண்ணப்பதாரர், குறிப்பிட்டு அனுமதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது வினாத் தொகுப்பின் அறிவுரைகளில் கூறப்பட்டிருந்தாலோ ஆலிவர் மற்றும் பாயிட் (Oliver and Boyd)எழுதிய கிளார்க்ஸ் டேபிள், சேஷாத்திரியின் நிலையான இயற்பியல் கையேடு மற்றும் கணித அட்டவணை(Hand Book of Physical Constants and Mathematical Tables)ஆகியவைகளை உபயோகப்படுத்தலாம். மேலும், விரிந்துரைக்கும் வகைத் தேர்வுகளுக்கு மின்கலத்தால் இயக்கப்படும் சிறிய கணிப்புக் கருவிகளையும் (battery-operated**

**simple calculator)** மற்றும் பொறியியல் பாடத் தேர்வுக்கு **advanced scientific calculator** கருவியையும் உபயோகப்படுத்தலாம்.

Candidates may use 'Clarks Table' by Oliver and Boyd and Handbook of Physical Constants and Mathematical Tables by Seshadri, only if such materials are specifically permitted or an instruction to this effect is incorporated in the question booklet. Candidates are allowed to use battery-operated simple calculators for answering papers of descriptive type and to use the advanced scientific calculators in case of examination in engineering subjects.

(vi) **[4][விண்ணப்பதாரரது ஒரு பாடத்தாளுக்கான விடைப்புத்தகம் மதிப்பீடு செய்ய தகுதியற்றது என கருதப்படுவதாக அறிவிக்கப்படுமாயின், விண்ணப்பதாரரது அத்தேர்விற்கான மீதமுள்ள பாடத்தாள்களின் விடைப்புத்தகங்களும் செல்லாதவையாகக் கருதப்படும் / மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாது.**

If an answer booklet of a candidate for one paper is declared deemed not fit for valuation, the answer booklets of the candidate for the remaining papers will also be treated as invalid / not subjected for evaluation**][4]**.

**17-D.** **<u>பிற அறிவுரைகள்</u>**
**<u>Other Instructions</u>**

(i) **தேர்வர்கள் சகதேர்வர்களிடமிருந்து எந்தப் பொருளையும் வாங்க தடை செய்யப்பட்டுள்ளது. தேர்வுக்கு குறிப்பாக அனுமதிக்கப்பட்ட பேனா மற்றும் பொருட்களைத் தாங்களே கொண்டு வந்து உபயோகிக்க வேண்டும்.**

Borrowing of any material, instruments from other candidates is strictly prohibited. Candidates shall use only their own pens and specifically permitted material.

---

4. Incorporated vide Commission's orders dated 10.08.2022.

(ii) **தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு மேல், எக்காரணத்தைக் கொண்டும் அதிகப்படியான நேரம் எடுத்துக் கொள்ள விண்ணப்பதாரர் அனுமதிக்கப்பட மாட்டார்.**

Candidates shall not be allowed to exceed the time allotted for answering the paper, for any reason.

(iii) **கொள்குறிவகைத் தேர்வுகளில் மட்டும், தேர்வு முடிவடைந்த பின்னர், விண்ணப்பதாரர் அவர்களது வினாத்தொகுப்பினை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர். விரிந்துரைக்கும் வகைத் தேர்வுகளில், வினாக்களுடன் கூடிய விடைத்தொகுப்பில் விண்ணப்பதாரர் தனது விடையினை எழுதுவர்.**

Candidates are allowed to take with them, the question booklet, in the case of objective examination, only after the examination is over. In the case of descriptive examination, the candidate is to write the answers in the question-cum-answer booklet.

(iv) **கொள்குறி வகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தேர்வு நடைபெற்ற நாளிலிருந்து [1][6 வேலைநாட்களுக்குள்] தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வாணையத்தால் வெளியிடப்படும் கொள்குறிவகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தொடர்பாக முறையீடு செய்ய வேண்டுமானால் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள 'Answer Key Challenge' என்ற சாளரத்தைப் பயன்படுத்தி முறையீடு செய்யலாம் (Results → Answer Keys).**

Tentative answer keys will be hosted in the Commission's website within [1][six working days] from the date of conduct of objective type examination. Candidates can challenge the tentative answer keys of the objective type examination through the 'Answer Key Challenge' window available in the Commission's website [Results → Answer Keys].

---

1. Amended vide Commission's orders dated 08.04.2022

(v) **உத்தேச விடைகள் தொடர்பான முறையீடு ஏதுமிருப்பின், விண்ணப்பதாரர் கொள்குறி வகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தேர்வாணையத்தால் வெளியிடப்பட்ட 7 நாட்களுக்குள், இணையவழி வாயிலாக மட்டுமே முறையீடு செய்ய வேண்டும். அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னஞ்சல் வழியாகவோ பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்பட மாட்டாது.**

Representations, if any, challenging the tentative answer keys shall be submitted only through online mode within seven days from the date of publication of tentative answer keys. Representations received by post or e-mail will receive no attention.

(vi) **உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்கான அறிவுரைகள் மற்றும் வழிமுறைகள் தேர்வாணைய இணையதளத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. மேலும், முறையீடு செய்ய (இணையவழி மூலமாகவோ அல்லது வேறு வழியாகவோ) வழங்கப்பட்டுள்ள காலஅவகாசம் முடிவுற்ற நிலையில் பெறப்படும் எவ்வித முறையீடுகளும் பரிசீலிக்கப்பட மாட்டாது.**

Detailed instructions, procedures to challenge the tentative answer keys have been made available in the Commission's website. Representations made online/offline after the closure of the window will also receive no attention.

(vii) **இணையவழியில் உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்கு, உரியநேரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளானது, ஒவ்வொரு பாடத்திற்கான வல்லுநர்களை கொண்ட குழுவிற்கு பரிந்துரைக்கப்படும். மேலும், வல்லுநர்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இறுதியான விடைகள் முடிவு செய்யப்பட்டு, அதன் பின்னர் விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணியானது தொடங்கப்படும்.**

The challenges submitted on time, through the online mode, shall be referred to a committee comprising of experts in each subject. The decision on the final answer key shall be made, based on the recommendations of the expert committee and paper evaluation shall commence thereafter.

(viii) **தெரிவுப்பணிகள் முழுமையாக முடிவடையும் வரை, தேர்வு தொடர்பான இறுதி விடைகளை தேர்வாணையம் வெளியிடாது.**

The Commission shall not publish the final answer key until the completion of the entire selection process.

(ix) **விரிந்துரைக்கும் வகைத் தேர்வுகளுக்கான விடைகள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட மாட்டாது.**

Answer keys will not be hosted in the Commission’s website, for the descriptive type examination.

(x) **ஒரு பதவிக்கான தெரிவுப் பணிகள் முற்றிலுமாக முடியும் முன்னர், தங்களது மதிப்பெண் அல்லது விடைத்தாள்/ விடைப்புத்தகம் நகல் அளிக்குமாறு கோரும் விண்ணப்பதாரரின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.**

Requests from candidates for furnishing of their marks or answer paper copy before the completion of the entire selection process, will not be entertained by the Commission.

(xi) **தேர்வு நடவடிக்கைகள் முழுவதும் நிறைவடைந்த பின்னர், தேர்வர்களின் OMR விடைத்தாள் மற்றும் விரிந்துரைக்கும் வகைத்தேர்வு விடைப்புத்தகம் ஆகியவை தேர்வாணைய இணையதளத்தில் கிடைக்கப் பெறும். உரிய கட்டணம் செலுத்தி தேர்வர்கள் அவர்களது விடைத்தாள்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

After conclusion of the entire selection process, copies of OMR answer sheet / descriptive-type answer booklet shall be made available to the candidates in the Commission’s website. On requisite payment, the candidates can automatically download the answer papers.

(xii) **தேர்வு நடைமுறைகள் முழுவதும் நிறைவடைந்த பின்னர், அத்தேர்வுக்கு விண்ணப்பித்த அனைத்து விண்ணப்பதாரரின் தொடர்புடைய விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்.**

After conclusion of the entire selection process, relevant particulars of all candidates who had applied for recruitment to the post shall be made available on the Commission's website.

## 17-E. கொள்குறி வகைத் தேர்வுகளில் தேர்வாணைய அறிவுரைகளை மீறுதலுக்கான தண்டனை

## Penalty for Violation of Commission's Instructions in the Objective Type Examination

**கீழ்க்கண்ட விதிமுறை மீறல்களுக்காக விண்ணப்பதாரரின் விடைத்தாள்கள் செல்லாததாக்கப்படும் / மதிப்பெண் குறைக்கப்படும் / குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்/ விடைத்தாள்கள் செல்லாததாக்கப்பட்டு தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர்:**

The answer sheets of the candidate will be invalidated / marks deducted / criminal action initiated / answer sheets will be invalidated and debarment imposed for the following violations:

(i) **<u>விடைத்தாள் செல்லாததாக்கப்படுதல்</u>**
**<u>Invalidation of Answer Sheet</u>**

(a) **கருமைநிற மை கொண்ட பந்துமுனைப் பேனாவை (Ball Point Pen) தவிர வேறு பேனா உபயோகப்படுத்துவது**

Usage of any pen other than black ball point pen.

(b) **பென்சில் கொண்டு விடைகள் நிரப்பப்படுவது**

Usage of pencil.

(c) **விண்ணப்பதாரர் அவர்களின் இணையவழி விண்ணப்பத்தில் தேர்ந்தெடுத்துள்ள அல்லது அவருடைய அனுமதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பப்பாடத்தில் தேர்வு எழுதாமல் வேறுபாடத்தில் மாற்றித்தேர்வு எழுதுவது.**

Answered in a subject other than the one opted for in the online application / specified in the memorandum of admission (hall ticket).

(d) **சுயவிவரங்கள் கொண்ட OMR விடைத்தாளாக இல்லாத பட்சத்தில், அவ்விடைத்தாளில், பதிவு எண் எழுதுவதற்கென கொடுக்கப்பட்டுள்ள இடத்தில், பதிவு எண் எழுதப்படாமல் விடுபட்டிருந்தால்.**

In case of non-personalized OMR answer sheet, if the register number is not written in the space provided for it.

(e) **OMR விடைத்தாளின் 2ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சரியான முறைப்படி, விடைகளை நிரப்பாமல் இருத்தல்.**

The answers are not shaded as per the correct method illustrated on page 2 of the OMR answer sheet.

(f) **OMR விடைத்தாளின் 1-ம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக் குறியீடு / OMR-டிராக் (Barcode/ OMR - Track) சேதப்படுத்தப்பட்டிருத்தல்.**

If the Barcode / OMR-track printed on page 1 of the OMR answer sheet is tampered with.

(g) **OMR விடைத்தாளில் தேர்வர் கையொப்பமிடாத நேர்வுகளில்**

OMR answer sheet is not signed by the candidate at all required places.

(h) **OMR விடைத்தாளில் தேவையான விவரங்கள் நிரப்பப்படாமை.**

Required particulars in the OMR answer sheet have not been filled up.

(i) **பிற தேர்வர்களின் இருக்கையில் தவறாக அமர்ந்து தேர்வு எழுதுதல் / பிற தேர்வர்களின் OMR விடைத்தாளினைப் பயன்படுத்துவது.**

Wrongly seated in the place of other candidates and/or written the examination using the OMR answer sheet of other candidates.

(j) **அடையாளத்தை வெளிப்படுத்தும் எவ்வித பொருத்தமற்ற / முக்கியமற்ற கருத்துரைகள் OMR விடைத்தாளில் காணப்பட்டால்.**

If any irrelevant / impertinent remarks amounting to disclosure of identity is found in the OMR answer sheet upon physical verification.

(k) **வினாத் தொகுப்பு எண்ணிற்கான வட்டங்களை நிரப்பாமல் விட்டிருத்தல்**

If the bubbles for Question Booklet Number are not shaded

(l) **வினாத்தொகுப்பு எண்ணிற்கான வட்டங்களை நிரப்புவதற்காக OMR விடைத்தாளின் பிரிவு-II-ன் பகுதி-II-ல் கொடுக்கப்பட்டுள்ள வட்டங்களில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களோ நிரப்பப்படாமல் விடப்பட்டிருந்தால்**

Even if one or more bubble / bubbles of Question Booklet Number are left blank (not shaded) in the space provided in Section-II of part-II of OMR answer sheet

(m) **வினாத் தொகுப்பு எண்களை நிரப்புவதற்கு வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு நெடுவரிசையிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட வட்டங்கள் நிரப்பப்பட்டிருந்தால்**

If more than one bubble / bubbles is shaded in space provided for bubbles of Question Booklet Number in each column **(Multiple Shading)**

(n) **வினாத் தொகுப்பிற்கான எண்கள் குறிப்பிடப்படவேண்டிய வட்டங்களில் வினாத் தொகுப்பிற்கான சரியான எண்களை குறிப்பிடாமல் வினாத் தொகுப்பில் அச்சிடப்படாத வேறு எண்களை வினாத்தொகுப்பிற்கான வட்டங்களில் நிரப்பப்பட்டிருந்தால்**

Question Booklet Number shaded in bubbles provided for Question Booklet Number by the candidate is out of question booklet number series printed [Not in range of QB series]

---


Amended vide Commission's Orders dated : 26.06.2023
Amended vide Commission's Orders dated : 03.07.2023

(o) OMR விடைத்தாளின் பகுதி-I அல்லது பகுதி-II அல்லது இரண்டும் குறுக்கு கோடிட்டு அடிக்கப்பட்டிருந்தால்.

உதாரணத்திற்கு: OMR தாள்



If either Part-I or Part-II or both of OMR Answer Sheet is crossed out. **For Example: OMR Sheet**



(ii) **<u>மதிப்பெண் குறைத்தல்</u>**

**<u>Deduction of Marks</u>**

(a) சுயவிவரங்கள் கொண்ட **OMR** விடைத்தாளாக இல்லாத பட்சத்தில், அவ்விடைத்தாளில், விண்ணப்பதாரரின் பதிவு எண் தவறாக நிரப்பப்பட்டிருந்தால் இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

In case of non-personalised OMR answer sheet, two marks will be deducted for writing the register number incorrectly.

(b) தேர்வரால், OMR விடைத்தாளின் பகுதி – II – இல் குறிப்பிடப்பட்டுள்ள [A], [B], [C], [D] மற்றும் [E] ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை தவறாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலோ / நிரப்பப்படாமல் விட்டிருந்தாலோ / தவறாக நிரப்பப்பட்டிருந்தாலோ, தேர்வரால் பெறப்பட்ட மொத்த மதிப்பெண்களிலிருந்து இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

In case number of [As], [Bs], [Cs], [Ds] and [Es] count wrongly mentioned / not shaded / incorrectly shaded by the candidate in the Part – II of the OMR Answer Sheet, two marks will be deducted from the total marks obtained by the candidate.

(c) **OMR** விடைத்தாளில், எந்தவொரு வினாவிற்கும், அது தொடர்பான எந்த ஒரு வட்டமும் நிரப்பப்படாதிருந்தால், தேர்வரால் பெறப்பட்ட மொத்த மதிப்பெண்களிலிருந்து இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

None of the answer bubbles is shaded for even one question by the candidate, two marks will be deducted from the total marks obtained by the candidate.

(d) **தேர்வரின் இடது கட்டை விரல் ரேகைப் பதிவு OMR விடைத் தாளின் விடையளிக்கப்பட்ட பகுதியில் பெறப்படாத நேர்வுகளில், பெறப்பட்ட மொத்த மதிப்பெண்களிலிருந்து இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.**

In case of absence of Candidates left thumb impression in answered portion of the OMR answer sheet, two marks will be deducted from the total marks obtained by the candidate.

(e) வினாத்தொகுப்பு எண்கள் எழுதுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வினாத்தொகுப்பு எண் எழுதப்படாமலோ அல்லது பகுதியளவு எழுதப்பட்டிருந்தால், விண்ணப்பதாரர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்ணிலிருந்து ஐந்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

If the Question Booklet Number is not written or partially written in the space provided, five marks will be deducted from the total marks obtained by the candidates.

(Amended vide Commission’s Orders dated : 03.07.2023 )

(iii) **குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளுதல்**

**Initiation of Criminal Action**

(a) **தேர்வுக்கூடத்தில் விண்ணப்பதாரரின் தவறான நடத்தை மற்றும் ஒழுங்கீனச் செயல்களுக்கு குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் (பொது அறிவுரைகள் பத்தி 17[A](xv)பார்க்கவும்).**

Misbehaviour and indiscipline in the examination hall.
(Refer para 17[A](xv) of General Instructions)

(b) **ஆள்மாறாட்டம் மற்றும் தேர்வு கூடத்திற்குள் அல்லது வெளியே விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுவது உள்ளிட்ட எவ்வித முறைகேட்டிலும் ஈடுபடும் பட்சத்தில், குற்றவியல் நடவடிக்கை**

**எடுப்பதுடன் தேர்வாணையத்தால் தக்கதென கருதப்படும் காலம்வரையில் தேர்வு எழுதுவதிலிருந்து விண்ணப்பதாரர் விலக்கி வைக்கப்படுவர்.**

Indulging in any type of malpractice, including impersonation and resorting to unfair means within the examination hall or outside will lead to debarment for any period deemed fit by the Commission, besides initiation of criminal action.

(iv) **<u>விடைத்தாள் செல்லாததாக்கப்படுதல் மற்றும் தகுதியற்றவராக்குதல்</u>**

**<u>Invalidation of Answer Sheet and Debarment</u>**

**கீழ்க்கண்ட நடவடிக்கைகள் உட்பட, தேர்வுமையத்திலோ அல்லது வெளியிலோ விண்ணப்பதாரர் ஈடுபடும் விரும்பத்தகாத அல்லது ஒழுங்கீனச் செயல்களுக்கு அல்லது தீய நடவடிக்கைகளுக்கு விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன், தேர்வாணையம் தக்கதெனக் கருதும் காலம் வரை தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர்.**

Invalidation of answer sheet as well as debarment for such period as the Commission may deem fit will be imposed on candidates resorting to any kind of irregularity or malpractice within / outside the examination hall including:

(a) **தேர்வுக்கூடத்தில் மற்ற விண்ணப்பதாரரின் விடைத்தாளைப் பார்த்து எழுதுவது / மற்ற விண்ணப்பதாரருடன் கலந்தாலோசிப்பது**

Consulting with / copying from another candidate in the examination hall.

(b) **தன்னுடைய OMR விடைத்தாளைப் பார்த்து எழுத மற்ற விண்ணப்பதாரரை அனுமதித்தல்.**

Permitting others to copy from his OMR answer sheet.

(c) **புத்தகம் அல்லது அச்சிடப்பட்ட / தட்டச்சு செய்யப்பட்ட மற்றும் கையால் எழுதப்பட்ட குறிப்புகள் ஆகியவற்றைப் பார்த்து எழுதுதல்.**

Copying from books or notes which are printed / typewritten / handwritten.

(d) **தேர்வுக்கூடத்தில் விண்ணப்பதாரர் வினாக்களுக்கான விடைகள் தொடர்பாக, அறைகண்காணிப்பாளரையோ அல்லது வேறு அலுவலரின் உதவியையோ நாடுதல்.**

Seeking the help / assistance of any official / hall supervisor in answering questions in examination hall.

(e) **அலைபேசி (செல்லுலார்போன்), நினைவூட்டுகுறிப்புகள் அடங்கிய கைக்கடிகாரங்கள் மற்றும் மோதிரங்கள், அல்லது வேறு வகை மின்னணு / மின்னணு சாராத சாதனங்களான P & G Design Data Book, புத்தகம், குறிப்புகள், கைப்பைகள் ஆகியவற்றை விண்ணப்பதாரர் தேர்வுக்கூடத்திற்குள் வைத்திருப்பது.**

Possession of electronic devices such as cellular phones, watches and rings with in-built memory notes, Bluetooth devices, communication chip, other electronic devices and non-electronic devices such as P&G Design Data Book, books, notes, handbags, other non-permitted materials, etc.

(f) **தேர்வுக்கூடத்திலிருந்து பயன்படுத்தப்பட்ட / பயன்படுத்தப்படாத OMR விடைத்தாளினை முழுமையாகவோ / பகுதியாகவோ அறைக்கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்காமல் எடுத்துச் செல்லுதல்.**

Taking away from the examination hall, the whole or part of any used / unused OMR answer sheet, without handing it over to the room invigilator.

(g) **OMR விடைத்தாளின் 1-ம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக்குறியீடு / OMR-டிராக் (Barcode/ OMR- track) சேதப்படுத்தப்பட்டிருத்தல்.**

Tampering with the Barcode / OMR-track printed on page 1 of the OMR answer sheet.

**17-F.** **விரிந்துரைக்கும் வகைத் தேர்வில் தேர்வாணைய அறிவுரைகளை மீறுதலுக்கான தண்டனைகள்**

**Penalty for Violation of Commission's Instructions in the Descriptive Type Examination**

கீழ்க்கண்ட விதிமுறை மீறல்களுக்காக விண்ணப்பதாரரின் விடைப்புத்தகம் செல்லாததாக்கப்படும் / மதிப்பெண் குறைக்கப்படும் / குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் / விடைப்புத்தகம் செல்லாததாக்கப்பட்டு தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர்:

The answer booklets of the candidate will be invalidated / marks deducted / criminal action initiated / answer booklets will be invalidated and debarment imposed for the following violations:

(i) **விடைப்புத்தகம் செல்லாததாக்கப்படுதல்**
**Invalidation of Answer Booklet**

(a) **விண்ணப்பதாரர் கருமை நிற மை கொண்ட பேனாக்களை தவிர மற்ற பேனாக்களை உபயோகித்தல்**. விண்ணப்பதாரர் விடைப்புத்தகம் முழுவதும், அதாவது தேர்வு எண்ணை எழுதுதல், முதல் பக்கத்தில் கையொப்பமிடுதல், விடை எழுதுதல், படம் வரைதல், அடிக்கோடிடுதல், மேற்கோள் காட்டுதல் விடைப்புத்தகத்தில் பயன்படுத்தாத இடங்களை/ தேவையான எண்ணிக்கைக்கு அதிகமான விடைகளை அடித்தல் **(Strike-off),** போன்றவற்றுக்கு ஒரேவகையான கருப்புநிற மை பேனாவை (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா), மட்டுமே உபயோகிக்க வேண்டும். விண்ணப்பதாரர் மேற்கூறிய தேவைகளுக்கு, ஒரேவகை கொண்ட கருப்புநிற மை பேனாக்களை போதுமான எண்ணிக்கையில் வைத்திருக்க வேண்டும்.

**Usage of pens other than black ink pens**. The candidate shall use the same black ink pen (Fountain pen or Ball point pen or Gel pen) in the entire answer booklet for all purposes including writing the register number, signing on the first

page, answering, drawing, underlining, highlighting, striking off unused space in the answer booklet, striking off answers in excess of the number required, etc. For this purpose, candidates should keep sufficient number of additional black ink pens of same type, with same colour and shade of ink.

(b) விண்ணப்பதாரர் தேர்வு எழுதும்போது **whitener, sketch pens,** பென்சில், வண்ணப் பென்சில்கள், வண்ண மைபேனா, **crayons** போன்றவைகளை உபயோகப்படுத்துதல்.

Usage of whitener, sketch pens, pencil, colour pencils, multi-colour pens, crayons or any other writing materials, for any purpose.

(c) விடைப்புத்தகத்தில் பதிவு எண் எழுதுவதற்கென கொடுக்கப்பட்டுள்ள இடத்தில், பதிவு எண் எழுதப்படாமல் விடுபட்டிருந்தாலோ, விடைப்புத்தகத்தில் பதிவெண்ணிற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர வேறு இடங்களில் பதிவெண்ணை எழுதுதல்.

Failure to write the Register Number in the space provided for it, in the answer booklet. Writing their register number in places other than the space specified, in the answer booklet.

(d) வினாத்தொகுப்பு / விடைப்புத்தகத்தில் குறிப்பாக அறிவுறுத்தப்பட்ட இடங்களில் தவிர பெயர் மற்ற விவரங்களை மற்ற இடங்களில் மதக் குறியீட்டினை எழுதுதல், விண்ணப்பதாரரின் பெயர் எழுதுதல், கையொப்பம், தொலைபேசி எண், அலைபேசி எண் **(Cell Phone No.)**, வேறு ஏதேனும் பெயர்களை எழுதுதல், சுருக்கொப்பம், அல்லது முகவரி ஆகியவற்றை எழுதுதல்.

Writing religious symbols, writing their name, signature, phone number, cell phone number, initials, address and writing any other name, initial or address in the answer booklet except in the manner instructed in the question-cum-answer booklet.

(e) விண்ணப்பதாரர் தன்னுடைய தேர்ச்சி தொடர்பாக விடைப்புத்தகத்தில் தேர்வாளரின் பரிவைத் தூண்டும் வகையில் எழுதுதல்.

Appealing to the examiner in the answer booklet, invoking sympathy of examiners in connection with their results.

(f) விண்ணப்பதாரர் கேள்விக்கு தொடர்பில்லாத அல்லது தேர்வுக்கு சம்பந்தமில்லாத ஏதாவது கருத்துக்கள் மற்றும் பொருத்தமில்லாதவற்றை தனது அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் எழுதுவது.

Candidates writing anything unconnected to the question, or any impertinent remarks and irrelevant matter revealing his identity.

(g) குறிப்பிட்டு அனுமதிக்கப்பட்ட நிகழ்வுகளைத் தவிர, விண்ணப்பதாரர் ஒருபகுதி ஆங்கிலத்திலும் மற்றொரு பகுதி தமிழிலும் விடை எழுதுவது. விண்ணப்பதாரர் தமிழில் விடை எழுதினால், அத்தேர்வில் எல்லா விடைகளையும் தமிழில் மட்டுமே எழுத வேண்டும் அல்லது ஆங்கிலத்தில் எழுதினால், எல்லா விடைகளையும் ஆங்கிலத்தில் மட்டுமே எழுத வேண்டும். **எனினும்**, மொழிபெயர்க்க இயலாத தொழில்நுட்ப வார்த்தைகள் **(Technical words)** அந்தந்த மொழியில் உள்ளவாறே எழுதலாம், மாறாக வாக்கியம் முழுவதும் / விடை முழுவதும் மொழி மாற்றி எழுதக் கூடாது. இவ்வறிவுரையை மீறும் விண்ணப்பதாரரின் விடைப்புத்தகம் செல்லாததாக்கப்படும்.

Writing the answers in more than one language (i.e., partly in Tamil and partly in English) except in cases where specifically permitted. If the candidates answer in Tamil, they should write the entire examination in Tamil only or if the candidates answer in English, they should write the entire examination in English only. However, technical words which cannot be translated, can be written in the respective languages, i.e., only the technical words and not the entire sentence / entire answers. The answer booklet of the candidate who violates this instruction will be invalidated.

(h) பிறதேர்வர்களின் இருக்கையில் தவறாக அமர்ந்து தேர்வு எழுதுதல் / பிற தேர்வர்களின் விடைப்புத்தகத்தைப் பயன்படுத்துவது.

Wrongly seated in the place of other candidates and/or written the examination using the answer booklet of other candidates.

(i) வினாக்களுடன் கூடிய விடைப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக்குறியீடு சேதப்படுத்தப் பட்டிருத்தல்.

Tampering with the Barcode printed on the question-cum-answer booklet.

(ii) **மதிப்பெண் குறைத்தல்**
**Deduction of Marks**

விடைப்புத்தகத்தில் பதிவு எண் எழுதுவதற்கென கொடுக்கப்பட்டுள்ள இடத்தில், பதிவுஎண் தவறாக எழுதப்பட்டிருந்தால், இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

A reduction of two marks will be made for writing Register Number incorrectly in the space provided for it, in the answer booklet.

(iii) **குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளுதல்**

**Initiation of Criminal Action**

(a) தேர்வுக்கூடத்தில் விண்ணப்பதாரரின் தவறான நடத்தை மற்றும் ஒழுங்கீனச் செயல்களுக்குக் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் (பொதுஅறிவுரைகள் பத்தி **17[A](xv)**பார்க்கவும்).

Misbehaviour and indiscipline in the examination hall.
(Refer para 17(A)(xv) of General Instructions)

(b) ஆள்மாறாட்டம் மற்றும் தேர்வுக்கூடத்திற்குள் அல்லது வெளியே விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுவது உள்ளிட்ட எவ்வித முறைகேட்டிலும் ஈடுபடும் பட்சத்தில் குற்றவியல் நடவடிக்கை எடுப்பதுடன் தேர்வாணையத்தால் தக்கதெனக் கருதப்படும்

காலம்வரையில் தேர்வு எழுதுவதிலிருந்து விண்ணப்பதாரர் விலக்கி வைக்கப்படுவார்.

Indulging in any type of malpractice, including impersonation and resorting to unfair means within the examination hall or outside will lead to debarment for any period deemed fit by the Commission, besides initiation of criminal action.

(iv) **<u>விடைப்புத்தகம் செல்லாததாக்கப்படுதல் மற்றும் தகுதியற்றவராக்குதல்</u>**

**<u>Invalidation of Answer Booklet and Debarment</u>**

**கீழ்க்காணும் நடவடிக்கைகள் உட்பட**, தேர்வு மையத்தி**லோ** அல்லது வெளியி**லோ** விண்ணப்பதாரர் ஈடுபடும் விரும்பத்தகாத அல்லது ஒழுங்கீனச் செயல்களுக்கு அல்லது தீய நடவடிக்கைகளுக்கு **விடைப்புத்தகம் செல்லாததாக்கப்படுவதுடன்**, தேர்வாணையம் தக்கதெனக் கருதும்காலம் வரைதேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவார்.

Invalidation of answer booklet as well as debarment for such period as the Commission may deem fit will be imposed on candidates resorting to any kind of irregularity or malpractice within / outside the examination hall including:

(a) தேர்வுக்கூடத்தில் மற்ற விண்ணப்பதாரரின் விடைப்புத்தகத்தைப் பார்த்து எழுதுவது.

Copying from another candidate in the examination hall.

(b) தன்னுடைய விடைப் புத்தகத்தைப் பார்த்து எழுத, மற்ற விண்ணப்பதாரர்களை அனுமதித்தல்.

Permitting others to copy from his answer booklet.

(c) புத்தகம் அல்லது அச்சிடப்பட்ட / தட்டச்சு செய்யப்பட்ட மற்றும் கையால் எழுதப்பட்ட குறிப்புகள் ஆகியவற்றைப் பார்த்து எழுதுதல்

Copying from books or notes which are printed / typewritten / handwritten.

(d) **தேர்வுக்கூடத்தில் விண்ணப்பதாரர் வினாக்களுக்கான விடைகள் தொடர்பாக, அறைக்கண்காணிப்பாளரையோ அல்லது வேறு அலுவலரின் உதவியையோ நாடுதல்.**

Seeking the help / assistance of any official / hall supervisor in answering questions in examination hall.

(e) **விண்ணப்பதாரர், தேர்வாளரை அணுகுதல் அல்லது அதற்கு முயற்சி செய்தல் அல்லது மற்றவர் மூலம் தேர்வாளரை அணுகுதல்.**

Approaching or attempting to approach an examiner or getting other people to approach an examiner on his behalf.

(f) **அலைபேசி (செல்லுலார்போன்), நினைவூட்டுக் குறிப்புகள் அடங்கிய கைக்கடிகாரங்கள் மற்றும் மோதிரங்கள் அல்லது வேறுவகை மின்னணு / மின்னணு சாராத சாதனங்களான P & G Design Data Book, புத்தகம், குறிப்புகள், கைப்பைகள் ஆகியவற்றை விண்ணப்பதாரர் தேர்வு அறைக்குள் வைத்திருத்தல்.**

Possession of electronic devices such as cellular phones, watches and rings with in-built memory notes, Bluetooth devices, communication chip, other electronic devices and non-electronic devices such as P&G Design Data Book, books, notes, handbags, other non-permitted materials, etc.

(g) **தேர்வுக்கூடத்திலிருந்து பயன்படுத்தப்பட்ட / பயன்படுத்தப்படாத விடைப்புத்தகத்தினை முழுமையாகவோ / பகுதியாகவோ அறைக்கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்காமல் எடுத்துச் செல்லுதல்.**

Taking away from the examination hall, the whole or part of any used / unused answer booklet, without handing it over to the room invigilator.

(h) **வினாக்களுடன் கூடிய விடைப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக் குறியீடு சேதப்படுத்தப்பட்டிருத்தல்.**

Tampering with the Barcode printed on the question-cum-answer booklet.

## 18. <u>தெரிவு முறை</u>
## <u>SELECTION PROCEDURE</u>

### 18-A. <u>முதல்நிலைத் தேர்வு, முதன்மை எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவு நடத்தப்படும் பதவிகளுக்கான தெரிவு முறை</u>

**<u>Procedure of Selection to Posts for which Selection is made on the basis of a Preliminary Examination, Main Written Examination and Oral Test</u>**

(i) முதனிலைத் தேர்வு என்பது விண்ணப்பதாரரை முதன்மை எழுத்துத் தேர்வுக்குத் தெரிவு செய்துஅனுமதிக்க நடத்தப்படும் ஒரு தேர்வாகும். முதன்மை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்க தகுதியானவராக அறிவிக்கப்படும் விண்ணப்பதாரர், முதனிலைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், அவரது இறுதித் தகுதியினை நிர்ணயிக்கக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

The preliminary examination is meant to serve as a screening test only. The marks obtained in the preliminary examination by the candidates who are declared qualified for admission to the main written examination will not be counted for determining their final order of merit.

(ii) இணையவழிச் சான்றிதழ் சரிபார்ப்பிற்குப் பின்னரே முதன்மை எழுத்துத் தேர்விற்குத் தகுதியுடைய விண்ணப்பதாரர் அனுமதிக்கப்படுவர்.

Admission to the main written examination is preceded by online certificate verification.

(iii) ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–I பொறுத்தமட்டில், முதன்மை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரரின் எண்ணிக்கையானது, ஒவ்வொரு பதவிக்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய விண்ணப்பதாரரின் எண்ணிக்கையைபோல இருபது மடங்கு இருக்கும். ஏனையத் தேர்வுகளைப் பொறுத்தமட்டில், முதன்மை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரரின் எண்ணிக்கையானது,

ஒவ்வொரு பதவிக்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய விண்ணப்பதாரரின் எண்ணிக்கையை போல பத்து மடங்கு இருக்கும்.

The number of candidates to be admitted to the main written examination will be twenty times the number of candidates to be recruited to each of the posts in the case of Combined Civil Services Examination-I. In the case of other examinations, the number of candidates to be admitted to the main written examination will be ten times the number of candidates to be recruited to each post.

(iv) தேர்வாணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரம் தவிர, முதன்மை எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரரின் எண்ணிக்கையானது, நியமன ஒதுக்கீட்டு விதிகளுக்கும் உட்பட்டதாகும். எனினும், நியமன ஒதுக்கீட்டுக்குரிய ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலும், தங்களது வகுப்புப் பிரிவிற்கான கட்-ஆப் மதிப்பெண்களுக்கு சமமான மதிப்பெண்களைப் பெறும் அனைத்து விண்ணப்பதாரரும் முதன்மை எழுத்துத்தேர்விற்கு அனுமதிக்கப்படுவர், இதனால் முதன்மை எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரரின் எண்ணிக்கையானது நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தைவிட அதிகமாகலாம்.

Besides the ratio fixed by the Commission, the number of candidates to be admitted to the main written examination is also subject to the rule of reservation of appointments.However, in each reservation group, all candidates who secure marks equal to the cut-off marks of their reservation group, shall be admitted to the main written examination, though the number of candidates to be admitted to the main written examination may exceed the ratio fixed.

(v) முதன்மை எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் நியமன ஒதுக்கீட்டு விதி ஆகியவற்றின் அடிப்படையில் விண்ணப்பதாரர் மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் வாய்மொழித் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.
Based on the marks obtained in the main written examination and subject to the rule of reservation of appointments, candidates shall be admitted to original certificate verification and oral test.

(vi) ஆதிதிராவிடர், ஆதிதிராவிட - அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் ஆகிய பணியிட ஒதுக்கீட்டிற்குரிய வகுப்புப் பிரிவுகள் மற்றும் பொதுப்பிரிவுகளுள் எந்தெந்த வகுப்புப் பிரிவுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட / அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்கிறதோ, அந்தந்த வகுப்புப் பிரிவுகளில் வாய்மொழித் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரரின் எண்ணிக்கை அக்குறிப்பிட்ட வகுப்புப்பிரிவுகளில் நியமனம் செய்யப்படவுள்ள விண்ணப்பதாரரின் எண்ணிக்கையைப் போன்று இருமடங்காக இருக்கும்.

If the number of vacancies notified / reserved to be filled up by any one or more of the reservation categories [viz., Scheduled Castes, Scheduled Caste (Arunthathiyars), Scheduled Tribes, MostBackward Classes / Denotified Communities, Backward Classes (other than Muslim) or Backward Classes (Muslim) or General Turn], is five and above, the number of candidates to be admitted to the oral test from those particular reservation categories, shall be two times the number of vacancies.

(vii) நியமனத்திற்குரிய காலியிடங்கள் எந்தெந்த வகுப்புப் பிரிவுகளில் நான்கு அல்லது அதற்கும் குறைவாக உள்ளதோ, அந்தக் குறிப்பிட்ட வகுப்புப் பிரிவுகளில் வாய்மொழித்தேர்வுக்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரரின் எண்ணிக்கை, அவ்வகுப்புப் பிரிவுகளில் நியமனம் செய்யப்படவுள்ள விண்ணப்பதாரரின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்காக இருக்கும்.

If the number of vacancies notified / reserved to be filled up by any one or more of the reservation categories is four and below, the number of candidates to be admitted to the oral test from those particular reservation categories shall be three times the number of vacancies.

